## என்னுரை

இது எலிகள் கேட்டுச் சொன்ன குறள்க் கதைகள் இரண்டாம் பாகம். நாட்டில் நடைபெறும் சம்பவங்களைப் பற்றி மக்கள் கோவிலில் கதைக்க, அதைக் கேட்ட எலிகள் தமக்குள் கதைக்கின்றன. அதில் சமூக நீதி, மனிதனின் நிலைப்பாடு, தீயவர்களின் செயல்கள், கற்றவர்களின் நடத்தைகள் எனப் பலவற்றையும் பேசுகின்றனர். நான் முதல் முறையாக திருக்குறள் கதைகளை தமிழ்நாட்டில் வெளியிட்ட போது மணிமேகலை பிரசுரத்தினர், ‘‘வள்ளுவன் யாத்த வாழ்வியல் இலக்கணங்களை அடித்தளமாகக் கொண்டு கதைகள், கட்டுரைகள், இசைக்கீதங்கள், நாடகங்கள், நாட்டியங்கள், கவிதைகள் என்று பல துறைகளிலும் நூலாக்கங்கள் தோன்றிக் கொண்டேயிருத்தல் வேண்டும்’’ என்று குறிப்பிட்டனர். அதற்கிணங்க நான் திருக்குறளின் உரையை நாவலாக, உரையாக, கதையாக, இலக்கியமாக, புத்துரையாக, உரையளவு கதையாக எழுதி வெளியிட்டுள்ளேன். இந்நூல் திருக்குறளை உரையளவு கதையாக வெளியிடுகிறேன். இதில் இரண்டு எலிகள் வருகின்றன. ஒன்று கவுண்டமணி என்றும் மற்றையதை செந்தில் என்றும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்நூலைக் கணனி வடிவமைத்துத் தந்தும், அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்த செல்வி. ப.யாழினிக்கு நன்றி.

தமிழறிஞர்.

கே.வி.குணசேகரம்.

பயன்இல் சொல்லாமை - 20

191.பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்

எல்லாரும் எள்ளப் படும்.

“திருநாவுக்கரசின் காணிக்கு உருத்திரகுமாரன் பணம் கொடுத்த போதும் அவனது மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. எப்படியாவது திருநாவுக்கரசுவைப் பழி வாங்கவேண்டுமென்று நினைத்துக் கஜேந்திரனுக்குப் பணம் கொடுத்து ஏவி விட்டான். அன்று கோவிலடிக்குக் குடித்து விட்டு வந்த கஜேந்திரன் திருநாவுக்கரசுவைப் பற்றி மிகவும் கேவலமாகக் கதைத்தான். “திருநாவுக்கரசு வெளிநாட்டுக்குப் போய் கள்ள வேலைகள் பலவும் செய்து பணம் சம்பாதித்தால் நாங்கள் அவற்ரை அடிமைகளே. அப்பிடித்தான் அவர் எம்மை நடத்தப் பார்க்கிறார். இஞ்சை இருக்கும் போது தோட்டங்களிலை கூலி வேலை செய்தவர். சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டவர். அவற்ரை மனிசி பிரக்கிராசியார் வீட்டை சமைச்சது” என்று பேசிக்கொண்டிருந்தான். அவன் ஒவ்வொருவரையும் அழைத்த போதும் யாரும் அவனுக்குக் கிட்ட வரவில்லை. சிவலிங்கம் வந்து சொன்னான்,“நீ சொல்வதெல்லாம் ஊரவருக்குத் தெரியும். நாய் விற்ற பணம் குரைக்காது என்று பெரியவர்கள் சொல்வார்கள். அவர் பெரும்பணக்காரர் அவரை ஏன் மற்றவர்கள் எதிர்க்கப்போகிறார்கள். நீ பயனில்லாதவற்றைக் கதையாமல் போ. கோவிலடியில் கேவலமாகக் கதைப்பது பாவம்” என்று சொல்லும் போது துரைராசா சொன்னார், “விசரனோடை நீ ஏன் கதைக்கிறாய். அவன் உனக்கும் அடிக்க வருவான். சனமெல்லாம் சிரித்துக்கொண்டு போகுது. நீயும் சிரித்து விட்டுப் போ” என்று குமரன் எலி.

“எல்லாரும் ஏழைகளாக இருந்து தான் பணக்காரனானவை. அவை அவை வாழ்ந்த வாழ்க்கை ஊருக்குத் தெரியும். விசரர் தான் அதைக் கதைப்பினை” என்று விசாலம் சொல்லிக் கொண்டு போனது” என்றது லட்சுமி எலி.

192. பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல

நட்டார்கண் செய்தலின் தீது

“அப்போது அங்கே வந்த விக்னேஸ்வரன் சொன்னான், “கஜேந்திரா, உனக்கு எங்கை என்ன பேசுவதென்று தெரியாது. காலையில் மக்கள் சாமி கும்பிடவென கோவிலுக்கு வந்தால் நீ குடித்து விட்டுப் பயனில்லாத கதைகளைக் கதைக்கிறாய். திருநாவுக்கரசு கூலி வேலை தான் செய்தது. மனிசி பிரக்கிராசியார் வீட்டை தான் சமைத்தது. இப்ப அவை இல்லையென்று சொன்னவையே. சொன்னால் தான் என்ன? நீ விசாரனை அதிகாரியோ? ஒருவன் தீயசெயல்களைச் செய்வதை விடக் கொடுமையானது பயனில்லாத சொற்களைப் பேசுவது. மரியாதையாக எழுந்து போய் விடு இல்லாவிட்டால் கையால் தான் பேசவேண்டி வரும்” என்றதும் கஜேந்திரன் பேசாது எழுந்து சென்று விட்டான்” என்றது குமரன் எலி.

“விக்னேஸ்வரன் நல்லவன். ஆனால் முன்கோபி. கோவிலடியில் கலாட்டா செய்த பலரை அடித்துள்ளான். அந்தப் பயத்தால் கஜேந்திரன் எழுந்து சென்றிருப்பான்” என்றது லட்சுமி எலி.

193. நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல

பாரித்து உரைக்கும் உரை.

“அப்போது அங்கு வந்த நமசிவாயகம் சொன்னார்,“மகனே, பயனில்லாத சொற்களைப் பேசுவோர் அறமில்லாதவர்கள் என்று தெரிந்த பலர் இவனது பேச்சைக் கேளாதவர்கள் போலச் செல்கிறார்கள். அறம் இல்லாதவர்கள் எதையும் ஆராயாது பேசுவார்கள். அவர்களது கதைகளுக்கு விளக்கம் சொல்ல முடியாது. நீ இளைஞன். அவதானமாக வாழ வேண்டியவன். அதனால் உனது வாழ்க்கையைப் பாழாக்கி விடாதே. சென்று உனது வேலைகளைக் கவனி” என்றவுடன் விக்னேஸ்வரன் சென்று விட்டான்” என்றது குமரன் எலி.

“பயனில்லாத சொற்களைப் பேசுவோர் மனங்குழம்பியவர்கள். அவர்களுக்கு மறுமொழி கூற அது கலகமாக மாறிவிடும்” என்றது லட்சுமி எலி.

194. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்புஇல்சொல் பல்லார் அகத்து

“அப்போது அங்கு வந்த திருநாவுக்கரசு சொன்னார்,“இவனது மனைவி வீடுகளுக்குச் சென்று கூலி வேலைகள் செய்கிறாள். எனது மனைவி கூலி வேலை செய்யக்கூடாதென்பதற்காகத் தான் நான் வெளிநாடு சென்றேன். மனைவியை நல்லபடி வாழ வைக்காததால் அவள் என்னிடம் வந்து தனது கஷ்டங்களைக் கூறினாள். அதனால் அவளது இளைய மகனை நான் என்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினேன். இவனது நடத்தையால் எனக்கு விருப்பமில்லாது இருக்கிறது. என்னைப் பற்றி மிகத் தரக்குறைவாகப் பேசி வருகிறான். அதனால் இவனுக்கு உதவி செய்ய நான் விரும்பவில்லை” என்று திருநாவுக்கரசு சொன்னதும் கஜேந்திரன் திகைத்துப் போனான்” என்றது குமரன் எலி.

“அறத்திற்குப் பொருத்தமில்லாத சொற்களைப் பேசுவோருக்கும் பாவம் மட்டுமல்ல தண்டனையும் கிடைக்கும் என்பதைப் பேசுவோர் உணர்வதில்லை” என்றது லட்சுமி எலி.

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை யுடையார் சொலின்

“நீ செய்தது தான் சரி திருநாவுக்கரசு. இவன் திருந்தவே மாட்டான். தினமும் உருத்திரகுமாரனிடம் வாங்கிக் குடித்து விட்டுக் கேவலமாகப் பேசுகிறான். நீ ஒரு கிழமைக்கு முன்பே சொன்னதால் ஊர் முழுவதும் அந்தக் கதை தெரியும். தெரிந்தும் பேசுபவனை மன்னிக்கக்கூடாது” என்று நமசிவாயகம் சொன்ன போது துரைராசா சொன்னார்,“ஐயா, நல்ல பண்பினை உடையவர்கள் இப்படிப் பேசுவது சரியல்ல. அது அறமும் அல்ல. கஜேந்திரன் குடித்து விட்டுப்பேசி வருவதால் அவனது மனநலம் பாதிக்கப்பட்டு விட்டது. அதனால் உதவி செய்ய விரும்புபவர்கள் உதவி செய்ய வேண்டுமே தவிரத் தீயவர்களின் பேச்சைக் கணக்கில் எடுக்கக் கூடாது” என்றார். அதைத் திருநாவுக்கரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் துரைராசா சொன்னார்,“நல்ல பண்பை உடையவர்கள் பேசக்கூடாதவற்றைப் பேசினாலும், பேச்சை மாற்றிப் பேசினாலும் அவர்களது சிறப்பும் மதிப்பும் அழிந்து விடும். அதனால் சொன்ன சொற்படி நடவுங்கள்” என்றார். வெகுநேரம் அதைப் பற்றி யோசித்த திருநாவுக்கரசு “சரி” என்று சொன்னார்” என்றது குமரன் எலி.

“துரைராசா படிக்காவிட்டாலும் பண்பானவர். நமசிவாயகம் படித்தாலும் சில சமயம் ஆராயாமல் பேசிவிடுவார். பாவம் கஜேந்திரனின் மனைவி. வீடுகளில் கூலி வேலை செய்து சம்பாதிப்பதையும் அவன் குடித்து முடித்து விடுவான்” என்றது லட்சுமி எலி.

196. பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்.

“திருநாவுக்கரசு சென்ற பின் நமசிவாயகத்தின் அருகில் வந்த கஜேந்திரன் சொன்னான்,“நீங்கள் ஊரிலை பெரிய மனிதன். பாடசாலை கட்டினீர்கள், மடம் கட்டினீர்கள், கோவில் கட்டினீர்கள். அதிலெல்லாம் பணத்தைச் சூறையாடினீர்கள் என்று சனம் கதைத்தது. நான் அதை வெளிப்படையாகச் சொல்வது பிழையே. எனது மனைவி கூலி வேலை செய்பவள். திருநாவுக்கரசுவின் குடும்பம் மூன்று மாதகாலமாக ஊரில் நிக்கிறது. அவைக்கு உதவி எனது மனைவி தான். அதனால் தான் அவை உதவி செய்வதாகக் கூறினவை. ஆனால் நான் நம்பவில்லை. இவன் முந்தி ஊருக்கை செய்யாத திருவிளையாடல்கள் இல்லை. அப்ப மனிசி வீட்டை அடிக்கடி போய்வாறவன்” என்று சொல்லும் போது துரைராசா கோபமிகுதியால் கஜேந்திரனது கன்னத்தில் ஓங்கி அறைந்தா;; “நீ மனிசன் இல்லை. மனிதர்களுள்ப் பதர். ஊரில் ஒரு நல்ல மனிதர் கூட இல்லை என்று எண்ணியே அறமில்லாத சொற்களைப் பேசுகிறாய். இது உனக்கு நன்மை தராது. அத்துடன் எல்லோரும் எந்நாளும் ஒரே மாதிரியாக இருக்கமாட்டார்கள். காலையில் நான் விக்னேஸ்வரனை மறிக்காதிருந்தால் உனது நிலை என்ன என்பதை எண்ணிப் பார்த்தாயா..?” என்று கேட்டார்” என்றது குமரன் எலி.

“சிலருக்கு எதைச் சொல்லியும் பிரயோசனமில்லை. எய்தவன் இருக்க எல்லோரும் அம்பை நோகினர். உருத்திரகுமாரனுக்கு அடிபோட்டால் சரி” என்றது லட்சுமி எலி.

**197. நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்**
**பயன்இல சொல்லாமை நன்று.**

‘‘இப்ப நமசிவாயகத்திற்கு வாக்கு மாறிப்போச்சு. அவருக்கு எண்பத்தைந்து வயது. எதைக் கதைப்பது, எதைக் கதைக்கக் கூடாதென்று புரியாது கதைக்கிறார். கதிரேசன் பல முறை கூறியும் கேட்கிறாறில்லை. திருநாவுக்கரசு அவரது நெருங்கிய உறவினர். அவர் சொல்வதைத் திருநாவுக்கரசு கேட்பார். உருத்திரகுமாரன் கள்ள உறுதி முடித்த காணியின் பெறுமதியை மடத்திற்குக் கொடுக்கவே திருநாவுக்கரசு விரும்பினார். அதை நமசிவாயகம் விரும்பவில்லை. எல்லோரும் உழையாமல் இருந்து சாப்பிட மடம் வழிவகுக்கிறது. அத்துடன் மடத்தில் உண்டுவிட்டுப் பயனில்லாத கதைகளைக் கதைத்துச் சண்டை பிடிக்கின்றனர் என்று சொன்னவராம். அது துரைராசாவுக்குக் பிடிக்கவில்லை. அனாதைகள், அங்கவீனர்கள், நோயாளிகள், உழைக்க முடியாதவர்கள், பாடசாலை செல்லும் பிள்ளைகள் எனப் பலரை அது பாதிக்கிறது. அறிவுள்ளவர்கள் அறமில்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால், பயனில்லாத சொற்களைச் சொல்லக் கூடாதென்று அவருக்குத் தெரியாதா’’ என்று துரைராசா கேட்டவர்’’ என்றது குமரன் எலி.

‘‘வயது போனால் உப்பிடி எத்தனை கதைகளைக் கதைப்பினை. மாறாட்டம் என்று சொல்லிச் சமாளிச்சுப்போடுவினை’’ என்றது லட்சுமி எலி.

**198. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்**
**பெரும்பயன் இல்லாத சொல்.**

‘‘திருநாவுக்கரசு தனது மனைவியுடன் கோவிலுக்கு வந்த போது கஜேந்திரனின் மனைவியையும் அழைத்து வந்தார். அவள் அவர்களது பொருட்களை வைத்திருந்தாள். அப்போது அங்கே கதிரேசன் நின்றார். அவரைக் கண்டதும் திருநாவுக்கரசு சொன்னார், ‘‘நான் கஜேந்திரனது இளைய மகனை வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்ல எண்ணியுள்ளேன். கஜேந்திரன் அடிக்கடி என்னையும் எனது குடும்பத்தினரையும் கேவலப்படுத்துவான். அப்போது எனக்குக் கோபம் வரும். அவ்வேளையில் எனது மனைவி சொல்வாள், ‘‘சிறந்த பயன்களை ஆராயும் அறிவுடையவர்கள் பெரும் பயன்தராத சொற்களைப் பேசமாட்டார்கள். கஜேந்திரனை ஒரு மனிதன் என்று ஊரவர் எவரும் கருதுவதில்லை. கஜேந்திரனின் மனைவி அவனை வீட்டுக்கு வரவேண்டாம் என்று கூறியும் அவன் கேட்கவில்லை. அதனால் காவல்துறையில் புகாரிட்டும் திருந்தாது தினமும் வருகிறான். நான் என்ன செய்வதென்று கேட்டு அழுகிறாள். அதனால் அவனது பேச்சைக் கேட்க வேண்டாம்’’ என்றாள். அதன் பின் யோசித்துப் பார்த்தேன். திருத்த முடியாதவர்களை என்ன செய்வது?’’ என்று திருநாவுக்கரசு கதிரேசனுக்குக் கூறினார்’’ என்றது குமரன் எலி.

‘‘கஜேந்திரனைப் போன்ற பலர் ஊரில் இருக்கிறார்கள். ஆறாம் அறிவிருந்தும் என்ன பிரயோசனம். கஜேந்திரன் உருத்திரகுமாரனின் தோட்டத்திற்குக் காவலுக்குச் செல்பவன். இரவு ஒரு பாம்பு அவனுக்கு அருகே வர அவனது நாய் அதைக் கடித்துக் கொன்று விட்டது. இப்போ யாருக்கு ஆறாம் அறிவு இருக்கு’’ என்று கேட்டது லட்சுமி எலி.

**199. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த**
**மாசுஅறு காட்சி யவர்.**

‘‘அப்போது அங்கே வந்த கஜேந்திரன் திருநாவுக்கரசுவையும் அவரது மனைவியையும் கண்டு விட்டு அவரின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு சொன்னான்,‘‘ஐயா, உருத்திரகுமாரன் கள்ளை வாங்கித் தரக் குடித்து விட்டு உங்களை மிகவும் தரக்குறைவாகப் பேசிவிட்டேன். எனினும் உயர்ந்த குணமுள்ள நீங்கள் அதைப் பொருட்படுத்தாது எனது மனைவிக்கு வேலை கொடுத்ததோடல்லாமல் எனது மகனையும் வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்லவுள்ளீர்கள். என்னை மன்னியுங்கள் ஐயா, நான் இனிமேல் உங்களைப் பேசமாட்டேன்’’ என்று சொல்லும் போது திருநாவுக்கரசு சொன்னார்,‘‘என்னையல்ல, இந்த ஊரில் உள்ள

எவரைப் பற்றியும் பேசாதே. நீ பேசுவதற்குக் காரணம் நீ குடிக்கும் மது. அதனால் மதுவைக் குடிக்காமல் விடு. உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்று'' என்று சொல்லும் போது கஜேந்திரன் சொன்னான்,''நான் இனிமேல் குடிக்க மாட்டேன். நான் கண்டபடி உருத்திரகுமாரன் கூறுபவரைப் பேசாவிட்டால் அவன் என்னைத் தாக்குவான். ஆனால் நீங்கள் நான் பேசக்கூடாத பேச்சுக்களைப் பேசிய போதும் என்னை அடிக்கவில்லை. ஏசக்கூட இல்லை. உயர்ந்தவர்கள் மறந்துங்கூடப் பயனில்லாத சொற்களைப் பேசமாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்'' என்று அழுதழுது சொன்னான்'' என்றது குமரன் எலி.

''உங்கை உள்ளவை தேவைக்கேற்ற வகையில் பேசுவதில் வல்லவை என்று உங்களுக்குத் தெரியாதே'' என்று கேட்டது லட்சுமி எலி.

**200. சொல்லுக சொல்லில் பயன்உடைய சொல்லற்க**
**சொல்லில் பயன்இலாச் சொல்**

''கஜேந்திரன் உனக்கு விருப்பமானால் எனது தம்பி மூர்த்தியின் தென்னந்தோப்பில் வேலை செய். ஆனால் என்னைப் போல எனது தம்பி இல்லை. அவனுக்குக் குடிப்பது பிடிக்காது. நீ என்னைக் கண்டபடி பேசுவதைக் கேட்டுக் கோபப்பட்டு உன்னை அடிக்க வந்தவன். நான் தான் மறித்தேன். அதனால் அவனோடு வேலை செய்வதனால் முதலில் குடியை நிறுத்த வேண்டும். குணத்தில் அவன் என்னை விட உயர்ந்தவன். அவனின் தோப்பில் வேலை செய்யும் நவரத்தினத்தின் மகள் மருத்துவ பீடத்திற்குத் தெரிவான போது நவரத்தினத்தின் ஏழ்மை கருதி அவன் தான் உதவிகள் செய்கிறான். அது உனக்குத் தெரியும். நவரத்தினம் மிகவும் நல்லவன். விசுவாசமானவன். அதனால் தான் உதவி செய்கிறான். எப்போதும் பயனுள்ள நல்ல சொற்களைப் பேச வேண்டும். அதனால் ஏராளமான நன்மைகள் தேடிவரும். பெரியவர்கள் மதித்து உதவி செய்வார்கள். பயனில்லாத சொற்களைப் பேசினால் என்றும் துன்பம் தான். உனது வார்த்தைகளால் துன்பப்பட்ட எத்தனை பேர் உன்னைத் தாக்கியுள்ளனவர். அதனால் இனியாவது திருந்து'' என்று திருநாவுக்கரசு கூறிய போது கஜேந்திரன் அழுது கொண்டிருந்தான்'' என்றது குமரன் எலி.

''அவன் படு கள்வன். காரியம் செய்வதற்காக எதையும் செய்வான்'' என்றது லட்சுமி எலி.

**தீவினை அச்சம் - 21**

**201. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**
**தீவினை என்னும் செருக்கு.**

''உருத்திரகுமாரனின் மகன் அரவிந்தன் கஜேந்திரனின் மகளைக் காதலிக்கிறானாம். அதனால் பெரும் பிரச்சினை. உருத்திரகுமாரன் அரவிந்தனை வெளிநாட்டிற்கு அனுப்பப் போகிறானாம். இதையறிந்த கஜேந்திரனின் மகள் காவியா அரவிந்தனைச் சந்தித்துத் தன்னை அழைத்துச் செல்லும்படி கேட்டிருக்கிறாள். அரவிந்தன் தகப்பனைப் போல தீயசெயல்களை அஞ்சாமல் செய்பவன். அதனால் அவன் காவியாவோடு மிகவும் அன்பாகப் பேசி அவளை வீட்டுக்கு அனுப்பி விட்டுத் தலைமறைவாகி விட்டானாம். கோவிலடியில் காலமை பெரும் பிரச்சினை. கஜேந்திரன் வாளுடன் வந்து உருத்திரகுமாரனை வெட்டுவதற்காகக் கலைத்தான். திருநாவுக்கரசு தான் அவனைச் சமாதானம் செய்தது. உருத்திரகுமாரன் தனது மகள் காவியாவைக் காதலிக்கவில்லையென்றும், அவள் தான் இவனை மயக்கித் திருமணம் செய்ய விரும்புகிறாளென்றும் உருத்திரகுமாரன் சொல்ல. கஜேந்திரன், ''உனது மகனைக் கோவிலுக்கு அழைத்து வந்து கற்பூரம் கொழுத்திச் சத்தியம் செய்'' என்று கூற உடனே உருத்திரகுமாரன் அரவிந்தனை அழைத்து வந்து கற்பூரம் கொழுத்திச் சத்தியம் செய்வித்தான். அதனால் அதிர்ச்சியடைந்த கஜேந்திரன்,''பொய்ச்

சத்தியம் பண்ணுகிறாய். கடவுள் சும்மா விடமாட்டார்'' என்று கூறிச் சண்டைக்குச் சென்றான்'' என்றது குமரன் எலி.

''இப்ப கடவுளை யார் நம்புகிறார்கள். கோவிலில் களவெடுக்கிறார்கள். கோவில் மடத்தில் சாராயம் குடிக்கிறார்கள். மாமிசம் உண்கிறார்கள். அரவிந்தன் தீயவன், தீமை செய்ய அஞ்சமாட்டான். நல்லவர்கள் தான் அஞ்சுவார்கள்'' என்றது லட்சுமி எலி.

**202. தீயவை தீய பயத்தலான் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்**

''திருநாவுக்கரசு உருத்திரகுமாரனுக்குச் சொன்னார்,''தீய செயல்கள் தீயை விடக் கொடுமையானவை. காவியா படித்தவள். பட்டதாரி. நல்ல குணவதி. பணம் தான் இல்லை. பணத்தைப் பாராது உனது மகனின் ஆசையை நிறைவேற்று. உனது மகன் அவளுக்கு நிறையப் பரிசுப் பொருட்கள் வாங்கிக் கொடுத்துள்ளான். முக்கியமாக தங்க மோதிரத்தில் தனது உருவப் படத்தைப் பதித்து அவளது பிறந்தநாளன்று விரலில் அணிவித்துள்ளான். அதனால் பாவத்தைச் செய்யாதே'' என்று கூறும் போது உருத்திரகுமாரன் சொன்னான், ''நான் தான் அவனது பிறந்த தினத்தன்று அவனது உருவப்படத்தைப் பதித்து அவனுக்குப் பரிசளித்தேன். சில தினங்களுக்கு முன்பு அவனது கையில் அதைக் காணவில்லை. கேட்டதற்கு அதைக் கழற்றி வைத்தேன் காணவில்லை என்றாள். கஜேந்திரன் திருடன். அவன் தான் எடுத்துச் சென்று தனது மகளுக்குக் கொடுத்து விட்டு நாடகமாடுகிறான்'' என்றான்'' என்றது குமரன் எலி.

''அப்படி இருக்க வாய்ப்பில்லை. உருத்திரகுமாரன் திட்டமிட்டுச் செயலாற்றுவதில் வல்லவன். முன்பு கஜேந்திரனுடன் சேர்ந்து செய்தான். இனி யாரையாவது சேர்ப்பான். தீயசொற்களும், தீயசெயல்களும் தீயை விடக் கோரமானவை என்று தெரிந்தும் தொடர்ந்து தீயசெயல்களையே பலரும் செய்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**203. அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய**
**செறுவார்க்கும் செய்யா விடல்.**

''தமக்குத் தீங்கு செய்தவரை மன்னித்து அவர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருப்பதே அறிவுள்ளவர்களின் செயலாகும். முன்பு நீயும் கஜேந்திரனுமாகச் சேர்ந்து தான் தீயசெயல்கள் பலவற்றைச் செய்தீர்கள். அவன் படிப்பறிவில்லாதவன். நீ பட்டதாரி ஆசிரியன். ஆசிரியனுக்கென்று தனித்துவமான பல குணங்கள் உண்டு. சிற்றம்பலம் ஆசிரியர் மிகமிக ஒழுக்கமான ஆசிரியர். அவர் இப்போதும் ஒழுக்கமாகத் தான் வாழ்கிறார். அவரின் மகன் பொறியியலாளன். அவன் எனது தம்பி மூர்த்தியின் தோப்பில் வேலை செய்யும் நவரத்தினத்தின் இரண்டாவது மகள் பூரணியைக் காதலிப்பதாக ஊரவர் கதைத்த போது சிற்றம்பலம் தனது மகனான செந்திலை அழைத்து, ''மகனே, உன்னைப் பற்றி ஊரில் பலவாறு கதைக்கின்றனர். நான் உன்னை ஒருபோதும் கண்டித்து வளர்த்ததில்லை. அத்துடன் உனது ஆசைகளை நிறைவேற்றாது விட்டதுமில்லை. அப்படியிருக்க ஏன் மறைத்தாய்?'' என்று கேட்டார். அதற்குச் செந்தில் சொன்னான், ''உங்களுக்கு நவரத்தினத்தைப் பிடிக்காது'' என்று சொல்லும் போது சிற்றம்பலம் குறுக்கிட்டுச் சொன்னார்,''நமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் தீங்கு செய்யக் கூடாது. நீ நவரத்தினத்தை வரச் சொல்'' என்று சொன்னவர். அதைப் போல நீயும் செய் என்று உருத்திரகுமாரனுக்கு திருநாவுக்கரசு சொல்ல, அவன் கோபத்தோடு திட்டினான்'' என்றது குமரன் எலி.

''மகனை எவ்வளவு கூட விற்கலாமென்று இருப்பவர்களுக்குப் புத்தி சொல்ல முடியுமே?'' என்றது லட்சுமி எலி.

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

''உருத்திரகுமாரன் சென்றதும் கஜேந்திரன் வந்து திருநாவுக்கரசுவின் கால்களைப் பிடித்து அழுதான், ''ஐயா, அவள் எதையும் கேட்கிறாளில்லை. அரவிந்தன் தன்னைத் திருமணம் செய்யாவிட்டால் தான் தற்கொலை செய்வேன் என்கிறாள். முன்பு நான் கெட்டவன். கெட்ட செயல்களைச் செய்யும் போது மனச் சாட்சி இருக்கவில்லை. இப்போ திருந்திய பின் வேதனையென்றால் என்னவென்று தெரிகிறது. எனது மகள் தற்கொலை செய்தால் உருத்திரகுமாரனது குடும்பத்தை வெட்டிச் சரிப்பேன்'' என்றான். அதற்குத் திருநாவுக்கரசு சொன்னார்,''கஜேந்திரா, பழிக்குப் பழி வாங்குவதால் பிரச்சினைகளுக்குத் தீர்வு வராது. பலாத்காரத்தையும், கொடிய சொற்கள் பேசுவதையும் விட்டு விட்டுக் கடவுளிடம் பாரத்தைப் போடு. அவர் செய்ய வேண்டியதைச் செய்வார். ஒருவன் மறந்துங் கூட பிறருக்குக் கேடு செய்ய நினைக்கக் கூடாது. ஏனென்றால் தீங்கு செய்ய நினைப்பவனுக்கு அறமே தீங்கு செய்யும்'' அதனால் அமைதியாக இரு'' என்றார்'' என்றது குமரன் எலி.

''மனிதர்கள் சட்டத்திற்குப் பயந்து தான் தீயசெயல்களைச் செய்யப் பயப்படுகிறார்கள். நேரில் செய்தால் அகப்பட்டு விடுவோம் என்ற பயத்தால் மறைந்திருந்து செய்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

205. இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன் ஆகும் மற்றும் பெயர்த்து

''கஜேந்திரா, நான் பணம் பொருட்கள் இல்லாதவன் என்றெண்ணி உனது வறுமை காரணமாகத் தீயசெயல்களைச் செய்யாதே. செய்தால் நீ மேலும் பாதிக்கப்படுவாய். இப்போது நீ, நீயும் உருத்திரகுமாரனும் சேர்ந்து செய்த செயல்களைப் பற்றி ஊரில் சொல்லித் திரிகிறாய். அது உன்னையும் பாதிக்கும் என்பதை நீ ஏன் உணரவில்லை. உனது செயலால் உனது பிள்ளைகளின் நல்வாழ்வு பாதிக்கும். காவியாவின் வாழ்வு முற்றாகப் பாதிக்கும். அதனால் அப்படியான செயல்களில் ஈடுபடாதே. உருத்திரகுமாரனைப் பழிவாங்குவதற்காகச் செய்யும் செயல்கள் உன்னை மேலும் மேலும் பாதிப்படையச் செய்யும். நீ உருத்திரகுமாரனைக் கேவலமாகப் பேசினால் அவனது மகனான அரவிந்தனுக்குப் பெரும் தீங்குகள் உண்டாகும். வறியவர்களானாலும் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். வறுமை என்பது நிலையானது அல்ல. முயற்சியின் மூலம் வறுமையைப் போக்கலாம். ஆனால் வறுமையின் போது ஏற்பட்ட வடு நீங்காது. அதனால் தீயசெயல்களைச் செய்யாதே'' என்று திருநாவுக்கரசு கூறிய போது கஜேந்திரன் மௌனமாக இருந்தான்'' என்றது குமரன் எலி.

''இப்ப மனிதரில் பலர் தாம் வறியவர்கள் என்று சொல்லிப் பல தீயசெயல்களைச் செய்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

206. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

''இராத்திரி கஜேந்திரன் வீதியால் வரும் போது நாலைந்து பேர் முகத்தைத் துணியால் மூடிக் கட்டிக் கொண்டு வந்து அடித்து விட்டார்களாம். அடிக்கும் போது ''பிச்சைக்காரக் குடிகார நாய்க்குப் பணக்கார மாப்பிளை தேவைப்படுதோ?'' என்று கேட்டுக் கேட்டு அடித்தார்கள் என்று கஜேந்திரன் திருநாவுக்கரசுவிற்குக் கூறத் திருநாவுக்கரசு சொன்னார், ''கஜேந்திரா, துன்பம் செய்யும் தீவினைகள் தன்னை வருத்துவதை விரும்பாதவன் பிறருக்குத் தீமை தரும் செயல்களைச் செய்ய விரும்பக் கூடாது. நீ சில நாட்களுக்கு முன் உருத்திரகுமாரனை வாளால் வெட்டத் துரத்தினாய். இப்ப அவன் உனக்கு அடிப்பித்துள்ளான். தீயசெயல்கள் மேலும் பல தீயசெயல்களைத் தான் உருவாக்கும். அதனால் எம்மால் இயன்றளவு நல்ல வழியில் வாழ வேண்டும். நல்லவற்றைச் செய்பவர்களுக்கு எதிரிகள் இருக்கமாட்டார்கள். ஆகையால் முதலில் உருத்திரகுமாரனைப் பற்றி அவதூறாகப் பேசாதே. கூடியவரை அமைதியாக இரு. அமைதி கலகத்தைக்

குறைக்கும்'' என்று திருநாவுக்கரசு கூறும்போது கஜேந்திரன் அமைதியாக இருந்து கேட்டுக்கொண்டிருந்தான்'' என்றது குமரன் எலி.

''சொல்லும் போது அமைதியாக இருப்பார்கள். யாராவது ஏவி விட்டால் எல்லாவற்றையும் மறந்து சண்டித்தனம் விடுவார்கள்'' என்றது லட்சுமி எலி.

**207. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென்று அடும்.**

''இராத்திரி உருத்திரகுமாரனின் வாழைத்தோப்புக்குள் இருநூற்றுக்கு மேற்பட்ட மாடுகள் பட்டியாக கட்டப்பட்டிருந்தன. அதை யாரோ அவிழ்த்து விட்டு விட்டார்கள். மாடுகள் வாழையை அழித்ததோடு, அருகில் பயிரிட்டிருந்த வெங்காயத்தையும் மிதித்து நாசமாக்கி விட்டதாம். அதைக் கஜேந்திரன் தான் செய்திருப்பான் என்று உருத்திரகுமாரன் கூறித் திரிகிறானாம். ஆனால் அதைத் தான் செய்யவில்லையென்று கஜேந்திரன் கூறிக் கோவிலில் திருநாவுக்கரசு முன் கற்பூரம் கொழுத்திச் சத்தியம் செய்தானாம். அச்சத்தியத்தை உருத்திரகுமாரன் நம்பவில்லை என்று கஜேந்திரன் திருநாவுக்கரசுக்குக் கூறத் திருநாவுக்கரசு சொன்னார்,''எவ்வளவு கொடிய பகை உள்ளவனும் அதிலிருந்து தப்பி வாழலாம். ஆனால் தீயசெயல்களைச் செய்வதால் வரும் பகையிலிருந்து தப்பி வாழ முடியாது. அது பின் தொடர்ந்து வரும். நீ முன்பு உருத்திரகுமாரனோடு சேர்ந்திருக்கும் போது உருத்திரகுமாரனது பகைவர்கள் மறைந்திருந்தனர். ஏனென்றால் நீ அவர்களுடனும் தொடர்பு வைத்திருந்தாய். அதனால் அவர்கள் பயப்பட்டனர். இப்போ நீ பகைத்தால் அவர்கள் செய்து விட்டு உன்னைச் சாட்டுகின்றனர். இருப்பினும் நீ செய்யவில்லை என்று கூறிவிட்டுப் பிரச்சினைக்குச் செல்லாமல் இரு. அத்துடன் அதை யார் செய்திருப்பார்கள் என்று விசாரித்து அறி'' என்று திருநாவுக்கரசு கூறினவர்'' என்றது குமரன் எலி.

''எதிரிகள் ஒண்டு பட்டால் பகைவர்களுக்குக் கொண்டாட்டம் என்பார்கள்'' என்றது லட்சுமி எலி.

**208. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
**வீயாது அடியுறைந் தற்று.**

''உருத்திரகுமாரனது வாழைத்தோப்பினுள் மாடுகளை அவிழ்த்து விட்டது கஜேந்திரன் தான் என்று ஊரில் பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால் இன்று காலை கதிரேசனைச் சந்தித்த கஜேந்திரன் சொன்னான்,''முன்பு நான் பல தீயசெயல்களைச் செய்தது உண்மை. நான் தீயவனாக இருந்த போதும் எனது இளைய மகனை திருநாவுக்கரசு ஐயா தன்னுடன் அழைத்துச் செல்வதாகவும்,எனது மகள் காவியா பட்டதாரி ஆசிரியராகத் தெரிவானதும் எனது மனச்சாட்சியை விழிப்புறச் செய்தது. அத்துடன் திருநாவுக்கரசு ஐயா,''தீமை செய்தவன் கெடுவதென்பது அவன் நிழல் அவனை விடாமல் அவனது காலடியிலேயே தங்கியிருப்பதைப் போன்றது என்றும் நீ தீமைகள் செய்த போதும் உனக்காகக் கடவுள் இரங்கி உனது குடும்பத்தை வாழவைக்கிறாள். நீ நன்மைகளைச் செய்தால் கடவுள் உனக்காக இன்னும் எவ்வளவோ செய்வாள் என்றும் கூறிய பின் நான் தீயசெயல்களைச் செய்வதை விட்டு விட்டேன். தீயசெயல்களைச் செய்யாது விட்டாலும் செய்த தீமைகள் சூழும் என்பார்கள். அது தான் நடக்குது'' என்றான். கதிரேசனுக்கு அதில் நம்பிக்கை இல்லை. இருப்பினும்,''நீ போ. காலம் பதில் சொல்லும்'' என்றார்'' என்றது குமரன் எலி.

''கஜேந்திரனை நம்ப முடியாது. அவன் செய்து விட்டும் மறுப்பான்'' என்றது லட்சுமி எலி.

**209. தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்.**

''அப்படித் தான் கதிரேசனும் நினைக்கிறார். அவர் திருநாவுக்கரசுவிற்குச் சொன்னார்,''கஜேந்திரனை உடனடியாக நம்ப முடியாது. ஏனென்றால் நான் பல விடயங்களில் அனுபவப்பட்டிருக்கிறேன். முன்பு ஒரு நாள் நடராசாவின் மாடொன்றைத் திருடி விட்டு அவன் மடத்தில் வந்து படுத்து விட்டான். நமசிவாயகம் கஜேந்திரன் இரவு முழுவதும் மடத்தில் இருந்தவன் என்று கூறினார். மறுநாள் மாட்டை இறைச்சிக்காக வெட்டிய போது காவல்துறையினர் வெட்டியவர்களைப் பிடித்து விட்டனர். விசாரித்ததில் மாட்டைக் கொண்டு சென்று கொடுத்தது கஜேந்திரன் என்று தெரிய வந்தது. ஒருவன் தன் மீது அன்புடையவனாக இருந்தால் தான் பிறருக்குத் தீமை செய்யமாட்டான். கஜேந்திரன் தீயசெயல்களால் வரும் சிற்றின்பத்திற்காகத் தனக்குத் தானே தீமை செய்பவன். குடும்பத்தை நேசிப்பதில்லை. அவனது மகள் காவியா படிப்பில் கெட்டிக்காரி, நல்ல குணவதி, பெரியவர்களை மதிப்பவள். இருந்தும் அவளை மதிப்பாரில்லை. இது தெரிந்தும் அவன்

திருந்துவதாக இல்லை'' என்று கதிரேசன் கூறிய போது திருநாவுக்கரசு எதுவும் பேசவில்லை'' என்றது குமரன் எலி.

''புலி திருநீறணிந்து வந்து இனிமேல் நான் மிருகங்களைக் கொன்று தின்னமாட்டேன் என்றால் நம்ப முடியுமா..?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**210. அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்**
**தீவினை செய்யான் எனின்.**

''பலரும் பலவிதமாகக் கதைக்கின்றனர். இவன் இரவில் மதுபானம் விற்குமிடத்திற்குச் சென்று குடிக்கிறான்'' என்று கேள்விப்பட்டேன். குடித்தவன் குடிக்காமல் விடமாட்டான். அறிவுள்ளவர்களே குடிக்கமாட்டான் என்று கோவில்களில் சத்தியம் செய்து விட்டுக் குடிக்கிறார்கள். இவன் மழைக்குக் கூடப் பாடசாலையில் ஒதுங்காதவன். திடீரென்று திருந்தி விட்டான் என்று நம்ப முடியாது. இவனது பேச்சை நம்பி நாம் கதைத்தால் பின் நாம் தான் வருந்த வேண்டிய நிலையேற்படும். அதனால் அவனை அவதானித்தல் வேண்டும். ஒருவன் தவறான வழியில் சென்று ஒருவருக்கும் கேடு செய்யாதிருப்பவன் என்று அவதானித்து முடிவெடுத்தால் தான் அவன் தீமைகள் செய்யாதவன் என்று முடிவு கட்டலாம். சென்றவாரம் வரை குடித்து விட்டுத் தீமைகளை செய்த ஒருவனை ஆராயாது நம்பக் கூடாது'' என்று கதிரேசன் சொன்னதைத் திருநாவுக்கரசு ஏற்றுக்கொண்டார்'' என்றது குமரன் எலி.

''கதிரேசனின் அனுபவம் அது. பாவம் திருநாவுக்கரசு வெளிநாட்டில் இருந்து வந்தவர். அவனைப் பற்றிச் சரியாக அறிந்திருக்க மாட்டார்'' என்றது லட்சுமி எலி.

**ஒப்புரவு அறிதல் - 22**

**211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என்ஆற்றுங் கொல்லோ உலகு.**

''அன்று கதிரேசனது எண்பதாவது பிறந்ததினம் மிகவும் அமைதியாகக் கொண்டாடப்பட்டது. மடத்தில் இருந்தவர்களுக்கு உணவும், உடுபிடைவைகளும் வழங்கப்பட்டது. கதிரேசனது மூத்த மகன் தனது வைத்திய நண்பர்கள் பலரை அழைத்து வந்து மருத்துவ முகாம் ஒன்றை அமைத்திருந்தான். அங்கு நோயாளர்களுக்கு நீரிழிவு பார்வைக் குறைபாடு, இருதய நோய் சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன. நோய் அதிகரித்த நிலையில் உள்ள நோயாளர்கள் பட்டணத்தில் உள்ள அரச வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். அந்த வருடம் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் இருவரது கல்விக்கான முழுச் செலவையும் கதிரேசன் ஏற்றுக்கொண்டார். பாராட்டு வைபவங்கள் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. அங்கு நின்ற வயோதிபரான ஆறுமுகம் சொன்னார்,''சென்ற வருடம் எனது பேர்த்தி பல்கலைக்கழகத்தில் கற்பதற்குக் கதிரேசன் உதவினார். இந்த வருடம் வேறு இருவருக்கு உதவுகிறார். கைம்மாறு கருதாமல் வானம் மழையைப் பெய்வது போல கைம்மாறு கருதாது இவ்வூர் மக்களுக்குக் கதிரேசன் உதவி செய்கிறார்'' என்று கூறினார்'' என்றது குமரன் எலி.

''பத்து ரூபா பெறுமதியான பொருளைக் கொடுப்பதானாலும் மேடை அமைத்து ஒலி பெருக்கி பூட்டி ஆடம்பரமாகக் கொடுப்பவர் மத்தியில் கதிரேசன் பெரிய மகான்'' என்றது லட்சுமி எலி.

**212. தாள் ஆற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

''அப்போது கனவான் போல ஒருவர் வந்து கதிரேசனின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். அவருடன் கூட வந்தவர்களும் கதிரேசனது பாதங்களைத் தொட்டு வணங்கினார். வந்தவர் சொன்னார், ''உயர்ந்தவர்கள் பாடுபட்டுத் தேடிய பொருட்களை தகுதி உடைய பிறருக்குக் கொடுத்துதவுவார்கள் என்று பெரியவர்கள் கூறுவார்கள். நான் இந்த ஊரவனல்ல. உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு வந்து உதவி

கேட்டேன். செய்தீர்கள். அதனால் நானும் எனது குடும்பமும் செல்வச் செழிப்போடு வாழ்கிறோம். என்னைப் போல பலருக்கும் உதவி செய்கிறீர்கள். அதை விமர்சிக்க எமக்குத் தகுதி இல்லை'' என்று கூறிய போது கதிரேசன் சிரித்தாரே தவிரப் பதில் சொல்லவில்லை'' என்றது குமரன் எலி.

''தாம் கொடுப்பதை ஊர் முழுவதும் சொல்வார்கள். பத்திரிகைகளில் வெளியிடுவார்கள். அப்படியான உலகத்தில் யாருக்கும் தெரியாது உதவி செய்யும் கதிரேசனைப் புகழ வார்த்தைகளே இல்லை'' என்று நமசிவாயகம் சொல்வார். அது உண்மை'' என்றது லட்சுமி எலி.

**213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற.**

''வந்தவன் குடும்பத்துடன் நமசிவாயகத்திடம் வந்து அவரது பாதங்களைப் பணிந்து விட்டுச் சொன்னான்,''நான் வேற்றூரவன். இருந்தும் கதிரேசனது உதவியுடன் இவ்வூர்ப் பாடசாலையில் கற்றேன். கதிரேசனைப் போல ஒரு மனிதரை மண்ணுலகில் மட்டுமல்ல விண்ணுலகிலும் காண முடியாது. அவர் உழைப்பதைக் கொடுக்கக் கொடுக்க அவருக்குக் கடவுள் அள்ளிக் கொடுக்கிறார். கதிரேசன் கடவுள்'' என்று சொன்னதை நான் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''மண்ணுலகில் புகழுக்காகவும் சுயநலனுக்காகவும் உதவுபவர்களே அனேகர். தேவருலகில் எதையும் எதிர்பாராமல் உதவுபவர் என்று கேள்விப்பட்டேன். கதிரேசன் தேவர்'' என்றது லட்சுமி எலி.

**214. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்.**

''அப்போது ஒரு பெண்ணும் அவளது மகளும் வந்து கதிரேசனது பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டுக் கூறினாள், ''ஒவ்வொருவரினதும் தேவையை அறிந்து அதற்கேற்ற உதவிகளைச் செய்பவன் தான் உயிர்வாழ்பவனாவான். உதவி செய்யாதவர்கள் இறந்தவர்களாவர் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். எனது மகளுக்கு இருதய நோய் வந்த போது நான் உங்களை வந்து சந்தித்தேன். உங்கள் மகன் இலவசமாகச் சத்திரசிகிச்சை செய்து எனது மகளைக் குணப்படுத்தியமையால் அவள் இன்று திருமணம் செய்து மகிழ்வுடன் வாழ்கிறாள். அந்தப் புண்ணியம் உங்களையே சாரும்'' என்று கூறினாள்'' என்றது குமரன் எலி.

''ஒவ்வொருவரினதும் குறைகளை அறிந்து கதிரேசன் செயற்படுவதால் அவருக்கு எந்தக் குறைகளும் ஏற்படுவதில்லை'' என்று ஊரவர்கள் பேசுவதைக் கேட்டுள்ளேன்'' என்றது லட்சுமி எலி.

**215. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்**
**பேரறி வாளன் திரு**

''உண்பதற்கேற்ற நல்ல தெளிந்த நீரை உடைய குளம் வருடம் முழுவதும் நிறைந்திருந்தால் அவ்வூரவர்களுக்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் எந்தக் குறையும் இருக்கமாட்டாதென்று பெரியவர்கள் கூறுவார்கள். நீங்கள் நன்னீரால் நிரப்பப்பட்ட குளம். அக்குளம் வற்றாது வருடம் முழுவதும் இருந்தால் ஊருக்குக் குறைகள் இல்லாதது போலத் தங்களிடம் நிறைந்திருக்கும் செல்வம் ஊரவர்களுக்குப் பல வழிகளாலும் உதவுகிறது. எனது தங்கையின் மகன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானான். வறுமை காரணமாக அவன் படிக்காது தொழிலில் சேர்ந்தான். அதை அறிந்த நீங்கள் அவன் கற்பதற்கு உதவினீர்கள். எமது உறவினர்கள் பலர் பணமுள்ளவர்களாக இருந்தும் உதவவில்லை. இப்போது அவன் படித்துப் பட்டம் பெற்றுப் பெரிய தொழிலில் அமர்ந்துள்ளான். இப்போ எமது உறவினர்கள் தமது பெண்களுக்குத் திருமணம் செய்ய போட்டிபோடுகிறார்கள். அத்தகைய சுயநலமிக்க உலகில் சுயநலம்

இல்லாது உதவுபவர் நீங்கள் ஒருவர் தான். அதனால் நாம் உங்களை எமது குலதெய்வமாகக் கருதுகிறோம்’’ எனக் கண்கலங்கிக் கூறியதை நான் கேட்டேன்’’ என்றது குமரன் எலி.

‘‘சுயநலமில்லாமல் கதிரேசனைத் தவிர வேறு யாரும் உதவிகளைச் செய்ததில்லை’’ என்றது லட்சுமி எலி.

**216. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயன்உடை யான்கண் படின்.**

‘‘உருத்திரகுமாரனுக்கு யாரையும் பிடிக்காது. சில சமயம் கதிரேசனையும் ஏசுவான். ஆனால் கதிரேசனது பிறந்ததினக் கொண்டாட்டத்தின் போது அவனும் வந்திருந்தான். வரும் போது ஒரு மாலையும் கொண்டு வந்தான். கதிரேசன் அன்பளிப்புப் பொருட்களைப் பெறுவதில்லையென்றும் கௌரவிப்புக்களை ஏற்பதில்லை என்றும் அறிவித்ததால் தான் கொண்டு வந்த மாலையை மடத்தின் வெளியே இருந்த பிள்ளையாருக்குப் போட்டு விட்டு வந்து சொன்னான்,‘‘நான் கதிரேசனைக் கௌரவிப்பதற்காக ஒரு மாலையைக் கொண்டு வந்தேன். அவர் அதை ஏற்கமாட்டார் என்று அறிந்ததும் மடத்தில் இருக்கும் பிள்ளையாருக்குப் போட்டேன். அது எனக்குத் திருப்தி அளித்தது. பிள்ளையாரைப் போல் அருளும் அவர் ஊரின் நடுவே நிற்கும் பயன் தரும் மரத்தைப் போன்றவர். ஊரின் நடுவே நிற்கும் மரத்தின் பழங்களை ஊரவர்கள் உண்ணலாம், மிருகங்களும் பறவைகளும் உண்ணலாம். அது போலக் கதிரேசனின் பணமும் ஊர் முழுவதற்கும் பயன் தருகிறது’’ என்று சொன்னான்’’ என்றது குமரன் எலி.

‘‘உருத்திரகுமாரன் காரணமில்லாது எதையும் செய்யமாட்டான், சொல்லமாட்டான். அது கதிரேசனுக்குத் தெரியும். ஆனால் உருத்திரகுமாரனுக்குத் தெரியாது’’ என்றது லட்சுமி எலி.

**217. மருந்துஆகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்.**

‘‘கதிரேசன் பயன் தரும் மரம் மட்டுமல்ல. எல்லா உறுப்புக்களையும் கொடுக்கின்ற வேப்ப மரம். வேப்ப மரத்தின் இலை, பூ, காய், வித்து, பட்டை, மரம் இப்படி எல்லா உறுப்புக்களும் மக்களுக்குப் பயன்படுவது போலக் கதிரேசனது பணமும் எல்லா வகையாலும் ஊரவர்க்குப் பயன் தருகிறது’’ என்றும் உருத்திரகுமாரன் கூறினான். ஆனால் கதிரேசனது முகம் மலரவில்லை’’ என்றது குமரன் எலி.

‘‘அவன் ஏதோ பெரிதாகத் திட்டமிடுகிறான் என்று கதிரேசனுக்குத் தெரியும்’’ என்றது லட்சுமி எலி.

**218. இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்**
**கடன்அறி காட்சி யவர்.**

‘‘மடத்தின் வாசலில் நின்ற அரச மரத்தின் கீழ் இருந்து வயோதிபர்கள் கதைப்பது வழக்கம். அன்று மடத்துக்குள் கதிரேசனின் பிறந்த நாள் விழா நடைபெற்ற போது சின்னத்தம்பி என்ற வயோதிபர் கூறினார், ‘‘இன்று போலத் தான் கதிரேசன் இளைஞனாக இருந்த போதும் இருந்தார். அவர் அப்போது மிகவும் வறியவர். விவசாயம் செய்து வாழ்க்கையை நடத்தி வந்தார். அப்போது எனது மூத்த மகன் விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். அப்போது நாள்க் கூலி ஐந்து ரூபா. வைத்தியர் ஊசி மருந்து ஒரு மாத காலத்திற்கு ஏற்ற வேண்டுமென்று ஆயிரம் ரூபா கேட்டார். அன்றன்று உழைத்துச் சாப்பிடும் என்னிடம் ஐந்து சதம் கூட இல்லை. நான் கதிரேசனிடம் சென்று எனது நிலையைக் கூறினேன். அவர் நூறு ரூபா தந்தார். இப்போதைக்கு வாங்கு. அடுத்தவாரம் தருகிறேன் என்றார். மூன்று மாதங்கள் நூறு ரூபா தந்தார். நான்காம் மாதம் வைத்தியர் எனது மகன் குணமாகி விட்டதால் ஊசி மருந்து ஏற்றத் தேவையில்லையென்றார். இன்று வரை நான் அந்தக் காசைக்

கொடுக்கவில்லை. அவரும் கேட்கவில்லை. ஊர்ச்சனம் பிள்ளைகள் உழைக்கின்றன, விவசாயம் நல்ல வருமானத்தைக் கொடுக்கிறது. அதனால் கதிரேசன் கொடுக்கிறார் என்கிறார்கள். அவர் கொடுத்துப் பழகியவர். வறுமையான காலத்திலும் கொடுத்தவர்'' என்றார்'' என்றது குமரன் எலி.

''கொடுத்தவர்களுக்குக் குறையிராது. சனம் வாயில் வந்தவற்றையெல்லாம் ஆராயாமல் கதைக்கும்'' என்றது லட்சுமி எலி.

**219. நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர்**
**செய்யாது அமைகலா ஆறு.**

''கந்தவனம் என்ற முதியவர் சொன்னார்,''நாற்பது வருடங்களுக்கு முன்பு அடித்த புயலால் எனது மண் குடிசை பாதிக்கப்பட்டது. மழையும் பெய்து கொண்டிருந்தது. இவ்வூர் மக்கள் பாடசாலையிலும் கோவிலிலும் இருந்தனர். புயல் ஓய்ந்து மழை விட்டதும் வீட்டைத் திருத்துவதற்காகக் கதிரேசனிடம் சென்று நூறு ரூபா கேட்டேன். அப்போது அவரிடம் பணம் இல்லை. அவர் சொன்னார்,''கதிர்காமு சிறிது நேரத்திற்கு முன்பு வந்து ஐம்பது ரூபா கேட்டான். கொடுத்து விட்டேன். இப்போ என்னிடம் பத்து ரூபா கூட இல்லை. உன்னுடைய வீடு மழையால் சேதமடைந்து விட்டது. உனக்குக் கட்டாயம் உதவ வேண்டும்'' என்று சொல்லிப் பணத்தைப் பெற பல முயற்சி செய்தார். ஒரு கிழமை வரை அவரால் பணத்தைத் தேட முடியவில்லை. தினமும் வந்து இன்று பணம் கிடைக்கவில்லை. நாளைக்குப் பார்ப்போம்'' என்பார். ஒரு கிழமை கழித்து அவரிடம் நின்ற பசுமாட்டை விற்று விட்டு எனக்குப் பணம் தந்தார். மற்றவர்களுக்கு உதவும் நல்ல பண்புடைய கதிரேசனுக்கு எனக்கு உதவ முடியவில்லை என்பது பெருங் கவலையைக் கொடுத்தது. அது எனது பெரும் வறுமைக்காலம் என்றும் இப்போதும் சொல்வார். அவர் இன்னும் நூறாண்டு காலம் வாழ வேண்டும்'' என்று கண்கலங்கக் கூறியதை நான் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''நல்லவர்களுக்குத் துன்பம் என்பது மக்களுக்கு உதவி செய்ய முடியாமல் இருப்பது தான்'' என்று நமசிவாயகம் கூறுவார்'' என்றது லட்சுமி எலி.

**220. ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அஃதுஒருவன்**
**விற்றுக்கோள் தக்கது உடைத்து.**

''தொடர்ந்து கந்தவனம் சொன்னார், ''கதிரேசன் சொல்வார் கொடுப்பதால் கெட்டவர்கள் யாரும் இல்லை. அப்படிக் கெட்டிருந்தால் கதிரேசனைப் போன்றோர் தன்னை விற்றாவது அக்கெடுதியை வாங்கிக் கொள்வார். நான் அவரோடு ஐம்பது வருடங்களாகப் பழகி வருகிறேன். யாராவது முக்கியமான தேவையென்று வந்து கதிரேசனைக் கேட்டால் அவர் அதைக் கொடுக்காமல் விட்டதில்லை. உருத்திரகுமாரனது தகப்பன் கதிரேசனை,''முழுவிசரன், வாழத் தெரியாதவன் என்று கூறுவார். அதற்குக் கதிரேசன் சொல்வார்,''நான் உதவி செய்வதால் கெட்டுப்போகவில்லை. ஒருவருக்குக் கொடுத்தேனேயானால் அது இன்னொரு வகையில் வந்து சேரும். கொடுக்காமல் நல்ல வார்த்தைகளைப் பேசாமல் இருப்பவர்களில் யார் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்'' என்பார். அது உண்மை. உருத்திரகுமாரன் தந்தையைக் கவனிக்காததால் அவர் மடத்திலேயே இறுதிக் காலத்தைக் கழித்தார். அவருக்குப் பிறந்த பிள்ளைகள் அவரைப் போலவே வாழ்ந்து வருகின்றன. கதிரேசனுக்குப் பிறந்த பிள்ளைகள் கதிரேசனைப் போல ஊருக்கு உதவுகின்றன. அதனால் குடும்பம் கெட்டுவிட்டதா? இல்லையே? என்று கந்தவனம் கூறியதைக் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''பாவற்கொட்டை நட்டால் சுரைக்காயா முளைக்கும். கதிரேசனைப் பார்த்தும் ஊரில் யாரும் திருந்துகிறார்களில்லையே'' என்றது லட்சுமி எலி.

ஈகை – 23.

**221. வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து.**

''பயனை எதிர்பாராமல் வறியவர்களுக்குக் கொடுப்பது தான் ஈகை. கதிரேசன், திருநாவுக்கரசு போன்றோர் ஏழைகளின் தேவைகளை அறிந்து கொடுப்பார்கள். கொடுத்தவுடன் அதை மறந்து விடுவார்கள். இது தான் ஈகை. மற்றவர்கள் கொடுக்கும் போது பயனை எதிர்பார்த்தே கொடுக்கிறார்கள்'' என்று நமசிவாயகம் சொல்வார். அது உண்மையென்று இன்று தான் தெரிந்து கொண்டேன்'' என்று கஜேந்திரன் மடத்தின் அருகே நிற்கும் அரசமரத்தின் கீழ் இருந்து சொல்லிக் கொண்டிருக்கிறான்'' என்றது குமரன் எலி.

''ஏன் என்ன நடந்தது..?'' என்று கேட்டது லட்சுமி எலி.

''உருத்திரகுமாரன் யாரோ ஒரு கல்வி அதிகாரியின் மகளின் பிறந்த தினத்திற்கு ஓர் இலட்சம் ரூபா பெறுமதியான தங்க அட்டியலைப் பரிசளித்தவனாம். அவர் சொன்னாராம், ''உருத்திரகுமாரா, அடுத்தவாரம் உனது பாடசாலை அதிபர் ஓய்வு பெறுகிறார். அந்தப் பதவியை விரும்பித்தான் நீ எனது மகளின் பிறந்த நாளுக்குப் பெறுமதி மிக்க பரிசைத் தந்திருக்கிறாய். நீ அப்பதவிக்குத் தகுதியானவன் அல்ல. அதனால் அதைக் கொண்டு போ'' என்றவராம். அதற்கு உருத்திரகுமாரன்,''கல்வி அதிகாரி தனக்கு வேண்டியவரைக் கொடுக்க நினைக்கிறார். அவர் என்னிலும் கூடக் கொடுப்பார்'' என்று சொல்லித் திரிகிறானாம்'' என்றது குமரன் எலி.

''அனுபவம் பேசுகிறது. அதில் உண்மை இல்லாமல் இல்லை'' என்றது லட்சுமி எலி.

**222. நல்ஆறு எனினும் கொளல்தீது மேல்உலகம்**
**இல்எனினும் ஈதலே நன்று**

''இந்த ஊரில் உள்ள பலர் தாம் சமூக சேவை செய்கிறோம் என்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலிலும் பணத்தைப் பெற்று அதில் சிறு தொகையைக் கொடுத்து விட்டு மிகுதியைத் தமது தேவைக்கெடுக்கிறார்களாம். ஆனால் அவையைப் பெரிய சமூக சேவகர்கள் என்று சனம் போற்றிப் புகழுதாம். நான் பதவியை எதிர் பார்த்துத் தான் கொடுத்தேன். அது தானே நடைபெறுகிறது. ஊரில் உள்ள வன்ஏ.பீ.சீ பாடசாலைகளில் எதில் தரமுள்ள அதிபர் இருக்கிறார். முன்பு வாழ்ந்த நாயன்மார்கள் புண்ணியவான்களெல்லாம் கடவுளிடம் பணத்தைப் பெற்றே ஏழைகளுக்குக் கொடுத்தனர். இப்ப உள்ளவை அப்பிடியே செய்யினை. ஒரு தொழிலும் இல்லாத பேரின்பநாதன் பல இலட்சம் பெறுமதியான வாகனத்தில் குடும்பத்தினருடன் சென்று வருகிறார். அவர் உழைத்துச் சம்பாதித்தவரே..? பெரியவர்கள் நன்மை செய்வதற்குக் கூடப் பிறரிடமிருந்து பொருளைப் பெறக் கூடாதென்று சொல்லியிருக்கியினை. மோட்சத்தை விரும்பித் தான தருமம் செய்பவர்கள் பிறரிடம் இரந்து பெற்றால் புண்ணியம் அவர்களுக்குச் சென்று விடும் என்று கூறியிருக்கிறார்கள்'' என்று அரச மரத்தின் கீழ் இருந்து உருத்திரகுமாரன் சொல்லியதை நான் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''பாம்பின் கால் பாம்பறியும் என்பார்கள். உருத்திரகுமாரன் சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை'' என்றது லட்சுமி எலி.

**223. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலன்உடையான் கண்ணே உள.**

“கதிரேசனைச் சந்திக்க ஒருவன் சென்றால் அவனது முகத்தைப் பார்த்தவுடன் அவனது தகுதியை உணர்ந்து விடுவார் கதிரேசன். பின் அவனது தேவையைக் கேட்பாரே தவிர எவ்வளவு தேவை என்று கேட்கமாட்டார். அவன் தேவையைச் சொன்னதும் அதற்கேற்ற பொருளைக் கொடுத்து விட்டுப் போதுமா..? என்று கேட்பார். இது தான் ஈகை. அதை விட்டு விட்டு ஒருவன், “நான் ஏழை. மூன்று நாட்களாகச் சாப்பிடவில்லை என்று அவனின் வரலாற்றைக் கேட்கமாட்டார். அப்படியா இங்குள்ள சமய நிறுவனங்கள் இயங்குகின்றன? என்று ஒரு நாளும் இல்லாதது போல கதிரேசனையும், அவரது மனைவியையும், பிள்ளைகளையும் உருத்திரகுமாரன் புகழ்ந்து தள்ளினான்” என்றது குமரன் எலி.

“சோழியன் குடும்பி சும்மா ஆடாது என்பார்கள். ஏதோ ஒரு பெரிய திட்டத்துடன் தான் உருத்திரகுமாரன் கதைக்கிறான். அதைப் புரியாதவரா கதிரேசன். மடையன் மீண்டும் ஏமாரப்போறான்” என்றது லட்சுமி எலி.

**224. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகம் காணும் அளவு**

“பொருளைப் பெற்றவன் அதில் திருப்திப்பட்டு மனம் மகிழ்வது தான் கொடுப்பவனுக்கு இன்பம். ஆனால் பெரும்பான்மையானவர்கள் திருப்திப்படுவதும் இல்லை மகிழ்வதும் இல்லை. இது கொடுமையிலும் கொடுமை” என்று அடிக்கடி நமசிவாயகம் சொல்வார். அது உண்மை. நேற்றுச் சிவலிங்கம் திருநாவுக்கரசிடம் சென்று தனது மகளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளேன். வைத்தியச் செலவுக்குக் கொஞ்சப் பணம் தேவை” என்று கேட்டிருக்கிறான். அதற்குத் திருநாவுக்கரசு,“நீ போ. நான் வைத்தியசாலைக்குச் சென்று விசாரிக்கிறேன்” என்று சொல்லி விட்டு வைத்தியசாலைக்குச் சென்று தேவையான பணத்தைக் கொடுத்து விட்டு சத்துள்ள உணவு வகைகளும் வாங்கிக் கொடுத்துள்ளார். அதைப் பாராட்டாமல் தன்னிடம் காசைத் தந்திருக்கலாம்” என்று சிவலிங்கம் சொல்ல அரசமரத்தின் கீழ் இருந்தவர்களில் சிலர் அதை ஆமோதித்துள்ளனர்” என்றது குமரன் எலி.

“வேலை வெட்டியில்லாத சிலர் அங்கை இருந்து இப்படியான கதைகளைத் தானே கதைக்கினை. திருநாவுக்கரசு பணத்தைச் சிவலிங்கத்திடம் கொடுத்திருந்தால் சிவலிங்கமும் கூட்டாளிகளும் அப்பணத்தில் குடித்திருப்பார்கள். அப்படியானவை தான் குறை சொல்லியிருப்பினை” என்றது லட்சுமி எலி.

**225. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்**

“இமயமலையில் பல காலம் வசித்து வந்த தவசி ஒருவர் கதிரேசனது ஊருக்கு வந்தார். அவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முப்பது வருடங்களுக்கு முன் இமயமலைக்குச் சென்ற அவர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். அவர் கதிரேசனைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரது வீட்டிற்கு வந்தார். அவர் அங்கே வரும் போது நான்கு பேர் உணவு உண்டு கொண்டிருந்தனர். தவசியைக் கண்ட கதிரேசன் அவரருகே வந்து, அவரை ஆசனத்தில் இருத்தி, அவரது பாதங்களைக் கழுவிப் பின் துடைத்து விட்டுச் சொன்னார், “சுவாமி தங்களைப் பற்றி நான் அறிவேன். தாங்கள் எனது வீட்டில் உணவு உண்ணல் வேண்டும்” என்றார். அதைக் கேட்ட தவசி சொன்னார்,“மகனே, இறைவனை நோக்கித் தவம் புரிவோர்க்குப் பசி தாகம் என்பன இராது. சில மூலிகை வகைளை உண்டால் நெடுநாள் உணவின்றி வாழலாம். ஆனால் சாதாரண மனிதர்கள் அப்படியானவர்கள் அல்ல. பசியால் சில சமயம் உயிரும் போய்விடும். அத்தகைய பசியைப் போக்கும் உயர்ந்த குணம் கொண்ட உனது மனோ பலம் தவசிகளை விட வலிமையானது. தொடர்ந்து செய்” என்று கூறிய போது யோகநாதன் அதிர்ந்து போனாராம். ஒரு பெரும் முனிவர்

கதிரேசனைப் பற்றிக் கூறியதை அவரால் நம்ப முடியவில்லை என்று அரசமரத்தடியில் இருந்து கூறினார்'' என்றது குமரன் எலி.

''தவசிகள் அப்படிக் கூறுகிறார்கள். இங்குள்ள சிலர் கதிரேசனைப் பற்றித் தவறாகத் தானே கதைக்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**226. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃ.துஒருவன்**
**பெற்றான் பொருள்வைப் பழி.**

''மகனே, பலர் வங்கியில் தமது பணத்தைச் சேமித்து வைக்கிறார்கள். பொருளுள்ளவர்கள் ஏழைகளின் பசியைப் போக்க வேண்டும். அது தான் அவனுக்குப் பின் உதவுவதற்காகச் சேமித்து வைக்கும் இடமாகும். நீ தினமும் பல வறிய மக்களின் பசியைப் போக்குகிறாய். உணவு தான் கடவுள். உணவுக்காகத் தான் உயிர்கள் அலைகின்றன. பசித்தவனுக்கு அந்நேரம் கிடைக்கும் பொக்கிசம் தான் உணவு. அதைப் பலர் உணர்வதில்லை. உணர்ந்தவர்கள் உன்னைப் போல இன்பமாக வாழ்கிறார்கள். ஊர் முழுவதும் உன்னைப் பற்றித் தான் பேசுகிறார்கள். அதனால் தான் உன்னைத் தேடி நான் வந்தேன்'' என்று கூறிக் கதிரேசனை அத்தவசி வணங்கினாராம். அதனால் அதிர்ச்சியடைந்த கதிரேசனுக்குத் தவசி சொன்னார்,''மகனே, ஆண்டவன் தான் உயிர்களுக்குப் படியளப்பவன். அவன் கைலாயத்திலிருந்து படியளக்கிறான். நீ பூவுலகில் இருந்து படியாக்கிறாய். அதனால் உன்னைக் கடவுளாக நினைத்து வணங்கினேன்'' என்று சொன்னார்'' என்றது குமரன் எலி.

''எதையும் அறிந்தவனுக்குத் தான் அதன் பெறுமதியும் மகிமையும் தெரியும். படித்தும் அறியாமைமிக்க பலர் பூமியில் வாழ்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**227. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்**
**தீப்பிணி தீண்டல் அரிது**

''தான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளைக் கொண்டு சமைத்த உணவைப் பலலோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உள்ளவனைப் பசி என்னும் தீயநோய் நெருங்காது. இதை நீ இளமைக்காலத்திலிருந்து செய்து வருகிறாய். அதனால் நீ எடுக்கும் பிறவிகளிற் கூட உன்னைப் பசி என்ற கொடிய நோய் நெருங்காது. ஓரிரு முறை யாரும் செய்யலாம். ஆனால் வழக்கமாகச் செய்வது மிகமிகக் கடினம். அத்துடன் இத்தருமச் செயலுக்கு உனது மனைவியும், பிள்ளைகளும் ஆதரவளித்து வருகிறார்கள். அது பெரும் வரப்பிரசாதமாகும். உனது மனைவி மகாலட்சுமி என்ற பெயருக்குப் பொருத்தமானவள். பொதுவாகப் பெண்கள், ஆண்கள் செய்யும் தருமகாரியங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறைவு. அதற்கு முக்கிய காரணம் வேலைச் சுமை. இந்த தள்ளாத வயதிலும் உனது மனைவி உனது தர்மக் காரியங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறாள். நீ கொடுத்து வைத்தவன்'' என்று அந்தத் தவசி கூறும் போது கதிரேசனின் முகம் மலர்வதைக் கண்டேன்'' என்றது குமரன் எலி.

''தவசி சொன்னது போலப் பெரும்பாலான பெண்கள் கூடியிருந்து வம்பு கதைப்பதிலும் ரீவி நாடகங்கள் பார்ப்பதிலும் தான் தம் நேரத்தைக் கழிக்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**228. ஈந்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை**
**வைத்துஇழக்கும் வன்க ணவர்.**

''மகனே, நான் வாழும் ஊரில் நீலகண்டன் என்றொரு பெரும் வர்த்தகன் இருக்கிறான். அவன் எச்சிற் கையாற் கூடக் காகம் கலைக்கமாட்டான். அவன் தங்க நகைகளை வாங்கிக் கொண்டு வட்டிக்குப் பணம் கொடுப்பவன். அவனது மனைவி கோவிலுக்குக் கூடப் பொருட்களைக் கொடுக்க விடாள். நேற்றிரவு கத்தி,

பொல்லு, வாள் என்பவற்றுடன் அவனது வீட்டுள் நுழைந்த திருடர் வீட்டாரைக் கட்டி வைத்து விட்டு அவர்களிடமிருந்த பணம், பொருள், தங்க நகைகள் யாவற்றையும் திருடிச் சென்று விட்டனர். முதல் நாள் கோவில் கட்டிட நிதிக்கென்று கோவில் நிர்வாகத்தினர் சென்ற போது அவன் தற்போது பணம் இல்லையென்றும் பிறிதொரு நாள் வரும்படியும் கூறினான். இப்போ கோவில் காசைக் கொடுத்திருக்கலாமென்று புலம்புகிறான். தான் சேர்த்து வைத்த பொருளைப் பிறருக்குக் கொடுத்துதவாமல் வைத்திருந்து பின் அதை இழப்பவர்கள் பிறருக்குக் கொடுப்பதால் உண்டாகும் உயர்ந்த இன்பத்தை அறியமாட்டார்கள். ஆனால் நீ அறிவாய்'' என்று தவசி கதிரேசனுக்குக் கூறியதாக யோகநாதன் சொல்லிக் கொண்டிருந்தார்'' என்றது குமரன் எலி.

''கொடுத்துதவாமல் பொருளைச் சேமிப்பது தான் இன்பம் என்று நினைக்கும் பலர் இவ்வூரில் வாழ்கின்றனர். அவர்களுக்கு இவையெல்லாம் விளங்காது'' என்றது லட்சுமி எலி.

**229. இரத்தலின் இன்னாத மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.**

''தன்னிடம் நிரம்பியுள்ள பொருளை மற்றவர்களுக்குக் கொடுத்துதவாது தான் மட்டும் அனுபவிக்கும் தன்மை இரத்தலை விடக் கொடியது என்பதைப் பலர் உணர்வதில்லை'' என்று தவசி கதிரேசனுக்குக் கூறினாராம். அதை யோகநாதன் அரசமரத்தின் கீழ் இருந்து யோசித்துப் பார்த்தாராம். இந்த மடத்தில் தினமும் பல நோயாளிகள், அனாதைகள், வறிய மாணவர்கள் எனப் பலர் உண்கின்றனர். இங்கு உணவு வழங்காவிட்டால் இவர்களின் நிலை என்னவாகும்? என்று நினைக்கப் பயமாக இருந்ததாம். மடத்தில் உணவு கொடுக்காவிட்டால் வீட்டுக்கு வீடு சென்று இரத்தல் வேண்டும். அப்படியான ஒரு நிலை ஏற்படக் கூடாது. வீட்டார் பலவாறு ஏசுவார்கள். வேலை செய்யச் சொல்வார்கள். புத்திமதிகள் சொல்வார்கள். இவற்றையெல்லாம் சகித்துத் தான் உணவு பெற வேண்டும்'' என்று யோகநாதன் அரசமரத்தடியில் இருந்து கூறிக்கொண்டிருந்தார்'' என்றது குமரன் எலி.

''எதையும் செய்து பார்த்தால் தான் அதிலுள்ள கஷ்டம் தெரியும்'' என்றது லட்சுமி எலி.

**230. சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை**

''கதிரேசனது வீட்டுக்கு வந்த சாது சொன்னாராம், ''கொடுத்துதவும் பண்பு மனிதர்களால் மட்டுமல்ல மிருகங்களாலும், பறவைகளாலும் பேணப்பட்டு வருகின்றது. பறவைகளுள் மிகவும் முக்கியமானது காகம். விலங்குகளில் முக்கியமானது யானை, சிங்கம் கூடத் தான் உண்டு மிஞ்சியதைப் பிறமிருகங்களுக்குக் கொடுக்கிறது. உயிர்களுக்குச் சாவதை விட மிகக் கொடுமையானது எதுவும் இல்லை. ஏழைகளுக்கு உதவ முடியாத நிலை வந்ததால் இறந்த அரசர்கள் பலர் உண்டு. நான் துறவி. வாங்கி உண்டே உயிர் வாழ்கிறேன். சிலர் என்னைப் போலித் துறவியென்று ஏசி எதுவும் தராத போது பசியின் கொடுமையால் இறக்க வேண்டும் என்ற எண்ணம் கூட உருவாகும். அப்படியான நிலையைப் போக்கும் உன்னை வாழ்த்துகிறேன்'' என்று சொல்லக் கதிரேசன் சொன்னாராம், ''நான் ஐம்பது வருடங்களுக்கு முன் மிகவும் ஏழையாக இருந்த போது எனது இனத்தவர் பசியால் வந்து இரந்தார். அப்போது அவருக்குக் கொடுக்க என்னிடம் எதுவும் இருக்கவில்லை. அப்போது நான் பட்ட வேதனையைச் சொல்ல முடியாது. அவர் மூன்று தினங்களின் பின் இறந்து விட்டார். அதை நினைத்து இப்போதும் துன்பப்படுகிறேன். நான் இறக்கும் வரை அத்துன்பம் இருக்கும் என்று சொன்னதாக யோகநாதன் கூறிய போது எனக்கும் கவலையாக இருந்தது'' என்றது குமரன் எலி.

“கோடியில் ஒருவர் தான் அப்படி இருப்பார்” என்றது லட்சுமி எலி.

**புகழ் - 24**

**231. ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு**

“மகனே, உண்மையான புகழை நீ உன் வாழ்நாளில் பெறுவாய். அப்புகழ் உலகம் உள்ள வரை நிலைத்திருந்து உனது பெயரைச் சொல்லும். வறுமைப்பட்டவர்களுக்குக் கொடுப்பதற்குப் பெரும்பான்மையானோர் விரும்புவதில்லை. பெயருக்காகவும், புகழுக்காகவும் தான் பொருளுள்ளவர்களுக்குக் கொடுக்கிறார்கள். பொருளுள்ளவனின் வார்த்தைகள் இறைவனின் வாக்கென்றும் நினைக்கின்றனர். பொருளுள்ளவன் உணவை உண்டு விட்டுக் குறை சொல்லுகிறான். பொருட்களைக் கொடுத்ததால் அலட்சியப்படுத்துகிறான். ஆனால் வறியவன் உணவைப் பொன்னாகப் போற்றுவான். பொருளைக் கடவுள் தான் தந்ததாக நினைத்து மகிழ்வான். அதனால் தான் இவ்வூரவர் உன்னைப் புகழ்கின்றனர். தொடர்ந்து வறியவர்களுக்கு உதவிகளைச் செய். அது தான் உனது உயிருக்கு உறுதியும், அழியாத வாழ்வையும் தரும்” என்று தவசி கூறிய போது கதிரேசன் பேசமுடியாது நின்றார்” என்றது குமரன் எலி.

“சென்றவாரம் திருநாவுக்கரசு தனது வீட்டில் ஊரவர்களுக்கு உணவு கொடுத்தவர். சாப்பிட்டு விட்டு பலரும் பலவிதமான குறைகளைச் சொன்னதாகத் திருநாவுக்கரசு கவலைப்பட்டவராம். வைபவத்தின் போது பொதுவாகத் தானே சமைப்பர். வீட்டில் சமைப்பது போலத் தனித் தனியே சமைக்க முடியுமா? புத்தியில்லாத சனங்கள்” என்றது லட்சுமி எலி.

**232. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்**

“மடத்தின் அருகே நிற்கும் அரச மரநிழலில் கூடியிருப்போர் ஊரவரைப் பற்றிக் கதைப்பர். ஒருவர் கதைத்து விட்டு எழுந்து சென்ற பின் அவரைப் பற்றிக் கதைப்பார்கள். ஆனால் சிலர் மனச்சாட்சிக்கு மாறாகக் கதைக்கமாட்டார்கள். நவரத்தினம் அன்று சொன்னான்,“நான் மிகவும் வறியவன். எனது மகள் அகல்யா மருத்துவ பீடத்திற்குத் தெரிவான போது நான் அவளது படிப்புச் செலவைச் சமாளிக்க முடியாதென்று நினைத்து அவளுக்குத் திருமணம் செய்து வைக்க முயற்சித்தேன். அப்போது எனது வீட்டுக்கு வந்த கதிரேசனும், நடராசாவும் தாம் அகல்யாவின் கல்விக்கான முழுச் செலவையும் ஏற்பதாகக் கூறினார். அதனால் அவள் படித்து முடித்து வைத்தியராகி ஏராளமாக உழைக்கிறாள். நானும் வசதியாக வாழ்கிறேன். அவர்கள் இருவரும் கடவுள்கள். ஊரில் எத்தனை பேருக்கு உதவி செய்துள்ளனர். அவர்களிடம் உதவி பெற்றவர்கள் தமது பூசை அறைகளில் அவர்களின் உருவப்படத்தை வைத்து வணங்குகின்றனர்” என்று சொல்லிக் கொண்டிருந்தார்” என்றது குமரன் எலி.

“வறியவர்களுக்குச் செய்யப்படும் உதவிகள் பெருமையாகப் பேசப்படும். உருத்திரகுமாரன் நவரத்தினத்தின் இனத்தவன். முன்பு உதவி கேட்ட போது செய்யவில்லை. இப்போ வருத்தம் வந்தால் அகல்யாவிடம் தான் செல்கிறான். அகல்யா ராசியான வைத்தியர் என்றும் சொல்வான். வெக்கமில்லாத பிறவி” என்றது லட்சுமி எலி.

**233. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்.**

“வைத்திலிங்கம் மத்திய மகா வித்தியாலய விளையாட்டுக்குப் போட்டிக்கு அகல்யாவை விருந்தினராக அழைத்திருந்தனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அகல்யா பரிசுகளை வழங்கி விட்டுப்

பேசினாள்,‘‘நான் இந்த நிலைக்கு வரப் பலர் காரணமாக இருந்தனர். முதலாவது இப்பாடசாலை. ஊரில் நல்லதொரு பாடசாலை இருந்தமையால் தான் என்னால் கற்க முடிந்தது. அதனால் இதன் நிறுவுனரையும், அவருக்கு உறுதுணையாக இருந்த நமசிவாயகம் ஐயாவையும், பெரும் தருமவானான கதிரேசனையும், தருமவானான நடராசாவையும் என்னால் மறக்க முடியாது. தாம் பெறும் ஓங்கு புகழைத் தவிரக் கூட வந்து நிலைத்திருந்து பேரின்பத்தைத் தருவது வேறு எதுவும் இல்லை என்று உணர்ந்தவர்களால் தான் ஏழைகளுக்குச் சேவை செய்ய முடியும்’’ என்று பேசமுடியாது அகல்யா விம்மி விம்மி அழுததை முகட்டில் இருந்து பார்த்தேன்’’ என்றது குமரன் எலி.

‘‘சிலர் தான் பழையவற்றை நினைவு கூறுவார்கள். பலர் தாம் உயர்ந்து விட்டால் பழையவற்றை மறந்து விடுவார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**
**போற்றாது புத்தேள் உலகு.**

‘‘விக்கி விசும்பி அழுத அகல்யா தன்னைத் தேற்றிக் கொண்டு மீண்டும் பேசினாள், ‘‘கதிரேசனை ஊரவர் கடவுளாகவே நினைக்கின்றனர். காணும் போதெல்லாம் வணங்குகின்றனர். தமது பிள்ளைகளுக்கு பெயர் சூட்டுவிக்கின்றனர். ஏடு தொடக்குவிக்குகின்றனர். முக்கிய நிகழ்வுகளில் ஆசிபெறுகின்றனர். இவையெல்லாம் அவர், நமர், பிறர் என்று பாராது உதவிகள் பலவும் செய்தமையாலும், ஒழுக்கமாக வாழ்த்தினாலும் தான் கிடைக்கின்றன. புராணங்களை எடுத்து நோக்கினால் கடவுள்கள் கூட கொடுத்துதவியர்களைப் பாராட்டிப் புகழ்ந்திருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக அரிச்சந்திரனது கதையைச் சொல்லலாம். அதனால் கதிரேசனைப் பற்றியும் தேவர்கள் புகழ்வார்கள்’’ என்று அகல்யா உணர்ச்சி பொங்கப் பேசிய போது நானும் மெய்மறந்து போனதால் முகட்டால் வழுக்கி விழுந்து விட்டேன். பின் ஒருவாறு சமாளித்து விட்டேன்’’ என்றது குமரன் எலி.

‘‘நல்ல காலம் விழுந்திருந்தால் நான் தாலியையும், பூவையும், பொட்டையும் இழந்திருப்பேன்’’ என்று கவலைப்பட்டது லட்சுமி எலி.

‘‘புரிசனை மதிப்பதில்லை. காஞ்சிபுரம் சேலை கட்டவும், தாலி போடவும், குங்குமத்திற்காகவும் தான் சில பெண்களுக்குப் புரிசன் தேவை’’ என்றது குமரன் எலி.

**235. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்**
**வித்தகர்க்கு அல்லால் அரிது**

‘‘கதிரேசனது தாய்மாமன் நந்தகுமார். பெரும் அறிவாளி. ஆசிரியர். தருமவான். நந்தகுமாரின் தகப்பன் மாணிக்கவாசகர். ஏராளமான சொத்துக்களைச் சேர்த்து வைத்திருந்தார். அவரும் கதிரேசனைப் போலவே ஏழைகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்தார். அவர் இறந்ததும் நந்தகுமாரன் தந்தையைப் போல ஏழைகளுக்கு உதவி வந்தார். அவருக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் அவர் தான தர்மம் செய்வதை அதிகரித்தார். இறுதிக் காலத்தில் அவர் ஏழையானார். அதனால் அவர் கதிரேசனுடன் வந்து வாழத்தொடங்கினார். அவர் சொல்வாராம்,‘‘ஒரு தருமவானுக்குச் செல்வம் குறையக் குறையப் புகழ் வளரும். அவரின் உடம்பு அழிந்தாலும் புகழ் அழியாது’’ என்பாராம். அது உண்மை. அவரது கொடையைப் பாராட்டி இவ்வூரில் உள்ள பாடசாலையின் மண்டபம் ஒன்றிற்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.பல சனசமூக நிலையங்களுக்கும், பல சமய நிறுவனங்களுக்கும் அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. உடல் மெலியாமல், செல்வம் குறையாமல் கதிரேசன் இருப்பதற்குக் காரணம் அவரது பிள்ளைகளெல்லாம் பெருந்தனவந்தர்கள். அவர்கள் அள்ளிக் கொடுப்பதால் கதிரேசனது செல்வம் கிணற்று நீர் போல் அள்ள அள்ளக்

குறைவதில்லை'' என்று யோகநாதன் அரசமர நிழலில் இருந்து சொல்லிக் கொண்டிருந்தார்'' என்றது குமரன் எலி.

''புண்ணியவான்கள் இறந்தும் வாழ்கிறார்கள். பாவிகள் உயிரோடு இருந்தும் இறந்தவர்களாகக் கணிக்கப்படுகிறார்கள். ஊரில் எத்தனை பேர் தமது பிள்ளைகளுக்கு நந்தகுமாரனின் பெயரைச் சூட்டியுள்ளனர்'' என்றது லட்சுமி எலி.

**236. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதுஇலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

''பரஞ்சோதி பாடசாலை மண்டபம் ஒன்றைக் கட்டித் தருவதாகக் கூறினார். ஒரு வருடத்துள் அக்கட்டிட வேலைகள் முடிவடைந்து விட்டன. உருத்திரகுமாரன் தனது தந்தையின் நினைவாக பாடசாலைக்கு ஒரு மண்டபம் கட்டித் தருவதாகக் கூறி அத்திவாரம் இடப்பட்டு ஐந்து வருடங்கள் கழிந்தும் இன்றும் வேலை தொடக்கப்படவில்லை. ஒரு வேலையைச் செய்வதாக இருந்தால் அவ் வேலையின் மூலம் பெரும் புகழ் வரக் கூடியதாகச் செய்தல் வேண்டும். புயலால் மரம் சாய்ந்ததால் கடந்த ஒரு வருடகாலமாகப் பிள்ளைகள் மரநிழலில் இருந்து கற்றனர். அந்தக் கஷ்டத்தை இப்போது நீக்கியமையால் ஊரவர் எல்லோரும் பரஞ்சோதியைப் புகழ்கின்றனர். அது போல உருத்திரகுமாரனை இகழ்கின்றனர். கஜேந்திரன் அப்பவே சொன்னவனாம். இவர் கட்டிக் கொடுக்க மாட்டார். புகழுக்காகச் சொல்கிறார்'' என்று. அவன் காலமை அதைப் பற்றிச் சொன்னவன் என்று யோகநாதன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''செய்யக் கூடியதைத் தான் சொல்ல வேண்டும். செய்ய முடியாததைச் சொல்லக் கூடாது என்று பெரியவை சொல்வினை. இப்போ வாழும் மனிதர்கள் புகழுக்காக அலைகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**237. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை**
**இகழ்வாரை நோவது எவன்.**

''யோகநாதன் கதைத்துக் கொண்டிருந்த போது உருத்திரகுமாரன் வந்து கேட்டுக்கொண்டிருந்திருக்கிறான். கதையின் சுவையில் யாரும் அதைக் கவனிக்கவில்லை. திடீரென்று உருத்திரகுமாரன் யோகநாதனைத் தாக்கத் தொடங்கினான். பாவம் யோகநாதன். நிலத்தில் விழுந்ததால் தலையில் பெருங்காயம் ஏற்பட்டுவிட்டது.'' ''முதலில் இந்த அரசமரத்தை வெட்ட வேண்டும். இருபத்து நான்கு மணி நேரமும் இதன் கீழ்க் கூடியிருந்து ஊர்க்கதை கதைக்கிறியள். உங்களுக்கு வீடுகளில் வேலை இல்லையா?'' என்று உருத்திரகுமாரன் கேட்டதற்குச் சிற்றம்பலம் சொன்னார்,''உண்மையைத் தானே அவர்கள் கதைத்தார்கள். பரஞ்சோதி சொல்லி ஒரு வருடமாகு முன் வேலையை முடித்து விட்டார். நீ சொல்லி ஐந்து வருடங்களாகியும் இன்னும் வேலை தொடங்கவில்லை. செய்ய முடியாத செயல்களைச் செய்து தருவதாக ஏன் கூறுவான்? செய்து முடிக்காததால் தான் அவர்கள் கதைத்தார்கள். அவ்வேலையைச் செய்யாததையிட்டு உன்னை நீ நொந்து கொள்வதை விட்டு விட்டு உன்னை இகழ்ந்து பேசுவோரைப் பேசுவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? இன்னும் இகழ்ச்சி தான் உண்டாகும்'' என்று கூறிய போது உருத்திரகுமாரன் வாயில் வந்தபடி ஏசியவாறு சென்றான்'' என்றது குமரன் எலி.

''இங்குள்ள பலர் தம்மில் குறைகளை வைத்துக் கொண்டு பிறரிடம் குறைகண்டு பிடிக்கிறார்கள். இது மனிதனின் இயல்பு போலும்'' என்றது லட்சுமி எலி.

**238. வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்**
**எச்சம் பெறாஅ விடின்.**

“ஆத்திரத்துடன் சென்ற உருத்திரகுமாரன் சற்று நேரத்தில் திரும்பி வந்து,“இன்னும் நீங்கள் போகவில்லையா? உங்களை அடித்துத் தான் துரத்த வேண்டும்” என்று கூறிய போது சிற்றம்பலம் சொன்னார்,“நீ மீண்டும் மீண்டும் பழியைத் தான் சேர்க்கிறாய். யோகநாதனுக்கு எண்பது வயது. காயம் பெரிதானபடியால் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது வைத்தியரும், வைத்தியசாலையில் நின்ற காவல்துறையினரும் இக்காயம் எப்படி ஏற்பட்டதென்று துருவித்துருவிக் கேட்டனர். யோகநாதன்நல்ல மனிதன். கால் இடறி விழுந்து விட்டதாகச் சொன்னார். அவர் நீதான் அடித்தனி என்று சொன்னால் காவல்துறை உன்னைக் கைது செய்திருக்கும். தற்செயலாக அவர் இறந்திருந்தால் நீ வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்க வேண்டி வந்திருக்கும். கற்ற நீ இதையெல்லாம் உணரமாட்டாயா..? ஒருவன் வாழும் போதும், இறந்த பின்பும் எஞ்சியிருப்பது புகழ் மட்டும் தான். புகழைத் தேடிக் கொள்ளாதவர்கள் பாவிகள். அவர்கள் உலகத்தவரால் இழக்கப்படுவது இயல்பு. நீ கேட்டதால் சண்டைக்கு வருகிறாய். உனக்குக் கேட்காமல் பேசப்படும்இகழ்வான பேச்சுக்கு என்ன சொல்லப் போகிறாய்?” என்று கேட்ட போது உருத்திரகுமாரனால் பேச முடியவில்லை” என்றது குமரன் எலி.

“இவற்றைப் பற்றியெல்லாம் யார் கவலைப்படுகிறார்கள். தாமே பணம் கொடுத்து மேடை அமைத்து பேச்சாளரைக் கொண்டு புகழ்விக்கிறார்கள். ஏற்பாட்டாளர்களுக்கும் தமது நலனுக்காகச் செயற்படுகிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**239. வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா**
**யாக்கை பொறுத்த நிலம்**

“உருத்திரகுமாரா நீ ஆசிரியர். அதுவும் பட்டதாரி ஆசிரியர். நீ கற்றபடி வாழ்கிறாயா..? இயற்கையைப் பார். அது அங்கு வாழும் மக்களின் நடத்தைக்கேற்பவே செயற்படுகிறது. இருபது வருடங்களுக்கு முன இராமநாதனின் வீட்டில் கொள்ளையடித்தவர்கள் போன வாரம் அகப்பட்டிருக்கிறார்கள். சென்ற வருடம் கோவிலில் கலாட்ட செய்த குமார் விபத்தொன்றில் சிக்கி கோவில் பக்கம் வரமுடியாதிருக்கிறான். உனது வயலில் பத்து வருடங்களுக்கு முன் விளைந்த நெல்லில் பத்தில் ஒரு பகுதி கூட இப்போ விளைவதில்லை. கதிரேசனின் வயலைப் பார். சென்ற வருடத்தை விட இந்த வருட விளைச்சல் அதிகரித்திருக்கு. இதெல்லாம் அவனவன் செய்யும் புண்ணியத்தின் பயன்கள். பூமாதேவி பொறுமையானவள். எல்லோருக்கும் தாய். அதனால் தான் பாவிகளையும், தீயவர்களையும் தாங்க வேண்டியது தனது கடன் என்று எண்ணித் தாங்கிய போதும் விளைச்சலைக் குறைக்கிறாள். இது உனக்குப் புரியாது” என்று சிற்றம்பலம் கோபமாகக் கூறினார்” என்றது குமரன் எலி.

“கோபமாகக் கூறினாலென்ன? சிலர் தாம் நினைத்ததைத் தான் செய்வர் என்று சிற்றம்பலத்திற்குத் தெரியாதோ..?” என்று கெட்டது லட்சுமி எலி.

**240. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய**
**வாழ்வாரே வாழா தவர்.**

“எதைச் சொன்னாலும் புரிந்து கொள்ளக் கூடியவனுக்குத் தான் புரியும். இருந்த போதும் பெரியவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லியே தீருவர். நான் சொல்வது உனக்கு இப்போ பிடிக்காது என்று எனக்குத் தெரியும். ஆனால் காலம் ஒரு மாதிரியானதல்ல. அதனால் ஒரு காலத்தில் புரிந்து கொள்வாய். ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் பழியுண்டாகாமல் வாழ்பவர்கள் தான் உண்மையில் உயிருள்ளவர்கள். பழிச்சொற் கேட்டு **வாழ்**கின்றவர்கள் உயிருள்ள பிணங்கள். இது கற்ற உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை” என்று கூறிவிட்டு எழுந்து சென்றார் சிற்றம்பலம்” என்றது குமரன் எலி.

‘‘அவர் சொல்வதிலும் ஞாயம் இருக்கிறது. யார் கேட்கிறார்களோ இல்லையோ பெரியவர்கள் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லத் தான் வேண்டும்’’ என்றது லட்சுமி எலி.

**அருள் உடைமை – 25**

**241. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள.**

‘‘மாலை நான்கு மணிக்குத் திருநாவுக்கரசு மோட்டார் வண்டியில் பட்டத்திற்குச் சென்று விட்டுத் திரும்பி வரும் போது நடுவீதியில் பலர் கூட்டமாக நின்றனர். திருநாவுக்கரசு வண்டியை நிறுத்தி விட்டு இறங்கிப் பார்த்தார் உருத்திரகுமாரன் விபத்துக்குள்ளாகியிருந்தான். சுற்றி நின்றவர்கள் குழுக்குழுவாக நின்று கதைத்தார்களே தவிர உருத்திரகுமாரனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவில்லை. அதைக் கண்டு பதறிய திருநாவுக்கரசு தனது வண்டியில் அவனை ஏற்றி வைத்தியசாலையில் அனுமதித்து விட்டுத் திரும்பி வந்த போது யோகநாதன் சொன்னார், ‘‘அவன் பெரிய பணக்காரன். திமிர் பிடித்தவன். பணத்தால் எதையும் செய்யலாமென நினைப்பவன். அத்துடன் பெரிய காயமில்லை. அதை விடத் தன்னை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு கேட்கவும் இல்லை’’ என்றார். அதற்குத் திருநாவுக்கரசு சொன்னார், ‘‘ஒருவருக்குத் துன்பம் நேர்ந்தால் அவனுக்கு உதவி செய்தல் வேண்டும். அவன் ஜென்ம விரோதியாக இருந்தாலும் உதவி செய்வது மனிதாபிமானமாகும். பணம், இழிந்தவர்கள், தீயவர்கள், முட்டாள்கள் எல்லோரிடத்திலும் இருக்கும். ஆனால் மனிதமனங்களுள் அருள் இருத்தல் வேண்டும். நாளை எமக்கொரு துன்பம் ஏற்பட்டால் உதவி செய்ய ஆட்கள் வேண்டும். அருளாகிய இரக்கம் தான் செல்வங்களுள்ச் சிறந்த செல்வமாகும்’’ என்று சொன்னார். யாரும் அதைக் கேட்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை’’ என்றது குமரன் எலி.

‘‘சனம் இப்போ கெட்டுப்போய்ச்சு. பெற்றோர்களை வயோதிபர் மடங்களில் விடுகிறார்கள். இவர்களுக்கு அருளைப் பற்றி என்ன தெரியும்’’ என்றது லட்சுமி எலி.

**242. நல்ஆற்றான் நாடி அருள் ஆள்க பல்ஆற்றான்**
**தேரினும் அஃதே துணை.**

‘‘அப்போது அங்கே கஜேந்திரன் வந்து, ‘‘கொடுமைகள் செய்யும் உருத்திரகுமாரனுக்குக் கடவுளின் தண்டனை கிடைத்துள்ளது’’ என்று சொல்லத் திருநாவுக்கரசு சொன்னார்,‘‘கஜேந்திரா, உருத்திரகுமாரன் கெட்டவன் தான். ஆனால் உனது நண்பன். இருவருமாகச் சேர்ந்து தானே தீயசெயல்களிலீடுபட்டீர்கள். அவனுக்குக் கிடைத்த தண்டனை உனக்குக் கிடைக்காதா? நன்றாகச் சிந்தித்துப்பார். அவனிடம் நீ உதவிகள் பெற்றுள்ளாய். இப்படிக் கதைக்கக் கூடாது. எந்த வழியில் ஆராய்ந்து பார்த்தாலும் மனிதர்கள் இரக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அருள்தான் மனிதனுக்கு வழித்துணையாவது, அவனை முன்னேற்றுவது. அருள் இரக்கத்தை உண்டாக்கும். இரக்கம் உயிர்கள் மீது பற்றை உண்டாக்கி நட்பை வளரச் செய்யும். நட்பு வாழ்க்கைக்குரிய அனைத்து வழிகளையும் சிறப்பிக்கும். அதனால் அருளோடு வாழ்’’ என்றார். இப்போ கஜேந்திரனுக்கு திருநாவுக்கரசு உதவிகள் பலவும் செய்வதால்,‘‘நீங்கள் சொல்வது சரி. நான் இப்போதே வைத்தியசாலைக்குச் சென்று அவனுக்கு உதவி செய்கிறேன்’’ என்று கூறி விட்டுச் சென்றான்’’ என்றது குமரன் எலி.

‘‘தான் நல்லவன் என்று திருநாவுக்கரசு நினைக்கட்டும் என்று கஜேந்திரன் கூறியிருப்பான். வைத்தியசாலைக்குச் சென்றிருக்கமாட்டான்’’ என்றது லட்சுமி எலி.

**243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை**

**இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல**

‘‘இன்று திருநாவுக்கரசுவை மடத்தில் சந்தித்த கஜேந்திரன் சொன்னான், ‘‘ஐயா, நீங்கள் சொன்னதுக்காக நான் வைத்தியசாலைக்குச் சென்று உருத்திரகுமாரனைப் பார்த்தேன். அவன் என்னை மிகத்தரக் குறைவாகப் பேசினான், ‘‘பிச்சைக்காரப்பயலே, உனக்கும் எனக்கும் என்ன உறவு இருக்கு. வீட்டுக்கு வீடு சென்று கூலி வேலை செய்யும் நீ ஏதோ உள்நோக்குடன் தான் வந்திருப்பாய்’’ என்றெல்லாம் பேசினான். நான் முன்னைய ஆளாக இருந்தால் அடித்து முறித்திருப்பேன். நீங்கள் எனக்குப் புத்தி சொன்ன பின் எனது மகளும் அழுதழுது சொன்னாள், ‘‘அப்பா ஏழையாகப் பிறப்பது வெட்கமல்ல. ஏழையென்று சொல்லிப் பிச்சையெடுப்பதும், தீயசெயல்களைச் செய்வதும் தான் வெட்கம். உங்களது செயலால் நாம் அவமானப்படுகிறோம், வேதனைப்படுகிறோம்’’ என்றவள். அதன் பின் நான் திருந்த முயற்சிக்கிறேன்’’ என்றான். அதற்குத் திருநாவுக்கரசு சொன்னார், ‘‘கஜேந்திரா, அறியாமையால் தீயவற்றைச் செய்து வாழ்கின்றவர்கள் என்றும் துன்பத்தையே அனுபவித்தாலும் திருந்தமாட்டார்கள். அருள் என்ற இரக்கம் உள்ளவர்களுக்கு ஒரு போதும் துன்பமான வாழ்வு ஏற்படமாட்டாது. அதனால் கவலைப்படாதே’’ என்றார்’’ என்றது குமரன் எலி.

‘‘தீயவர்களுக்கு எதையும் சொல்லவும் முடியாது. சொன்னாலும் கேட்கமாட்டார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**244. மன்உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு இல்என்ப**
**தன்உயிர் அஞ்சும் வினை.**

‘‘அப்போது அங்கே வந்த யோகநாதன் சொன்னார்,‘‘இன்று கதிரேசண்ணை உருத்திரகுமாரனைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்ற போது உருத்திரகுமாரன் விம்மி விம்மி அழுதானாம். பின்,‘‘நீங்கள் அன்று என்னை வைத்தியசாலையில் சேர்க்காவிட்டால் நான் இறந்திருப்பேன். நான் இதுவரை எனது குடும்பத்திற்குரிய எந்தக் கடமைகளையும் செய்யவில்லை. இரண்டு மகள்மாருக்கும் திருமணம் செய்யவில்லை. மூத்தவளுக்கு முப்பது வயது. பேசும் சம்பந்தங்களைக் குழப்புகிறார்கள். அவளின் கடமைகளை முடிக்காது இறந்து விடுவேனொ’’ என்று அழுதானாம் என்று கதிரேசன் சொன்னவர் என்று யோகநாதன் கூறத் திருநாவுக்கரசு சொன்னார்,‘‘உலகில் வாழும் உயிர்களுக்குத் துன்பம் செய்யாது உதவிகள் செய்து அருள் வாழ்வு வாழ்ந்தால் தன்னுடைய உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற இழிந்த நிலை ஏற்படாது’’ என்று சொல்லியதை நான் கேட்டேன்’’ என்றது குமரன் எலி.

‘‘தீயவர்கள் எந்நேரமும் எதைப் பற்றியாவது சிந்தித்து அஞ்சியபடி தான் இருப்பார்கள். ஒவ்வொரு தீயசெயல்களைச் செய்யும் போதும் தனது உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சிக் கோவிலில் கடவுளைப் பிராத்திப்பதை நான் கண்டுள்ளேன்’’ என்றது லட்சுமி எலி.

**245. அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்**
**மல்லல்மா ஞாலம் கரி.**

‘‘உண்மை தான் ஐயா, நான் முதியவனாக இருந்தும் இருள் நெஞ்சம் இல்லாததால் கஜேந்திரன், உருத்திரகுமாரன், மார்க்கண்டு போன்றவர்களின் செயற்பாடுகளை விமர்சித்தேன். அதனால் தான் எனக்கு உருத்திரகுமாரன் அடித்தான். அதன் பின்பு நீங்கள் கூறியவற்றைக் கேட்டு நான் உருத்திரகுமாரனைப் பற்றிக் காவல்துறையிடம் முறையிடாது கல் தடக்கி விழுந்தேன் என்று கூறினேன். அதனால் மகிழ்ச்சியும், நிம்மதியும் ஏற்பட்டுள்ளது. காவல்துறையிடம் முறையிட்டிருந்தால் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அதற்குப் பணமும் செலவாகியிருக்கும். என்னிடம் பணம் இல்லை. அவனிடம் பணம்

குவிந்து கிடக்கு. பணத்தால் அவன் என்னைச் சிறையிலும் அடைத்திருப்பான்'' என்ற போது திருநாவுக்கரசு சொன்னார்,''நீ சொல்வது உண்மை. பழி வாங்கும் எண்ணமில்லாமல் அருளோடு வாழ்கின்றவர்களுக்கு ஒரு போதும் துன்பங்கள் வராது. அதற்குச் சாட்சியாகக் காற்றால் இயங்கும் இப்பெரிய உலகில் வாழ்கின்ற பெரியவர்களே சாட்சியாவார்'' என்று திருநாவுக்கரசு சொல்லிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''உண்மை தான். கதிரேசன், நமசிவாயகம், திருநாவுக்கரசு போன்றோர் துன்பப்பட்டதை யாரும் கண்டதில்லை'' என்றது லட்சுமி எலி.

**246. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி**
**அல்லவை செய்துஒழுகு வார்.**

''தவறுகள் செய்தல் இயல்பு. அதை உணர்ந்து திருந்துவதும் இயல்பு தான். யார் எதைச் சொன்னாலும், யார் எதைச் செய்தாலும், என்ன தண்டனைகள் கிடைத்தாலும் திருந்த மாட்டேன் என்று சொல்லி வாழ்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் இப்பிறப்பில் அல்ல முற்பிறப்புக்களிலும் அறத்தை மறந்து வாழ்ந்தவர்கள் என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. அதனால் கஜேந்திரா கவலையை விட்டு விடு. இப்படி நடக்கிறதே என்று நினைத்து மீண்டும் அறமல்லாதவற்றைச் செய்யாதே'' என்றார் திருநாவுக்கரசு. அதைக் கஜேந்திரன் ஏற்றுக் கொண்டான்'' என்றது குமரன் எலி.

''பணமில்லாதவை எப்பவும் பிறர் சொல்வதை ஏற்றுத் தான் ஆகவேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**247. அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லைப் பொருள்இல்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

''உண்மை தான் ஐயா, அருளில்லாதவர்களால் உலகத்தவர் எவருக்கும் நல்லது நிகழாது. அவர்களது குடும்பங்கூடத் துன்பப்படும். அருளுள்ளவன் ஏழையாக இருந்தாலும் பலரும் உதவ முன் வருவர்'' என்று யோகநாதன் கூறத் திருநாவுக்கரசு சொன்னார்,''அருளுள்ளவனுக்கு இவ்வுலகம் இரக்கம் காட்டும், உதவி செய்யும். ஆனால் பொருள் இல்லாதவனுக்கு இவ்வுலகம் நரகமாகத் தான் இருக்கும். அருளைத் தேடுவதற்கும் பொருள் தேவை. தான தர்மம் செய்தால் தான் அருள் உண்டாகும். அருள் உண்டானால் தான் மேலுலக வாழ்வு இன்பமாக இருக்கும். அதனால் மனிதர்கள் விரைவாகத் தர்ம வழியில் பணத்தைத் தேடித் தான தர்மங்கள் செய்து அருளைத் தேடி வேண்டும்'' என்றார் திருநாவுக்கரசு. ''உண்மை தான் ஐயா,இளவயதில் என் போன்றோர் தீய வழியில் வாழ்ந்தமையால் முதியவரானதும் துன்பப்படுகிறார்கள்'' என்றார் யோகநாதன். திருநாவுக்கரசு எதுவும் பேசவில்லை'' என்றது குமரன் எலி.

''காலங்கடந்த பின்பு தான் பலருக்கு ஞானம் வருகிறது'' என்றது லட்சுமி எலி.

**248. பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்**
**அற்றார்மற்று ஆதல் அரிது**

''நான் ஒரு காலத்தில் மிகவும் வறுமைப்பட்டவனாகவே வாழ்ந்தேன். உள்நாட்டில் நடைபெற்ற யுத்தம் பலரை பிச்சைக்காரர்களாக்கியது. எனது சகோதரன் வெளிநாட்டில் வசித்தமையால் என்னை அவன் தான் வாழும் நாட்டிற்கு அழைத்தான். அதனால் இன்று நான் பெரும் பணக்காரனாகி விட்டேன். பொருளற்ற பலர் இன்று பொருளைத் தேடிய பெரும் பணக்காரர்களாக வாழ்கிறார்கள். ஆனால் அருளற்றவன் ஒரு போதும் மதிக்கப்பட மாட்டான். சிறப்பாக வாழவும் மாட்டான். உருத்திரகுமாரன் பெரும் பணக்காரன். இரக்கம் என்பதே இல்லாதவன். அதனால் அவனை யாரும் மதிப்பதில்லை. பொருள் இருந்தும் அவன்

நிம்மதியில்லாமல் துன்பத்துடன் தான் வாழ்கிறான். துரைராசா பெரும் பணக்காரரில்லை. இரக்கம் மிக்கவர். அவர் எனது தம்பியின் தோப்பில் கூலியாக வேலை செய்தாலும் இரக்கம் மிக்கவர். அதனால் எல்லோரும் மதிக்கின்றனர். இதை இவ்வூரவர்கள் உணர வேண்டும்'' என்று திருநாவுக்கரசு கூறினார்'' என்றது குமரன் எலி.

''புத்திமதிகளைக் கேட்கும் போது எல்லோரும் தலையாட்டுவினை. பின் செய்ததைத் தான் செய்வினை. இதற்கு யோகநாதனும் கஜேந்திரனும் விதிவிலக்கல்ல'' என்றது லட்சுமி எலி.

**249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்.**

''அருளற்றவர்கள் எப்போதும் சுயநலம் மிக்கவர்களாகவே காணப்படுவர். அவர்கள் பிரதிபலன் பாராமல் யாருக்கும் உதவி செய்யமாட்டார்கள். உருத்திரகுமாரன் தான் கஜேந்திரனுக்குக் கொடுத்த பணம், பொருள் யாவற்றையும் எழுதி வைத்திருக்கிறான். அத்துடன் கஜேந்திரன் மது குடித்த போது அவனிடம் எழுதி வைத்த பத்திரத்தில் கையொப்பமும் வாங்கியிருக்கிறான். இப்போது அவன் கஜேந்திரனுக்கு சட்டத்தரணி மூலம் உரிய திகதியில் பணம் கொடுக்காவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போவதாக மிரட்டி வருகிறான். அதற்குப் பயந்த கஜேந்திரன் என்னிடம் வந்து சொல்லி அழுதான். நான் இரக்கப்பட்டு அவன் வாங்கிய தொகைக்கு வட்டியம் போட்டுக் கொடுத்தேன்'' என்று சொல்லிய போது யோகநாதன் சொன்னார், ''எனது மனைவிக்குப் புற்று நோய் வந்த போது உருத்திரகுமாரனிடம் பணம் கேட்டேன். அவன் தந்து விட்டுக் கையொப்பமிடுமாறு சொன்னான். நான் கையொப்பமிட்டேன். இப்போ நான் குடியிருந்த காணி அவனின் பெயருக்கு மாறிவிட்டது. அவன் திட்டமிட்டுச் செயலாற்றுவதில் கெட்டிக்காரன்'' என்று பெரு மூச்சுவிட்டார் யோகநாதன்'' என்றது குமரன் எலி.

''அருள் இல்லாதவனின் அறச்செயல் அறிவற்றவன் ஒரு நூலின் உண்மைப் பொருளை உணர்ந்ததாகச் சொல்வதை ஒக்கும்'' என்று திருநாவுக்கரசு கூறினார்'' என்றது குமரன் எலி.

''இங்கு பல பேர் இப்படி ஏமாற்றித்தான் காணிகளைப் பெற்றவை'' என்றது லட்சுமி எலி.

**250. வலியார் முன் தன்னை நினைக்கதான் தன்னின்**
**மெலியார்மேல் செல்லும் இடத்து.**

''ஐயா உருத்திரகுமாரன் பயப்படுவது பரஞ்சோதி ஐயாவுக்கு மட்டும் தான். பரஞ்சோதி இவ்வூரில் வர்த்தக நிறுவனத்தை நிறுவிய போது மக்கள் எல்லோரும் பரஞ்சோதியைப் புகழ்ந்தனர். உருத்திரகுமாரன் ஆட்களை ஏவிப் பரஞ்சோதியின் வர்த்தக நிலையத்திற்குத் தீ மூட்ட எத்தனித்தான். அதைக் கண்டு பிடித்த பரஞ்சோதி தனது ஆட்களை அனுப்பி உருத்திரகுமாரனைப் பிடித்து வந்து மரத்தோடு கட்டி விட்டுச் சொன்னார்,''உருத்திரகுமாரா, நான் எல்லோரையும் நேசிப்பவன், இரக்கமுள்ளவன். ஆனால் எனக்குத் துரோகஞ் செய்தால் சம்பந்தப்பட்டவரின் உயிரையும் எடுக்கத் தயங்கமாட்டன். இன்று உனக்கு அடித்த அடி போதும். இனி ஏதாவது செய்தாயேயானால் உன்னைக் கொலை கூட'' என்று சொல்ல உருத்திரகுமாரன் பயந்து நடுங்கிப் பரஞ்சோதியின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டவன். உருத்திரகுமாரனோடு கஜேந்திரனும் சென்றமையால் இவ்விஷயம் எமக்குத் தெரிய வந்தது என்று யோகநாதன் கூறிய போது நான் ஆச்சரியப்பட்டேன்'' என்றது குமரன் எலி.

''அடி உதவுற மாதிரி அண்ணன் தம்பி கூட உதவ மாட்டார்கள்'' என்று பெரியவை சொன்னதில் அர்த்தம் இருக்கு'' என்றது லட்சுமி எலி.

**251. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.**

“ஒரு வருடத்திற்கு முன்பு கஜேந்திரன் ஆறுமுகத்தின் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான ஆட்டுக் கடாவை களவாக அவிழ்த்துச் சென்றவனாம். இவ்வளவு காலமும் யார் அந்தக் கடாவை திருடியது என்று தெரியாமல் இருந்தது. கஜேந்திரனுடன் ஏற்பட்ட பிரச்சினையால் உருத்திரகுமாரன் ஆட்டுக்கடாவைத் திருடியது கஜேந்திரனும் அவனது குடிகார நண்பர்களும் என்று ஆறுமுகத்திற்குச் சொல்ல, ஆறுமுகம் அதைக் காவல்துறையில் புகாரிட இன்று மடத்தடிக்கு வந்த காவல்துறையினர் கஜேந்திரனையும் அவனது நண்பர்களையும் தேடியுள்ளனர். இதை அறிந்த அவர்கள் தலைமறைவாகி விட்டதோடு உருத்திரகுமாரனுக்கு இறைச்சி கொடுத்ததாகக் கூறியுள்ளனர். கஜேந்திரனைப் பற்றி ஊருக்குத் தெரியும். ஆனால் உருத்திரகுமாரனின் குடும்பம் மாமிசம் உண்பதில்லை. அதனால் உருத்திரகுமாரனுக்கு வீட்டில் பெரும் பிரச்சினை” என்று யோகநாதன் அரசமரத்தடியில் கூறியதைக் கேட்டேன். அதற்குத் திருநாவுக்கரசு சொன்னார், “உருத்திரகுமாரனின் குடும்பம் மாமிசம் உண்பதில்லை என்பதற்காகத் தான் பெண்ணின் தந்தை அவனுக்குப் பெண் கொடுத்தார். இவன் கேடு கெட்டவன். தனது உடம்பை வளர்க்க இன்னோர் உயிரின் உடம்பை உண்பவன் சிறிதும் அருள் உணர்வில்லாத தீயவன்” என்றவர்” என்றது குமரன் எலி.

“முன்பு சைவசமயத்தினர் மாமிசம் உண்பதில்லை. இப்போ சைவக்காரப் பெண்கள் மாட்டு இறைச்சி விற்கும் கசாப்புக் கடைகளில் நீண்ட வரிசையில் நின்று இறைச்சியை வாங்குகிறார்கள். நன்றாக முன்னேறி விட்டார்கள்” என்றது லட்சுமி எலி.

**252. பொருள்ஆட்சி போன்றாதார்க்கு இல்லை அருள்ஆட்சி
ஆங்குஇல்லை ஊன்தின் பவர்க்கு**

“கஜேந்திரனைக் காட்டிக் கொடுத்துப் பழி வாங்க எண்ணிய உருத்திரகுமாரனை மானபங்கப்படுத்தி விட்டான் கஜேந்திரன். உருத்திரகுமாரனின் மனைவியின் குடும்பம் ஒழுக்கமுள்ள உயர்வான குடும்பம். அதனால் உருத்திரகுமாரனுடன் மாமனார் பெரும் பிரச்சினைப்பட்ட போதும் அவனது மனைவி சரஸ்வதி தகப்பன் வற்புறுத்தியும் உருத்திரகுமாரனைப் பிரிந்து செல்ல விரும்பவில்லை. ஆனால் இதன் பிறகு அவள் தகப்பனுடன் சென்று விட்டாள். “பொருளைப் போற்றித் தர்மமான வழியில் செலவு செய்பவர்களுக்கு உள்ள சிறப்பு தர்மமான முறையில் செலவு செய்யாதவர்களுக்கு இல்லை. அது போல ஓர் உயிரின் உடம்பை விரும்பி அதைக் கொன்று திண்பவனுக்கு அருளுமில்லை, தர்மசிந்தனையும் இல்லை. அதனால் எனது மகளை அழைத்துச் செல்கிறேன்” என்று உருத்திரகுமாரனின் மாமன் கதிரேசனுக்குச் சொன்னவராம். கதிரேசன் எதுவும் சொல்லவில்லையாம் என்று யோகநாதன் திருநாவுக்கரசுவிற்குச் சொன்னதை நான் கேட்டேன்” என்றது குமரன் எலி.

“ரோசமில்லாதவன் இராசாவிலும் பெரியவன் என்று சொல்வார்கள். அது உருத்திரகுமாரனுக்குப் பொருந்தும்” என்றது லட்சுமி எலி.

**253. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.**

“கஜேந்திரனும், நாகராசாவும்,நாவேந்தனும் முன்பு சேர்ந்து பல தீயசெயல்களைச் செய்தவர்கள். இப்போது கஜேந்திரன் தனது மகளின் எதிர்காலம் தன்னால் பாதிக்கப்பட்டு விடுமெனப் பயப்படுகிறான். அதனால் நாவேந்தனோடும் நாகராசாவோடும் சேருவது குறைவு. சில தினங்களுக்கு முன்பு சிவசிதம்பரம்

தனக்கு ஒரு சேவலை உரித்துத் தரும்படி கேட்க கஜேந்திரன் சிவசிதம்பரத்தின் வீட்டுக்குச் சென்ற போது அங்கே திருநாவுக்கரசு இருந்தார். சிவசிதம்பரம் கஜேந்திரனைக் கண்டதும்,''கஜேந்திரா சேவலைப் பிடித்துக் கட்டியுள்ளேன். பிற்பக்கம் போ'' என்று சொன்னார். சிறிது நேரத்தில் திருநாவுக்கரசு சிவசிதம்பரத்திடம் விடை பெற்றுக் கொண்டு கோவிலடிக்கு வந்த போது கோவிலடியில் கஜேந்திரன் நின்றான். அவனைக் கண்ட திருநாவுக்கரசு சொன்னார்,''கஜேந்திரா, கொலை செய்யும் ஆயுதங்களை வைத்திருப்பவர்களது உள்ளத்தில் இரக்கம் இராது. அது போல ஓர் உயிரின் உடம்பை விரும்பி உண்பவர்களின் மனதில் இரக்கம் இராது. அதனால் சிவசிதம்பரத்துடன் இனி நான் பழகமாட்டேன். முன்பு அவன் மாமிசம் உண்பதில்லை. இப்போ உண்கிறான். உண்போன்றவர்கள் இல்லாவிட்டால் பலர் மாமிசம் உண்ண மாட்டார்கள். நீ கொலை செய்து அவ்வுடலைத் துப்பரவு செய்து கொடுப்பதால் தான் பலர் உண்கின்றனர்'' என்று கஜேந்திரனுக்கு திருநாவுக்கரசு கூறினார்'' என்றது குமரன் எலி.

''இப்போ மாமிசம் உண்ணாத குடும்பத்தைச் சேர்ந்த பலர் மாமிசம் உண்பதோடு மதுபான வகைகளையும் குடிக்கிறார்கள். சிவசிதம்பரத்திற்கு மதுபானம் வாங்கிக் கொடுப்பது கஜேந்திரன்'' என்றது லட்சுமி எலி.

**254. அருள் அல்லது யாதுஎனின் கொல்லாமை கோறல்**
**பொருள்அல்லது அவ்வூன் தினல்.**

''கஜேந்திரா ஓர் உயிரைக் கொல்லாமல் வாழ்வது தான் அறவாழ்வு. ஓர் உயிரைக் கொன்று அதன் உடம்பை உண்பது அருளும் ஆகாது, அறமுமாகாது என்று பெரியவர்கள் கூறுவார்கள். நீ உன் வாழ்நாளில் எத்தனை உயிர்களைக் கொன்றிருப்பாய். உனது வீட்டில் வளர்க்கப்படும் கோழிகளையும், ஆடுகளையும், மாடுகளையும் பார். அவை எவ்வளவு பாசத்துடன் தமது பிள்ளைகளை வளர்க்கின்றன. மனிதரை விடப் பறவைகளும் மிருகங்களும் தமது பிள்ளைகளை அன்புடன் வளர்ப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அப்படியிருக்க உன்னால் எப்படி அவ்வுயிர்களைக் கொல்ல முடிகிறது'' என்று கூறிய போது கஜேந்திரன் சொன்னான்,''ஐயா, ஊரில் பலர் மாமிசம் உண்பவர்கள். ஆனால் உயிர்களைக் கொல்லப் பயந்தவர்கள். நான் கூலிக்காக இதைச் செய்கிறேன். ஆனால் இதுவரை இது பாவம் என்று எனக்குத் தெரியாது'' என்று சொன்னான் கஜேந்திரன்'' என்றது குமரன் எலி.

''எந்த நேரமும் மதுபோதையில் இருப்பவனுக்குப் பாவம் பழி தெரியுமா?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**255. உண்ணாமை உள்ளத உயிர்நிலை ஊன்உண்ண**
**அண்ணாத்தல் செய்யாது அளறு.**

''உலகத்தில் உள்ள பலர் மாமிசத்தை உண்ணாதிருந்தால் பல உயிர்கள் அழிவின்றி நிலைத்து வாழும். புலால் உண்பவனை நரகம் விழுங்கி விடும். அவனை அது வெளியேற விடாது. நீ புலால் உண்பவன் மட்டுமல்ல, மற்றவர்கள் உண்பதற்காக உயிர்களைக் கொன்று அதன் உடல்களைத் துப்பரவு செய்து கொடுப்பவன். நீ செய்யும் தொழிலை எண்ணிப்பார். உயிர்களைக் கொன்று அதன் உடல்களைத் துப்பரவு செய்து கொடுக்க யாரும் இல்லாவிட்டால் உயிர்களைக் கொல்ல இயலாதவர்கள் மாமிசம் உண்ண முடியாத நிலை ஏற்படும். எண்ணிப்பார் உன்னால் எத்தனை பேர் மாமிசம் உண்கின்றனர். நீ எத்தனை உயிர்களை அழிக்கிறாய். சிவசிதம்பரம் எனது நல்ல நண்பன். அவன் மாமிசம் உண்பதைக் கேள்விப்பட்ட பின்பு என்னால் அவனோடு அன்பாகப் பழக முடியவில்லை'' என்று திருநாவுக்கரசு கஜேந்திரனுக்குச் சொல்லும் போது நான் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

“முன்பு இன்ன இன்ன உயிர்களைத் தான் கொன்று உண்ண வேண்டுமென்று மனிதர் நினைத்தனர். இப்போ எல்லா உயிர்களையும் கொன்று உண்கிறார்கள். பாலைத் தரும் தாய்யான பசுக்களையே ஈவிரக்கமின்றிக் கொல்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**256. தினற் பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்**
**விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.**

“கஜேந்திரா, எம்முரவரை நினைக்க எனக்கு வேதனையாக உள்ளது. முன்பு இக்கிராமத்தில் ஆட்டிறைச்சிக் கடை தான் இருந்தது. மாட்டுறைச்சி சாப்பிடுவாரில்லை. இப்போ எமது ஊரில் பத்து மாட்டுறைச்சிக் கடைகள் உள்ளன. மாடு தின்னாதவர்கள் இல்லை என்று நினைக்குமளவிற்கு இக்கிராமம் உள்ளது. முன்பு ஒரு மாடு செத்தால் அதைப் புதைத்து விடுவார்கள். இப்போ செத்தமாட்டை கசாப்புக் கடைக்காரன் விலைக்கு வாங்கிக் கடைக்குக் கொண்டு சென்று விற்கிறான். அந்தளவு கொடுமை இங்கே நடக்கிறது. முன்பு யாரும் மாட்டுறைச்சி உண்பதில்லை. அதனால் இவ்வூரில் கசாப்புக் கடைகள் இல்லை. இறைச்சி வியாபாரிகளும் இல்லை. இப்போ மாட்டுறைச்சியை உண்பதால் கடைகளும் வியாபாரிகளும் உள்ளனர். இது வேதனையான விடயம்'' என்று திருநாவுக்கரசு கூறியவர்'' என்றது குமரன் எலி.

“போன கிழமை உருத்திரகுமாரனது கறவைப் பசுவொன்று நோய்வாய்ப்பட்டுப் பல நாட்கள் வைத்தியம் செய்தும் பயனில்லாமல் இறந்தது. அதை உருத்திரகுமாரன் விற்று விட்டதாக அறிந்தேன்'' என்றது லட்சுமி எலி.

**257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்**
**புண்அது உணர்வார்ப் பெறின்.**

“கஜேந்திரா, புலால் என்பது ஓர் உயிரின் புண். அதுவும் இரண்டு வாரங்கள் நோய்வாய்ப்பட்டு இறந்த பசுவை உருத்திரகுமாரனுக்கு விற்க எப்படி மனம் வந்தது. உயிரோடு இருக்கும் நோய் இல்லாத பசுக்களையே முன்னையோர் இறைச்சிக்காக விற்பதில்லை. இப்போ இறந்த பசுக்களையும் விற்கிறார்கள். மாமிசம் உண்பவர்களுக்குத் தான் கொடிய நோய்கள் உண்டாகின்றன. அப்போ இறந்த பசுவின் மாமிசத்தை உண்பவர்களுக்கு என்னென்ன நோயுண்டாகும்'' என்று திருநாவுக்கரசு கூறிய போது கஜேந்திரன் சொன்னான்,“பலருக்கு வயிற்றோட்டம், வயிற்றுக்கோளாறு ஏற்பட்டு மருந்தெடுத்தார்கள். பின் அது இறந்த பசுவின் மாமிசம் என்று அறிந்து விற்பனை செய்த வியாபாரியை அடித்தார்கள்'' என்று திருநாவுக்கரசுவுக்கு கஜேந்திரன் கூறிக்கொண்டிருந்தான்'' என்றது குமரன் எலி.

“இப்ப எம்மையும் பிடித்துச் சாப்பிடும் அளவிற்கு மனிதர்கள் வந்து விட்டார்கள். மாடுகளை உண்ணாதவர்கள் இப்போ மட்டை உண்கின்றனர். காலப்போக்கில் எம்மையும் உண்டு விடுவர்'' என்றது லட்சுமி எலி.

**258. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்**
**உயிரின் தலைப்பிரிந்த ஊன்.**

“சிவசிதம்பரம் கஜேந்திரனுக்குச் சொன்னார்,“கஜேந்திரா, நீ அன்று வந்த போது நான் திருநாவுக்கரசு இருப்பதை அவதானியாது சேவலை உரித்துக் கொடு'' என்று சொன்ன சொல்லால் ஐம்பது வருடங்களுக்கு மேலாக இருந்த நட்பு இல்லாமற் போய்விட்டது. திருநாவுக்கரசு அதன் பின் என்னோடு கதைப்பதில்லை. எனது வீட்டுக்கு வருவதில்லை. நான் தேடிச் சென்று கதைத்த போது அவர் சொன்னார்,“குற்றமில்லாத நல்ல அறிவை உடையவர்கள் ஓர் உயிரைக் கொலை செய்த பின் அவ் உடம்பைத் தின்னமாட்டார்கள். பாவிகள்

தான் உண்பர். மாமிசத்தைப் புசிக்கும் உன்னை எனக்குப் பிடிக்கவில்லை. அத்துடன் புலால் உண்பவர்களை விட்டு துடக்கு என்னும் மாசு ஒரு போதும் அகலாது. அப்படியான மாசுள்ள வீட்டில் நான் எதையும் உண்ண மாட்டேன்'' என்றார். இது எனக்குப் பெரும் அவமானமாகி விட்டது. திருநாவுக்கரசு எனது நல்ல நண்பன் மட்டுமல்ல நெருங்கிய இரத்த உறவினன்'' என்று மிகவும் துக்கத்துடன் கூறியதை நான் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''உயிர்களைக் கொன்று தின்னும் பாவிகள் மத்தியில் திருநாவுக்கரசு புண்ணியவான்'' என்றது லட்சுமி எலி.

**259. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று.**

''கஜேந்திரா, திருநாவுக்கரசு அது மட்டும் சொல்லவில்லை,''நீ சென்றவாரம் மடத்தில் உனது பேரனாரின் நினைவாக மதிய உணவு கொடுத்தாய். தீட்டுள்ள நீ கொடுத்த உணவை உண்டதால் நானும் எனது குடும்பத்தினரும் பாவிகளாகி விட்டோம். நீ வழக்கமாகப் பங்குனித் திங்களன்று நூற்றியெட்டு அந்தணர்களைக் கொண்டு நெய் முதலிய பொருட்களைத் தீயில் சொரிந்து சிவனுக்கு யாகம் செய்விப்பாய். அதைச் செய்வதை விட மேலானது ஓர் உயிரைக் கொன்று அதன் உடலை உண்ணாமல் விடுவது என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். இனிமேல் நீ யாகம் செய்யாதே. அது பாவம். முடிந்தால் இனியாவது புலால் உண்பதை விடு'' என்றார். அது எனக்கு மிக்க வேதனையைக் கொடுக்கிறது'' என்று சிவசிதம்பரம் கவலையோடு கூறினார்'' என்றது குமரன் எலி.

''பாவப்பட்டவர்கள் பெரியவர்கள் சொல்வதை இனியாவது கேட்டுத் திருந்தட்டும்'' என்றது லட்சுமி எலி.

**260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்.**

''அவர் எனக்கு மட்டும் சொல்லவில்லை. எனது மனைவிக்கும் சொன்னார்,''சிவசிதம்பரம் எனது நண்பன். அவனது பரம்பரை புலாலை உண்ணாதவர்கள். இவன் எப்படிப் புலாலை மகிழ்வுடன் உண்கிறான். நீ எப்படிச் சமைத்துக் கொடுக்கிறாய். ஒரு நல்ல மனைவி ஒழுக்கமில்லாத சமையலைச் செய்யமாட்டாள். உயிரைக் கொல்லாமலும், புலால் உண்ணாமலும் வாழ்கின்ற தர்மவானான உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். இது கூடவா உனக்குத் தெரியாது'' என்று கேட்டார். எனது மனைவி புலால் உண்பதில்லை. எனக்காக வேலைக்காரரைக் கொண்டு சமைத்துத் தருவாள். இனிமேல் எமது வீட்டில் புலாலைச் சமைப்பிக்க மாட்டேன் என்று கூறிவிட்டாள்''என்று சிவசிதம்பரம் வேதனையோடு கஜேந்திரனுக்குச் சொன்னதைக் கேட்டேன்'' என்று சொன்னது குமரன் எலி.

''மனைவி சொல்லியாவது திருந்தட்டும். மனிதரில் பலர் மனைவிமாரை மதிப்பதே இல்லை. சிவசிதம்பரம் முரட்டுச் சுபாவம் உடையவன். அவன் சமைப்பிப்பான்'' என்றது லட்சுமி எலி.

## தவம் - 27

**261. உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு.**

''மார்க்கண்டன் யாரோ ஒரு தவசியைக் கூட்டி வந்து மடத்திற்கு அருகில் நிற்கும் அரசமரநிழலில் இருந்து நினைத்த காரியம் சொல்லல், நோய்களை நீக்குதல், கழிப்புகள் கழித்தல் என்பவற்றைச்

செய்கிறானாம். அவர் காட்டில் பதினைந்து வருடங்கள் தவம் செய்தவராம். சகல சித்திகளும் உடையவர் என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். இன்று காலை மடத்திற்கு வந்த நமசிவாயகம் மார்க்கண்டனுக்குச் சொன்னார்,''மார்க்கண்டு நீ தவசி அல்ல. குடும்பப்பாரத்தைச் சுமக்க முடியாமல் தப்பி ஓடியவன். மதுவும் மாமிசமும் உண்டவன். இப்போ காவியுடுத்து அரசமரநிழலில் இருப்பதால் தவசியாகி விட முடியாது. உன்னோடு இருக்கும் சிவசாமி என்ற தவசியைப் பற்றி வேறு ஊர்களில் நல்ல பெயரில்லை. குடிப்பதாகவும் பெண்களுடன் சேட்டைகள் விடுவதாகவும் கேள்விப்பட்டேன். ஆகையால் இனிமேல் இங்கு இருவரும் தங்க இடமளிக்க முடியாது. தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுவதும், பிறஉயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருத்தலும் தான் தவத்தின் தன்மைகள். சிவசாமியிடம் இளைஞன் ஒருவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவனை நீயும் அவனும் மிரட்டியுள்ளீர்கள். அதை விடக் கஞ்சா பாவிக்கிறீர்கள். அதனால் உடனே இங்கிருந்து புறப்பட்டு விடுங்கள்'' என்று நமசிவாயகம் கோபமாகச் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''முன்பே மார்க்கண்டன் கஞ்சா பாவிப்பவனாம். அதனால் நமசிவாயகம் சொன்னது சரி'' என்றது லட்சுமி எலி.

**262. தவமும் தவம்உடையார்க்கு ஆகும் அவம்அதனை**
**அஃதுஇலார் மேற்கொள்வது.**

''மார்க்கண்டு தவமென்பது ஒழுக்கம். தவவடிவம் அதற்கேற்ற ஒழுக்கமுடையவர்களுக்குத் தான் பொருந்தும். நீயும் அவனும் நோயுள்ள ஒருவனது வீட்டுக்குச் சென்று கழிப்புக் கழிப்பதற்காகச் சேவலும் சாராயமும் கேட்டுள்ளீர்கள். அவன் தன் நோய் தீரும் என நம்பித் தந்திருக்கிறான். கழிப்புக் கழித்த பின் பலியிட்ட சேவலையும் சாராயத்தையும் கொண்டு வந்துள்ளீர்கள். அதை என்ன செய்தீர்கள். ஒழுக்கம் தான் தவம் என்று முன்பே சொன்னேன். ஒழுக்கமில்லாத தவம் பொருள் தேடும் முயற்சியாகும்'' என்று நமசிவாயகம் கூற மார்க்கண்டனும் சிவசாமியும் பேசாமல் இருந்தனர்'' என்றது குமரன் எலி.

''செய்தது பிழையான செயல். அதை எப்படி நியாயப்படுத்துவது?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்**
**மற்றை யவர்கள் தவம்.**

''துறவிகளுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இல்லறத்தில் வாழும் பல பெரியோர்கள் தவத்தை மேற்கொள்ளவில்லை. தவம் செய்வதற்குக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். கதிரேசன் திருநாவுக்கரசு போன்றோர் இல்லறத்தில் இருந்து கொண்டே துறவை மேற்கொள்கின்றனர். அவர்கள் தவத்தை மேற்கொண்டால் தவசிகளைப் பாதுகாப்போர் யார்? நீ குடும்பப்பாரம் தாங்க முடியாது வேசமிட்டுப் பிழைப்பவன். பிழைத்துக் கொண்டிரு. ஆனால் மடத்தடிக்கு வராதை. காட்டிற்குப் போ'' என்று நமசிவாயகம் கோபமாகக் கூறியும் மார்க்கண்டன் பதில் கூறவில்லை'' என்றது குமரன் எலி.

''தவ ஒழுக்கம் தெரிந்தவன் மார்க்கண்டு. அதனால் தான் பதில் கூறவில்லை'' என்று சிரித்தது லட்சுமி எலி.

**264. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்.**

''மார்க்கண்டு, தீமை செய்யும் பகைவரை அடக்குதல், நன்மை செய்வோரை உயர்த்துதல் ஆகிய இரண்டும் தவவலிமையுடையவர்களால் முடியும். உனக்கு நான் தீமை செய்கிறேன். என்னை அடக்கு பார்ப்பம். உனது நண்பன் கஜேந்திரன் பெருந்துன்பப்படுகிறான். அவனது துன்பங்களை நீக்கி விடு. பாவம்

அவனது குடும்பம்'' என்று கோபமாக நமசிவாயகம் சொல்லியும் இருவரும் பதில் சொல்லவில்லை'' என்றது குமரன் எலி.

''எப்படிப் பதில் சொல்ல முடியும்? போலித்தவசிகளால் ஏதாவது செய்ய முடியுமா?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**265. வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.**

''மார்க்கண்டு, விரும்பியவற்றை விரும்பியபடியே தவத்தால் அடைய முடியும் என்று நினைக்கும் கதிரேசனும் திருநாவுக்கரசுவும் இல்லறத்தில் இருந்து கொண்டே தவவாழ்வு வாழ்ந்து நினைத்தவற்றையெல்லாம் நினைத்தபடி அடைந்து கொண்டிருக்கின்றனர். இல்லறத்தைத் துறந்து துறவு மேற்கொள்ளும் நீங்கள் இருவரும் பிறர் நினைத்ததைச் செய்வதாகக் கூறிப் பணம் பெறுகிறீர்கள். இது தான் தவமோ?'' என்று கேட்டார் நமசிவாயகம்'' என்றது குமரன் எலி.

''ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியைப் பணம் சம்பாதிக்கப் பயன்படுத்துகிறார்கள். சிலர் கற்பித்தலைப் பயன்படுத்துகின்றனர். அதை விட மார்க்கண்டனது வழிகேடானதல்ல'' என்றது லட்சுமி எலி.

**266. தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு.**

''அப்போது அங்கு வந்த திருநாவுக்கரசு சொன்னார்,''மார்க்கண்டனும் அவனது நண்பனும் தவவேடமிட்டு கழிப்புக் கழிப்பதற்காகப் பலியிடுகிறார்களாம். உயிர்களைக் கொல்லாமை தான் தவம்.

ஒழுக்கம் தான் தவம் என்றுபெரியவர்கள் கூறியுள்ளனர். அத்துடன் தவம் செய்பவர்கள் பற்று, ஆசை, அவா இல்லாமல் கடவுளை எந்நேரமும் நினைத்திருப்பதால் அவர்கள் தான் தங்களுக்குரிய கடமைகளைச் செய்பவர்கள். மற்றவர்கள் உலக பந்தங்களில் சிக்கி வீண் முயற்சிகள் செய்து அவதிப்படுபவர்கள். இவர்களை ஊருக்குள் விடக்கூடாது. விட்டால் ஊர் கெட்டு விடும்'' என்று நமசிவாயகம் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''இவர்கள் தவவேடத்தை அமைத்து மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பவர்கள். ஆறாம் அறிவுள்ள மனிதன் இதைப் பற்றிச் சிந்திப்பதில்லை'' என்றது லட்சுமி எலி.

**267. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு**

''சுடச்சுடப் பொன்னின் மாசு அகலும். அது போலத் தவம் செய்யச் செய்ய மெஞ்ஞானம் மேலோங்கும், துன்பங்கள் துயரங்கள் தவம் செய்வோரைப் பக்குவப்படுத்திக் கடவுளை அடைய வைக்கும். இவர்கள் நாளாக நாளாகப் பணம் பொருள் தேடுவதில் தான் அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றனர். முன்பு ஒரு கிழமைக்கு இரண்டொரு கழிப்புக் கழித்தவர்கள் இப்போ தினமும் ஐந்து பத்துக் கழிப்புக்கள் கழிக்கின்றனர். இவர்களை இப்படியே விடக் கூடாது'' என்று நமசிவாயகம் சொல்ல, இவர்களுக்குச் சொல்லிப் பிரயோசனமில்லை. காவல்துறையில் புகாரிட வேண்டும்'' என்றார் திருநாவுக்கரசு'' என்றது குமரன் எலி.

''இப்போ மனிதரின் பகுத்தறிவு மூட நம்பிக்கையில் ஈடுபடுகிறது'' என்றது லட்சுமி எலி.

**268. தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்உயிர் எல்லாம் தொழும்**

“தன்னுயிர் தான் என்ற சுயநலமில்லாத தவசிகளை மக்கள் போற்றுவார்கள். அவர்களது பெருமையை உணர்ந்து வணங்குவார்கள். இவர்கள் இருவரும் கழிப்பின் போது படைக்கப்படும் சாராயத்தைக் குடிக்கிறார்கள். பலியிட்ட சேவலை சமைத்து உண்கின்றனர். இவர்களைத் தவசிகளென்றும் தம் நோய்களைத் தீர்க்க வந்த கடவுள்கள் என்றும் படித்தவர்களே நம்புகிறார்கள். இது வெட்கக்கேடான செயல்” என்று நமசிவாயகம் கூறத் திருநாவுக்கரசு,“உருத்திரகுமாரன் படித்தவனென்று எப்படிச் சொல்வீர்கள். அவன் நேற்றுத் தனது மகன் காதலித்த கஜேந்திரனின் மகளான காவியாவை மறப்பிப்பதற்காக ஒரு பூசை மார்க்கண்டனைக் கொண்டு செய்வித்தவனாம். படித்தவர்களே இப்படி நடந்தால் பாமரர் என்ன செய்வர்?” என்று கேட்டார்” என்றது குமரன் எலி.

“மனிதரில் பலர் படிப்பது எப்படித் தீயசெயல்களைச் செய்து பணம் பொருள் சேர்க்கலாமென்பதற்காகவென்று கதிரேசன் கூறியது உண்மை” என்றது லட்சுமி எலி.

**269. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு**

“தவவலிமையால் பெரும் ஆற்றல்களைப் பெற்றவர்கள் மரணத்தையும் வென்று விடுவார்கள். அவர்களுக்கு மரணமே இல்லை. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த முனிவர்களும், ரிஷிகளும் தவவலிமை உடையவர்களும் தமது பெருமைகளால் இன்றும் வாழ்கிறார்கள். இனிமேலும் வாழ்வார்கள். இதை உணராது போலி வேடமிட்டு மக்களை ஏமாற்றும் இவர்களை மன்னிக்கவே கூடாது” என்று திருநாவுக்கரசு நமசிவாயகத்திற்குக் கூறினார்” என்றது குமரன் எலி.

“பெரும் முனிவர்கள் மட்டுமல்ல கொடிய பல அரக்கர்களும் இன்றும் வாழ்ந்து மக்களால் கேவலப்படுத்தப்படுவதை இந்தக் கற்றவர்கள் உணர்வதாக இல்லை” என்றது லட்சுமி எலி.

**270. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர**

“நமசிவாயகம், உலகில் ஆற்றல் இல்லாதவர்கள் பலராகவும், ஆற்றல் உள்ளவர்கள் சிலராகவும் இருப்பதற்குக் காரணம் தவம் செய்யாதவர்கள் பலராகவும் தவம் செய்வோர் சிலராகவும் இருப்பதே ஆகும். தவம் என்பது ஒழுக்கம், மனவுறுதி, பற்றின்மை, நடுநிலை தவறாமை எனப்பலவற்றைக் குறிப்பிடலாம். மனவுறுதியுள்ளவர்கள் சிலர், ஒழுக்கமுள்ளவர்கள் சிலர், பற்றில்லாதவர்கள் சிலர், நடுநிலைமை உள்ளவர்கள் சிலர் இப்படியே நல்லவர்கள் சிலராக இருக்கின்றனர். கல்வி ஒழுக்கத்தை ஏற்படுத்தி உயர்ந்த வாழ்வை வாழச் செய்து மற்றவர்களையும் வாழச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்பவரும் சிலரே. பலர் ஏமாற்றிப் பிழைப்பு நடத்துகின்றனர்” என்று திருநாவுக்கரசு சொல்லும் போது சிவசாமியினதும் மார்க்கண்டனதும் முகங்கள் கறுத்திருந்ததை நான் அவதானித்தேன்” என்று கூறியது குமரன் எலி.

“நல்லவர்கள் மிகமிகச் சிலர். கெட்டவர்கள் பலர். ஒவ்வொருவரும் மனச்சாட்சியின்படி வாழாவிட்டால் ஏன் பாடசாலைக்குப் போவான்?” ஏன் கோவிலுக்குப் போவான்?” என்றது லட்சுமி எலி.

## கூடா ஒழுக்கம் - 28

**271. வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்.**

‘‘மார்க்கண்டுவும், சிவசாமியும் உருத்திரகுமாரனின் வீட்டிற்கு நேற்று நடுச்சாமத்தில் சென்றதாகக் கஜேந்திரன் திருநாவுக்கரசுவிற்குக் கூறிய போது அவர் சொன்னார், ‘‘நல்ல குணங்கள் எதுவும் இல்லாத உருத்திரகுமாரனின் நடத்தையைப் பற்றி ஊரே கை கொட்டிச் சிரிக்குது. இதற்குள் தான் தான் பெரிய சாதி மானென்றும், பணக்காரன் என்றும் சொல்லிக் கொண்டு திரிகிறான். இவருடைய பணத்தை யார் மதிக்கிறார்கள்? அத்துடன் இவரது சாதியையும் யார் மதிக்கிறார்கள். பறைமேளம் அடிக்கும் சக்திவேலின் மகன் ஸ்ரீசங்கரன் கணித ஆசிரியன். ஒழுக்கம் மிகுந்தவன். எல்லோரையும் மதிப்பவன். திறமையான ஆசிரியன். அவனை ஊரவர்கள் மதிக்கின்றனர். அதனால் தான் அவனை மடத்தில் ஏழைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்படி கதிரேசன் கேட்டதற்கிணங்க அவன் கற்பிக்கிறான். இம்முறை கா.பொ.த சாதாரண பரீட்சை எடுத்த அனைத்து மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். அவனும் ஆசிரியன். உருத்திரகுமாரனும் ஆசிரியனே? வஞ்ச மனம் படைத்தவர்களை ஊரவர்கள் மட்டுமல்ல அவனது உடலில் கலந்து நிற்கும் ஐம்பூதங்களும் கேலி செய்து தங்களுக்குள்ச் சிரிக்கும்’’ என்று கூறினான்’’ என்றது குமரன் எலி.

‘‘இதெல்லாம் விளங்குபவனுக்குத் தான் தெரியும். விளங்காதவன், தான் பெரியவன் என்று தம்பட்டம் அடிப்பான்’’ என்றது லட்சுமி எலி.

**272. வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்**
**தான்அறி குற்றப் படின்.**

‘‘உலகில் கண்ணுக்குத் தெரிந்த உயர்ந்த பொருள் வானம் தான். ஒருவன் வானத்தை விடக் கல்வியில், ஒழுக்கத்தில், தவத்தில் உயர்ந்தவனாக இருந்தாலும் மனத்திலே பொறாமை அழுக்காறு, அவா, பற்றுப் போன்ற அழுக்குகளை உடையவனாக இருந்தால் அவனது தவத்தாலோ, கல்வியாலோ, பணத்தாலோ பயன் எதுவும் இருக்கமாட்டாது. ஐம்பது வருடங்களுக்கு முன்பு சுவாமிநாதன் என்றொரு தவசி இருந்தார். அவர் மக்களோடு பேசுவதில்லை. பழகுவதில்லை. உணவு கூட உண்பது குறைவு. அவருக்கு உணவு உடை கொடுப்பதற்காகப் பலர் முன் வந்த போதும் அவர் அதை ஏற்றுக்கொள்வதில்லை. அவர் மக்களுக்குச் சொல்வதெல்லாம் நடக்கும். நோய்களைத் தீர்த்து வைப்பார். அவரைக் கடவுளாக மக்கள் போற்றித் தொழுவார். ஒரு நாள் இரவு பூமணி என்ற பெண் தனது கையைப் பிடித்து விட்டார் என்று சொன்னாள். அதைக் கதிரேசன் கண்டுவிட்டார். கதிரேசன் ஒழுக்கமானவர், பொய் பேசாதவர், நல்லவர். அதனால் அவர் உண்மையைச் சொல்லி விட்டார். அதனால் ஊரவர்கள் கோபங்கொண்டு அவன் அடித்துத் துரத்தி விட்டனர். எந்த வகையிலும் உயர்ந்தவராக இருந்தாலும் குற்றம் செய்தால் மக்கள் அவரை மதிக்கமாட்டார்கள். மார்க்கண்டனும் ஒரு நாள் அடிவாங்குவான்’’ என்று திருநாவுக்கரசு நமசிவாயகத்திற்குக் கூறியதைக் கேட்டேன்’’ என்றது குமரன் எலி.

‘‘இப்ப மார்க்கண்டன் அடிவாங்காதிருந்தால் சொல்லலாம். அவன் பலரிடம் அடிவாங்கியுள்ளானே’’ என்றது லட்சுமி எலி.

**273. வலிஇல் நிலைமையான் வல்உருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று**

‘‘மார்க்கண்டனும் சிவசாமியும் ஒரு மாதத்திற்கு முன்பு, அயலூரில் வாழும் கிராமசேவையாளரின் மகளுக்கு மனநோய் இருந்தது. அதைத் தாம் சுகப்படுத்தித் தருவதாகக் கூறிப் பல்லாயிரம் ரூபா பணமாகப் பெற்று மந்திரங்கள் சொல்லிக் கழிப்புக் கழித்துள்ளனர். அதன் பின் அவள் மனநோய்க்காகச் சாப்பிடும் மருந்துகளைக் குடிக்க வேண்டாம் என்று கூறியுள்ளனர். அதன்படி அவளுக்கு மருந்து கொடுக்கப்படவில்லை. அதனால் நோய் அதிகரித்து அவள் பெருங்குழப்பம் விளைவித்துள்ளாள். அதனால் அவளை

வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். வைத்தியர் கிராமசேவையாளரைக் கடுமையாக ஏசியுள்ளார். ‘‘கிராமசேவகர் தான் கிராமத்தின் தலைவர். அவரின் சொற்படி தான் மக்கள் செயற்படுவார்கள். அப்படிப்பட்ட நீங்கள் மூடநம்பிக்கையுள்ளவராகச் செயற்படலாமா..? உங்களைப் பார்த்துப் பலர் அந்த மந்திரீகர்களை நம்புகின்றனர்’’ என்று கூறினார். அதைக் கேட்ட கிராமசேவகர் ஆட்களை அனுப்பித் தந்திரமாக மார்க்கண்டனையும் சிவசாமியையும் அழைத்துச் சென்று மரத்தில் கட்டி வைத்து அடித்துள்ளனர். நல்ல அடி. மனதை அடக்கும் வல்லமை இல்லாதவனின் தவக்கோலம், பசு, புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு பயிர்களை மேய்வதை ஒக்கும். அகப்பட்டால் அடிவாங்க வேண்டியது தான்’’ என்று நமசிவாயகம் திருநாவுக்கரசுவிற்குக் கூறும் போது கேட்டேன்’’ என்றது குமரன் எலி.

‘‘இங்கு பலர் பசுந்தோலைப் போர்த்த புலிகளாகத் தான் இருக்கிறார்கள். அடிவாங்கும் போது தான் தெரியவரும்’’ என்றது லட்சுமி எலி.

**274. தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று**

‘‘மேலும் நமசிவாயகம் சொன்னார்,‘‘ஒருவன் தவக்கோலத்தில் மறைந்திருந்து தீயசெயல்களைச் செய்வது, வேடன் புதரில் மறைந்திருந்து வலை வீசிப் பறவைகளைப் பிடிப்பது போன்றது. இப்போ பறவைகள் மிருகங்கள் கூடப் புத்திக்கூர்மையுள்ளனவாக மாறிவிட்டன. அவை காலப்போக்கில் வேடன் விரித்த வலைக்குள் சிக்காது. தவக்கோலத்தில் மறைந்திருந்த மார்க்கண்டனையும் சிவசாமியையும் கண்டுபிடித்த கிராமசேவையாளர் மரத்துடன் கட்டி வைத்து இரண்டு நாட்களாக உணவும் நீருங்கொடாது அடித்தாராம். அதன் பின், ‘‘ஊருக்குள்க் கண்டால் பிடித்துக் கட்டிவிடுவோம் என்றார்களாம். அவிழ்த்து விடமாட்டோம். இப்போது இருவரும் அவ்வூர்ப்பக்கம் செல்வதில்லையாம். ஒவ்வொரு ஊரவரும் அவ்வாறு நடந்தால் தீயவர்கள் தவக்கோலத்தில் மறைந்திருந்து மக்களிடம் பணம் வசூலிக்க மாட்டார்கள்’’ என்று திருநாவுக்கரசுவிற்குச் சொன்னதைக் கேட்டேன்’’ என்றது குமரன் எலி.

‘‘எப்படித் தான் சொன்னால் என்ன, கடுமையாகத் தாக்கினால் தான் என்ன சிலரைத் திருத்தவே முடியாது. அவ்வூரில் உள்ள சிலர் இப்போதும் இரகசியமாக மார்க்கண்டனிடம் வந்து போகிறார்கள் தானே’’ என்றது லட்சுமி எலி.

**275. பற்றுஅற்றேம் என்பார் படிற்றுஒழுக்கம் எற்றுஎற்றுஎன்று**
**ஏதம் பலவும் தரும்.**

‘‘பற்றுக்களைத் துறந்து விட்டோம்’’ என்று கூறுபவர்களின் பொய்யான ஒழுக்கம் ஒரு காலத்தில் என்ன செய்தோம் என்று எண்ணி எண்ணி வருந்தும் துன்பமான நிலையைத் தோற்றுவிக்கும் இப்படித்தான் உருத்திரகுமாரனது தகப்பன் முன்பு பிள்ளைகள் இல்லாத பலர் தமது காணிகளைத் தமிழ்நாட்டில் உள்ள சிதம்பரத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு எழுதி வைப்பார்கள். அப்படி ஆயிரக்கணக்கானோர் எழுதி விட்டு இறந்து விட்டனர். சிதம்பரக் கோவில் நிர்வாகம் இங்குள்ளவர்களிடம் அக்காணியின் வருமானத்தை எடுத்து அனுப்புமாறு பணித்தது. அப்படிப் பணிக்கப்பட்டவர்களில் ஒருவர் தான் உருத்திரகுமாரனது தந்தை. காலப்போக்கில் அவர் அக்காணிகள் பலவற்றைத் தனது பெயருக்கு எழுதி விட்டார். அக்காணிகளில் குடியிருந்த அப்பாவிகளைக் காவல்துறையின் உதவியுடன் வெளியேற்றியும் விட்டார். இப்போ அக்காணிகள் உருத்திரகுமாரனின் பெயரில் உள்ளன. இறுதிக் காலத்தில் உருத்திரகுமாரனோடு பிரச்சினைப்பட்ட அவரின் தந்தை மடத்தில் வந்திருந்த போது தான் செய்த பாவச் செயல்கள் தான் தன்னை வருத்துவதாகக்

கதிரேசனுக்குக் கூறி அழுவாராம்'' என்று நமசிவாயகம் திருநாவுக்கரசுவிற்குக் கூறுவதைக் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''எப்படியான தண்டனைகள் கிடைத்தாலும் அதைப் பார்த்து யாரும் திருந்துவதில்லை. உருத்திரகுமாரன் திருந்தியிருந்தால் இப்படியான துன்பங்களை அனுபவிக்கத் தேவையில்லை'' என்றது லட்சுமி எலி.

**276. நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்**

''மனதில் வளரும் ஆசைகளுக்காகத் திட்டம் போட்டு இரகசியமாகச் செயற்பட்டுத் தமது கருமங்களை நிறைவேற்றுபவர்களைப் போலக் கொடியவர்கள் உலகில் வேறு யாரும் இல்லை. உருத்திரகுமாரனின் தந்தை சிதம்பரக் கோவில் காணிகளில் குடியிருக்கும் ஏழைகள் மீது இரக்கப்பட்டு வாடகைப் பணத்தை வாங்காது விடுவார். அத்துடன் அவர்கள் கஷ்டப்படுங் காலங்களில் பணம் கொடுப்பார். பணம் கொடுத்ததற்காகக் கையொப்பமும் வாங்குவார். சிலகாலங்களின் பின் காவல்துறையினரோடும், சட்டத்தரணிகளின் துணையோடும் குடியிருப்பவர்களை வெருட்டிக காணியைத் தனது பெயரில் எழுதி வாங்கி விடுவார். மனதின் ஆசைகளை நீக்காமல், ஆசைகள் இல்லாத துறவிகளைப் போல் வஞ்சித்து வாழ்கின்ற பலர் நம்மூரில் இருக்கிறார்கள். அவர்களுள் முதன்மையானவர்கள் உருத்திரகுமாரனது குடும்பத்தவர்கள்'' என்று நமசிவாயகம் திருநாவுக்கரசுவுக்குக் கூறியதைக் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''சிதம்பரக் காணிகளைத் தமது பெயரில் எழுதிய உருத்திரகுமாரனது குடும்பத்தில் யார் இன்பமாக வாழ்கிறார்கள். தகப்பன் எழுதிய கள்ள உறுதியால் கலவரம் தானே நடக்கிறது'' என்றது லட்சுமி எலி.

**277. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி**
**மூக்கிற் கரியார் உடைத்து.**

''உருத்திரகுமாரனின் தகப்பனும், தகப்பனின் தம்பியாரான மயில் வாகனமும் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல. மயில் வாகனம் தன்னை ஓர் ஒழுக்கவானாகக் காட்டிக் கொண்டு இரகசியமாகக் கையாட்களை வைத்து கள்ள உறுதி முடிப்பதில் வல்லவன். தமையனும், தம்பியும் தான் மாறிச் மாறி சாட்சிக்கையெழுத்து வைப்பர். குன்றிமணியின் ஒரு பக்கத்தில் காணப்படும் செம்மை நிறம் போல, வேடத்தால் செம்மையானவர்கள் போலத் தங்களைக் காட்டிக் கொண்டு குன்றிமணியின் கறுப்பு நிறம் போல இருண்ட மனத்தை உடையவர்கள் அவர்கள். செய்த பாவம் சும்மா விடாதென்பார்கள் மயில் வாகனமும் பிள்ளைகளும் வெளிநாட்டிற்குச் சென்றமையால் அவர்கள் பிடித்த காணிகளில் இப்போ இடம்பெயர்ந்தவர்கள் வீடு கட்டி வாழ்கிறார்கள். வெளிநாட்டிலும் மயில் வாகனத்தின் பிள்ளைகள் சொத்துச் சண்டைகளில் ஈடுபடுவதால் பெற்றோரைக் கவனிக்காது விட்டு விட்டனர். அவர்கள் அங்கே முதியோர் இல்லத்தில் தானாம் இருக்கிறார்கள் என்று திருநாவுக்கரசு யோகநாதனுக்குக் கூறியதைக் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''செய்த பாவம் கடல் கடந்து போனாலும் போய்ச்சேரும் என்பதற்கு மயில்வாகனம் நல்ல உதாரணம்'' என்றது லட்சுமி எலி.

**278. மனத்தது மாசுஆக மாண்டார்நீர் ஆடி**
**மறைந்துஒழுகும் மாந்தர் பலர**

''மார்க்கண்டனும் சிவசாமியும் மனிதப் பிறப்புத் தானோ என்று எண்ணத் தோன்றுகிறது. தாம் பெரிய தவசிகள் என்ற நினைப்போடு காலையில் நீராடிச் சிவபூசை செய்து நீறு அணிந்து தேவார திருவாசகங்களை

ஓதியபடி வெளியே செல்கிறார்கள். இரவானதும் திரும்பி வருகிறார்கள். இவர்கள் எங்கே போகிறார் என்ன செய்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது'' என்று யோகநாதன் சொல்ல,''இவர்களது போலிவேடங்களை நம்பும் பலர் இருக்கும் வரை அவர்கள் ஏமாற்றிக் கொண்டே இருப்பார்கள்'' என்று திருநாவுக்கரசு சொன்னார்'' என்றது குமரன் எலி.

''திருநீற்றைக் காட்டி ஏமாற்றும் தன்மை மனிதன் தோன்றிய காலத்திலிருந்து நடைமுறையில் உள்ளது'' என்றது லட்சுமி எலி.

**279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன**
**வினைபடு பாலால் கொளல**

''நேராக இருந்தாலும் அம்பு கொடியது. வளைவாக இருந்தாலும் யாழ் இனியது. எனவே ஒருவரைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால் அவரது குணத்தையும் செயல்களைப் பற்றியும் ஆராய வேண்டுமே தவிர அவர்களது தோற்றத்தைக் கொண்டு முடிவெடுக்கக் கூடாது. இப்போ கற்றவர்களும் தோற்றத்தைக் கண்டு ஏமாற்றப்படுகிறார்கள். முன்பு அவர்கள் செய்த தீமைகளை எண்ணிப் பார்க்க விரும்புகிறார்கள் இல்லை. எம்மோடு கதைக்கும் கஜேந்திரனே சிவசாமியின் பேச்சை நம்புகிறான்'' என்று திருநாவுக்கரசு யோகநாதனுக்குக் கூறியதைக் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''எடுப்பான தோற்றமும், வசீகரமான பேச்சும் கற்றவர்களையும் கவரும் என்பார்கள். அது தான் நடக்கிறது'' என்றது லட்சுமி எலி.

**280. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்.**

''சடையும் தாடிவளர்ப்பும் திருநீற்றுப் பூச்சும் இல்லாவிட்டால் பிழைப்பு நடத்த முடியாது. உலகம் பழிக்கின்ற தீயசெயல்களை ஒருவன் செய்யாது இருந்தால் அவன் தான் உண்மையான துறவி. கதிரேசன் சடை வளர்ப்பதுமில்லை. மொட்டை அடிப்பதுமில்லை. ஆனால் அவரைச் சாது என்றும் கடவுள் என்றும் மக்கள் அழைக்கிறார்கள். அப்படித் தன்னை அழைக்கக் கூடாதென்று பலமுறை சொல்லியும் மக்கள் கேட்பதில்லை. போலிச்சாமிகள் தமக்குத் தாமே பட்டங்களைச் சூட்டி வருமானத்தை அதிகரிக்கிறார்கள். இது யாருக்கும் புரிகிறதாகத் தெரியவில்லை'' என்று திருநாவுக்கரசு கவலைப்பட்டார்'' என்றது குமரன் எலி.

''இங்கு யார் நீதி நியாயத்தைப் பார்க்கிறார்கள். தமது வருமானத்தைத் தான் பார்க்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

## கள்ளாமை – 29

**281. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்ஒன்றும்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு.**

''உருத்திரகுமாரன் கடை கட்டியிருக்கும் காணி சிதம்பரக்கோவிலுக்குரியது. தகப்பன் அதற்குப் பாதுகாவலராக இருந்து கொண்டு தனது பெயரில் எழுதிய காணி அது. கதிர் காமு என்பவன் குடியிருந்தவன். தகப்பனும் மயில்வாகனமும், உருத்திரகுமாரனும் சேர்ந்து காவல்துறையின் உதவியோடு கதிர்காமுவை ஐம்பது வருடங்களுக்கு முன் காணியால் எழுப்பியவன். இப்ப என்னடாவென்றால் சிதம்பர சொத்துக்காணியைப் பாடசாலைக்குக் கொடுத்து விட்டார். ஊரவர் அது சிதம்பரக் கோவில் காணி பாடசாலைக்குச் சேரட்டும் என்று விட்டு விட்டனர். இப்போ பரஞ்சோதி அக்காணிக்குள் கட்டிடம் கட்டத் தொடங்கியதும் உருத்திரகுமாரன் அது தனது பேரனின் காணியென்று கட்டிடம் கட்டக் கூடாதென்று

மறிக்கிறான். இவங்கள் வீதிகளில் வெட்கமில்லாமல் நடமாடுகிறாங்கள். கதைத்துச் சிரிக்கிறார்கள். மானங்கெட்டவங்கள்'' என்று கஜேந்திரன் கோவிலடியில் பேசிக்கொண்டிருந்தான். அதை ஊர்ச்சனமெல்லாம் கேட்டுச் சிரிச்சது. திருநாவுக்கரசு சொன்னார்,''பிறர் தன்னை இகழக் கூடாது என்று எண்ணுகின்றவன் எந்தப் பொருளையும் யாரிடமிருந்தும் வஞ்சித்துப் பெறக்கூடாதென்றவர்'' என்றது குமரன் எலி.

''ஊரில் சில பேர் இப்படியானவர்கள். அவர்கள் தான் உருத்திரகுமாரனுக்காகக் கதைப்பவர்கள்'' என்றது லட்சுமி எலி.

**282. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வேம் எனல்**

''ஒருவன் பிறருக்குரிய பொருளை தவறான வழியில் அடைய வேண்டும் என்று நினைப்பது கூடப் பாவமான செயல். பிள்ளைகள் இல்லாதவர்கள் தமது அடுத்த பிறவிகளிலாவது பிள்ளைகளைப் பெற வேண்டுமென்று நினைத்துக் கோவில்களுக்குத் தமது காணிகளை எழுதி வைத்தனர். தமிழ் நாட்டிலுள்ள சிதம்பரக் கோவிலின் நிர்வாகம் காலகதியில் யாழ்ப்பாணத்தில் உள்ள காணிகளைக் கவனிக்காது விட்டதும், கள்ள நோக்குடையவர்கள் கள்ள உறுதி எழுதி அக்காணிகளைத் தமக்காக்கிக் கொண்டனர். உருத்திரகுமாரன் போன்றோர் அக்காணிகளை விற்றும் விட்டனர். இவற்றையெல்லாம் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் இப்போ வேலைகள் அதிகரித்து விட்டது. நான் குடியிருக்கும் காணியும் சிதம்பரக் கோவிலுடையது. அதை மயில்வாகனம் தனது பெயரில் எழுதி வைத்திருக்கிறான். வெளிநாட்டில் உள்ள அவன் இங்கு வந்து கள்ள உறுதி முடித்த காணிகளை விற்கப்போகிறானாம்'' என்று கஜேந்திரன் ஏசிக் கொண்டிருந்ததைப் பலர் வேடிக்கை பார்த்தனர்'' என்றது குமரன் எலி.

''இங்குள்ளவர்கள் வாய்ச் சொல்லில் தான் வீரர். மற்றும் படி உருத்திரகுமாரனைக் கண்டால் விழுந்து வணங்குவார்'' என்றது லட்சுமி எலி.

**283. களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து**
**ஆவது போலக் கெடும்.**

''திருட்டுப் பொருட்களால் உண்டாகும் வளர்ச்சி மலை போல வளர்வதாகத் தோன்றிய போதும், காலப்போக்கில் உள்ளதும் அழிந்து போகும் என்பார்கள். அது உண்மை மயில்வாகனம். நான் குடியிருக்கும் காணியைத் தனது மகனான கோடீஸ்வரனுக்கு எழுதியுள்ளார். அவன் வெளிநாட்டில் போதைப் பொருட்களைக் கடத்தியதால் பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளான். அத்துடன் வெளிநாட்டில் மயில்வாகனத்தின் பிள்ளைகள் வட்டிக்குப் பணம் கொடுப்பார்களாம். அவர்களிடம் பணம் பெற்றோர் வேறு நாடுகளுக்குச் சென்று விட்டார்களாம். கோவில் சொத்துக்களைத் திருடுறவன் எப்படி நல்லாய் இருக்க முடியும்'' என்று கஜேந்திரன் கூறிக்கொண்டிருந்தான்'' என்றது குமரன் எலி.

''இரண்டு பேரும் சேர்ந்து திரியும் போது உவையெல்லாம் தெரியவில்லை. தனக்குப் பாதிப்பு வந்தவுடனை தான் தெரியுது'' என்றது லட்சுமி எலி.

**284. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்**
**வீயா விழுமம் தரும்.**

''நாகராசா கோவிலடிக்கு வந்து கஜேந்திரனுக்குச் சொன்னான், ''திருட்டுத்தனத்தில் ஏற்படுகின்ற விருப்பம் இறுதியில் பெரும் துன்பத்தை உண்டாக்கும். இனிமேல் நான் திருடுவதில்லை என்று முடிவெடுத்து விட்டேன்'' என்று சொன்னாய். அதை நாம் எவரும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. நேற்று இரவு

இராமநாதன் குடும்பத்துடன் வெளியூர் சென்று விட்டதாகக் கேள்விப்பட்டு நானும், நாவேந்தனும் இராமநாதரின் வீட்டுக்கு நடுச்சாம வேளை சென்றோம். வீடு இருட்டாக இருந்தது. பிற்பக்கமாகச் சென்று சுவரில் ஏறி உள்ளே குதித்த போது இரண்டு பெரிய நாய்கள் வந்து எம்மைக் கடிக்கத் தொடங்கின. நாம் பலமாகக் கத்திய போது இராமநாதன் வீட்டுள் இருந்து வந்து சொன்னான்,''நீங்கள் இருவரும் வீட்டார் வெளியே சென்றால் வீட்டை உடைத்துத் திருடுவீர்கள். அதனால் பெரிய சாதி நாய்கள் இரண்டு வாங்கியுள்ளேன். அவை உங்களைக் கடித்துக் குதறி விட்டது. உடனே வைத்தியசாலைக்குச் செல்லுங்கள்'' என்றான். வைத்தியர் எனக்குப் பத்துத் தையல் போட்டார். நாய் மூர்க்கத்துடன் கடித்துக்குதறி விட்டது. உடனே ஐந்து ஊசிகள் போட்டார். நான்கு நாளைக்கு ஊசிபோட வேண்டும் என்றார். உயிர்போவது போல வலிக்கிறது'' என்று அழுதழுது சொன்னான்'' என்றது குமரன் எலி.

''பாவம் நாகராசா. அகப்பட்டுப் போனான். பாடசாலைகளிலும் அலுவலகங்களிலும் மறைமுகமாகத் திருடுவோரை எந்த நாயும் கடிக்கா'' என்றது லட்சுமி எலி.

**285. அருள்கருதி அன்புடையார் ஆதல் பொருள்கருதிப்**
**பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.**

''யார் எப்போ வீட்டை விட்டு வெளியூருக்குச் செல்வார்கள் நாம் அவர்களது வீட்டை உடைத்துத் திருடுவோம்'' என்று கருதித் தக்க நேரத்தை எதிர்பார்த்திருப்பவர்களது மனதில் அருளுமிராது அன்புமிராது'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீங்கள் வீட்டில் யாருமில்லாவிட்டால் உங்களது வீட்டிற்குள்ச் செல்வது போலச் செல்வீர்கள். சென்றவாரம் அருளம்பலம் மனைவியோடு தாய் வீட்டிற்குச் செல்ல நீங்கள் அங்கு திருடச் சென்றீர்கள். அருளம்பலம் அன்றன்று கூலி வேலை செய்பவன். அவனது வீட்டில் என்ன இருக்கும் என்று சென்றீர்கள். திருடனென்றாலும் மனதில் அருள் இருத்தல் வேண்டும். இராமநாதன் பணக்காரன். ஐம்பதினாயிரம் ரூபாவுக்குப் பெரிய சாதி நாய் வாங்கியிருக்கிறான். அதை அறியாமல் போய் கடிவாங்குகிறீர்கள். அருளம்பலத்திடம் என்ன இருக்கு. அங்கு அமைத்து வைத்த சோற்றைப் பானையுடன் திருடியுள்ளீர்கள். பாவம் அவன் சமைக்க வழி தெரியாமல் தவித்தான். நான் தான் பானையைக் கொடுத்தேன். அதையும் திருடி விடாதீர்கள்'' என்று நமசிவாயகம் பேச நாகராசா தலையைக் குனிந்தபடி இருந்தான்'' என்றது குமரன் எலி.

''ஈவிரக்கமில்லாத பாவிகள் எதையும் செய்வார்கள். சென்றவாரம் பாடசாலையில் மதிய உணவுக்காகக் கொடுத்த அரிசியை பக்கத்துப் பாடசாலை அதிபர் விற்றுப் பிடிபட்டவராம். அவர் நாகராசாவுக்குச் சளைத்தவரல்ல'' என்றது லட்சுமி எலி.

**286. அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்**
**கன்றிய காத லவர்.**

''நாகராசா வந்து கஜேந்திரனுக்குச் சொன்னான், ''ஏகாம்பரத்தின் வியாபார நிலையத்துள்ப் புகுந்து இருபத்தையாயிரம் ரூபாவைக் களவெடுத்தேன். எனது மகள் பரீட்சைக்கான பணம் ஆயிரம் ரூபா மூன்று நாட்களாகக் கேட்டவள். மனைவி சங்கிலியை அடைவு வைத்தவள். அதை மீள ஐயாயிரம் ரூபா கேட்டவள். இரண்டையும் கொடுக்க வேண்டுமென்று நினைத்து வந்தேன். வழியில் நாவேந்தன் வந்தான். அவன் மது குடிப்போம் என்றான். என்னிடம் இருபத்தையாயிரம் ரூபா இருந்ததால் மதுக் கடைக்குச் சென்று மதுவை அருந்தினோம். மதுக் கடைக்கு அருகில் இறைச்சி காய்ச்சி விற்றனர். நான் வாங்க அங்கு கூடியிருந்தவர்களும் வந்தனர். அவர்களுக்கும் வாங்கிக் கொடுத்தேன். பின் அங்கு சூதாடினார்கள். ஐயாயிரம் ரூபா வைத்து ஆடினேன். தோற்றுப்போனேன். தோற்ற பணத்தை மீட்க மீண்டும் மீண்டும் ஆடினேன். இருபதினாயிரம் ரூபாவைத் தோற்றுவிட்டேன். கையில் ஒரு சதமும் இல்லாமல் திரும்பிய போது

காவல்துறையினர் என்னைக் கைது செய்து சோதித்து பார்த்து விட்டு என்னை ஏசினர். பிள்ளைக்குப் பரீட்சைக் காசு கட்டாதது கவலையாக இருக்கு'' என்று நாகராசா கூறிய போது கஜேந்திரன் சொன்னான், ''திருடிய பணம் நிலைக்காது. ஏனென்றால் அவர்களுக்குப் பணம் தேடும் கஷ்டம் தெரியாது. கவலைப்படாதை உன்ரை மனிசி யாரிடமாவது கேட்டு வாங்கியிருப்பாள்'' என்று கஜேந்திரன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''தீயவர்கள் கவலையின்றி வாழ்வதற்கு நல்லவர்களும், பொது நிறுவனங்களும் உதவுகின்றன. அதனால் தான் அவர்கள் கவலையின்றி வாழ்கின்றனர்'' என்றது லட்சுமி எலி.

**287. களவுஎன்னும் கார்அறிவு ஆண்மை அளவுஎன்னும்**
**ஆற்றல் புரிந்தார்கண் இல்**

''நீ சொல்வது சரி கஜேந்திரா. உன்னைப் போன்றவர்கள் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாது தாம் நினைத்தபடி குடித்துக் கும்மாளமடிக்க நீ சொன்னவர்களும் காரணம் தான். நாகராசாவின் மகளின் பரீட்சைக் காசைக் கதிரேசன் கொடுத்து விட்டார். கஷ்டப்பட்டு உழைப்பவனுக்குத் தான் பணத்தின் அருமை தெரியும். தமது வருமானத்திற்கேற்ப அளவறிந்து வாழ்பவன் தீயசெயல்களில் ஈடுபடமாட்டான். உனக்குப் பொறுப்பிருந்தால் மகளின் பரீட்சைக் காசையாவது கட்டியிருப்பாய். ஓரிரு மணித்தியாலங்கள் திட்டமிட்டுச் செயற்பட்டு பெரும் பணத்தைக் களவெடுப்பாய். அகப்பட்டால் சிறை வாசம். அது உனக்குப் பழக்கப்பட்டது. அங்கேயும் மகிழ்வுடன் இருப்பாய். அகப்படாவிட்டால் பெரும் செலவு செய்து மகிழ்வாய். நீ குடும்பத்தைப் பற்றி யோசிக்கமாட்டாயா..?'' என்று நமசிவாயகம் ஏசினார். அவன் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை'' என்றது குமரன் எலி.

''அவர்கள் எதைக் கவனத்தில் எடுப்பார்கள் தெரியுமா..? அன்றன்று குடிக்கவும் சாப்பிடவும் பணம் வந்தால் சரியென்று நினைப்பார்கள்'' என்றது லட்சுமி எலி.

**288. அளவுஅறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்**
**களவு அறிந்தார் நெஞ்சில் கரவு**

''அப்போது அங்கு வந்த கந்தவனத்தின் மகன் திருநாவுக்கரசுவின் பாதங்களைப் பணிந்து விட்டுச் சொன்னான்,''ஐயா, நீங்கள் கடவுள் மாதிரி உரிய நேரத்தில் எனது மகளின் பரீட்சைக் காசைத் தந்ததால் அவள் இம்முறை பரீட்சை எழுதினாள். இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தால் அவளுக்கு ஆசிரிய நியமனம் கிடைக்கும். நான் கமம் செய்பவன். மழை பெய்ததால் பயிர் அழிந்து விட்டது. பலரிடம் கேட்டும் பணம் கிடைக்கவில்லை. நீங்கள் தந்தீர்கள். இந்தாருங்கள் உங்கள் பணம்''என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்தான். திருநாவுக்கரசு அதை வாங்காது சொன்னார்,''மகனே, நீ உனது தந்தையைப் போலவே வாழ்கிறாய். அளவு அறிந்து வாழ்பவனின் நெஞ்சில் அறம் நீங்காமல் என்றும் நிலைத்திருக்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது உண்மை என்று உன் மூலம் தெரிந்து கொண்டேன். களவு செய்து வாழ்பவனின் நெஞ்சில் வஞ்சகம் தான் நிறைந்திருக்கும் நாகராசா ஏகாம்பரத்தின் கடையை உடைத்துத் திருடியதற்காகக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். நாகராசாவுக்கு ஏகாம்பரம் எவ்வளவு உதவிகள் செய்திருப்பான். இருந்தும் அவனது நெஞ்சில் வஞ்சம் இருந்ததால் தானே திருடினான். நீ நல்லவன். இன்றும் உதவி தேவையானால் கேள்'' என்று கூறினார்'' என்றது குமரன் எலி.

''நெஞ்சில் வஞ்சகம் உடையவர்கள் எப்போதும் நன்மை செய்தவர்களுக்கும், தீமை தான் செய்வார்கள். அது அவர்களது இயல்பு'' என்றது லட்சுமி எலி.

**289. அளவுஅல்ல செய்தாங்கே வீவர் களவுஅல்ல**
**மற்றைய தேற்றா தவர்**

“நாவேந்தன் களைத்து விழுந்து வந்து சொன்னான்,“கஜேந்திரா, நாகராசாவைப் பிடித்த காவல்துறையினா் அவனுக்கு நல்ல அடி அடித்து விட்டனா். ஆரம்பத்தில் எதுவும் சொல்லாத அவன் அடியின் வேதனையைத் தாங்க முடியாது நாம் இருவரும் முன்பு சோ்ந்து செய்த களவுகளையெல்லாம் சொல்லி விட்டான். இப்போ என்னையும் உன்னையும் காவல்துறையினா் தேடுகின்றனா். நாம் இனிமேல் இங்கிருந்தால் கஷ்டங்கள் பலவும் வரலாம். அதனால் வேறு ஏதாவது ஒரு ஊருக்குச் செல்வோம்’’ என்று கூறக் கஜேந்திரன் சொன்னான், “எங்கே போறது. அங்கை போனால் செலவுக்கு என்ன செய்வது? இப்போ என்னிடம் பணம் எதுவும் இல்லை’’ என்று கூற நாவேந்தன் சொன்னான், “என்னிடமும் இல்லை. இப்ப என்ன செய்வது? நான் சந்தியில் நின்ற போது காவல்துறையினா் எம்மை விசாரித்தவா்களாம். இனி இங்கு தான் வருவாா்கள். வாபோவம்’’ என்று நாவேந்தன் பயந்தபடி கூறிக்கொண்டிருந்தான்’’ என்றது குமரன் எலி.

“பயந்தவை ஏன் இப்படியான செயல்களைச் செய்யிறவை. ஒரு களவில் அகப்பட்டால் பழைய களவுகளிலும் அகப்படவேண்டி வரும். அதனால் பல துன்பங்கள் உண்டாகும் என்று பகுத்தறிவாளா்களுக்குத் தெரியாது போலும்’’ என்றது லட்சுமி எலி.

**290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்**
**தள்ளாது புத்தேள் உலகு.**

“என்னடா நான் பிரச்சினைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறன். நீ பயப்படாமல் இருக்கிறாய்’’ என்று நாவேந்தன் சொல்லக் கஜேந்திரன் சொன்னான், “ஆறுமாதங்களுக்கு முன் நாம் திருடச் சென்ற போது ஒரு பள்ளத்தில் விழுந்ததால் கால் பிரண்டது. வைத்தியம் செய்தும் குணமாகுதில்லை. இப்ப என்னால் விரைவாக நடக்க முடிவதில்லை’’ என்று கஜேந்திரன் கூறும் போது நாவேந்தன் குறுக்கிட்டுச் சொன்னான், “உன்னை நம்பியிருந்தால் நானும் அகப்பட வேண்டிவரும். நான் போறன். அவங்கள் அடித்தால் எதையும் சொல்லிப் போடாதை’’ என்று கூறிவிட்டு விரைவாக நடந்தான் நாவேந்தன். அப்போது அங்கு வந்த நமசிவாயகம் சொன்னாா், “உன்னையும் நாவேந்தனையும் நாகராசா காட்டிக் கொடுத்து விட்டான். அதனால் காவல்துறையினா் தேடுகிறாா்கள். ஒழுக்கமாக வாழ்ந்தால் பயப்படாமல் நெஞ்சை நிமிா்த்தி வாழலாம். கதிரேசன், திருநாவுக்கரசு போன்றவா்களைப் பாா் அவா்கள் ஒழுக்கமாக வாழ்வதால் மகிழ்ச்சியாக வாழ்கின்றனா். அவா்களுக்கு வீடுபேறும் கிடைக்கும். இப்போ நாவேந்தன் வருமாறு கூறியும் உன்னால் எழுந்து செல்ல முடியவில்லை. ஒழுக்கமில்லாது வாழ்பவா்களுக்கு அவா்களது உடலோ அங்கங்களோ ஒத்துழைக்காது’’ என்று கூறக் கஜேந்திரன் சொன்னான், “எல்லாம் விதி’’ என்று’’ என்றது குமரன் எலி.

“ஆறறிவுள்ளவை தமக்கு இயலாவிட்டால் விதியென்பினை. இது அவா்களின் இயல்பு’’ என்றது லட்சுமி எலி.

## வாய்மை –30

**291. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்**

“நாகராசா தனது களவிற்கு உருத்திரகுமாரன் தான் காரணம் என்று காவல் நிலையத்தில் கூறியதால் காவல்துறை அதிகாரி உருத்திரகுமாரனைக் கைது செய்வதற்காக அவனது வீட்டிற்குச் சென்றாா். அதற்கு முன்பு உருத்திரகுமாரன் கதிரேசனது வீட்டுக்குச் சென்று அவரிடம் சொன்னான், “ஐயா, எனக்கும்

கஜேந்திரனுக்கும் தொடர்பு இருக்கிறதே தவிர நாகராசாவுடன் தொடர்பில்லை. அப்படியிருக்க என்னைப் பழிவாங்குவதற்காக நாகராசா இவ்வாறு சொல்லியுள்ளான். நான் காவல்துறைக்குப் பல ஆயிரம் ரூபா கொடுத்து இவனை அடிப்பிப்பேன். அத்துடன் இவனைச் சிறையை விட்டு வெளியே வராமலும் செய்வேன்'' என்று ஆத்திரத்துடன் கூறிய போது கதிரேசன் சொன்னார், ''உருத்திரகுமாரா, நீ மீண்டும் மீண்டும் தவறு செய்கிறாய். நீ இதில் சம்பந்தப்படவில்லையென்று நாகராசா எனக்குச் சொன்னவன். அதைக் காவல்துறைக்குச் சொல்லும்படி அன்பாகச் சொன்னேன். எனக்காகச் சொல்வதாகச் சொன்னான். அவன் படிக்காதவன். கண்டபடி கதைப்பான். படித்தவர்கள் பண்பாகக் கதைத்தல் வேண்டும். மற்றவர்களின் மனதைப்பாதிக்காத சிறிதும் தீங்கில்லாத சொற்களைப் பேசுவதே வாய்மையாகும். மிருகங்களுக்குக் கூட அன்பு வைப்பவர்களைத் தெரியும். நீ நாகராசாவைப் பற்றிச் சனசமூக நிலையத்தில் வாய்க்கு வந்தபடி ஏசியுள்ளாய். அதற்குப் பழிவாங்க அவன் நினைத்தான். அதனால் தான் இவ்வளவும் நடந்தது. இனியாவது அன்பான வார்த்தைகளைப் பேசு'' என்றவராம். அவர் கூறும் போது நமசிவாயகம் கேட்டுவிட்டு வந்து கோவிலடியில் கூறினார்'' என்றது குமரன் எலி.

''ஆணவத்துடன் கண்டபடி பேசினால் பிரச்சினைகள் வரும். இதை அவர் உணர்கிறாரில்லையே'' என்றது லட்சுமி எலி.

**292. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.**

''உருத்திரகுமாரா ஒருவன் பொய்யைக் கூறினாலும் அப்பொய் பிறருக்கு நன்மையைத் தரும் என்றால் அதை உண்மை என்று ஏற்கத்தான் வேண்டும். நாகராசா பொய் சொல்கிறான் என்று பலருக்கும் தெரியும். ஆனால் நீ பலருடன் முரண்பட்டுச் சண்டையிட்டுத் தகாத வார்த்தைகளைப் பேசுவதால் நாகராசா சொன்ன பொய் உண்மையானது என்று காவல்துறை அதிகாரி நம்புவதற்காக ஊரிலுள்ள பலர் நாகராசா சொல்வது உண்மை என்று கூறியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் நீ பலருக்குக் கெடுதல் செய்துள்ளாய். அவர்களால் உன்னைப் பழிவாங்க முடியவில்லை. நாகராசா சொல்வதை உறுதி செய்தால் உனக்குத் தண்டனை கிடைக்கும் என்று நம்புகின்றனர். இது தவறு என்று பலருக்கும் எடுத்துரைத்தேன். நாகராசா நான் கேட்டுவிட்டேன் என்பதற்காக காவல்துறை அதிகாரிக்குத் தான் பொய் சொன்னதாகச் சொல்லி அடிவாங்கியிருக்கிறான். அவனது நல்லெண்ணத்தைப் புரிந்து கொள். நீ தவறு செய்யாவிட்டாலும் முன் செய்த தவறுகளுக்கான தண்டனையைப் பெறவேண்டுமெனப் பலர் விரும்புகின்றனர். பொய் சொன்னால், தான் ஒரு நல்ல மனிதனைக் காப்பாற்றலாமென்றால் பொய் சொல்லலாம். ஆனால் நீ நல்ல மனிதனா? யோசித்துப் பார்'' என்றும் கதிரேசன் உருத்திரகுமாரனுக்குச் சொன்னதாக நமசிவாயகம் கோவிலடியில் கூறினார்'' என்றது குமரன் எலி.

''உருத்திரகுமாரன் செய்யும் அநியாயங்களுக்குத் தண்டனை கிடைக்குமென்று பார்த்தால் கதிரேசன் கெடுத்து விட்டார்'' என்றது லட்சுமி எலி.

**293. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்நெஞ்சே தன்னைச் சுடும்.**

''எதைச் சொன்னாலும் உனக்கு விளங்குவதில்லை. உனது செயல்களால் வந்த துன்பங்களாலும் நீ திருந்தவில்லை. உன்னை விட நாகராசா நல்லவன். நான் அவனுக்குச் சொன்னேன்,''நாகராசா ஒருவன் தன்மனம் அறிந்து பொய் சொல்லக் கூடாது. அவ்வாறு சொன்னால் அவனது மனம் அவனை வருத்தும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஒருவன் மனச்சாட்சிக்குப் பயந்து நடத்தல் வேண்டும். தீயவனானாலும் அவனைத் தண்டிப்பதற்காகப் பொய் சொன்னால் உனது குலம் நாசமாய்ப் போய்விடும். உன்னை விடு,

உனது மனைவியும், பிள்ளைகளும் நல்லவர்கள். அவர்களுக்கு நீ உழைத்துக் கொடுக்காவிட்டாலும் பாவத்தைத் தேடிக்கொடாதே'' என்றேன். அவன் சில கணங்கள் யோசித்து விட்டுச் சம்மதித்தான். ஆனால் நீ எனது பேச்சைக் கேட்கமாட்டாய். உனது மனைவியும், பிள்ளைகளும் வந்து அழுதழுது கேட்டமையால் சென்றேன். அதனால் இனியாவது திருந்தி வாழ்'' என்றவராம்'' என்றது குமரன் எலி.

''கதிரேசனது உபதேசம் எருமையின் மேல் மழை பெய்தது போல் இருந்திருக்கும்'' என்றது லட்சுமி எலி.

**294. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.**

''உருத்திரகுமாரனைப் பற்றிக் கேள்விப்பட்ட திருநாவுக்கரசு கோவிலடிக்கு வந்த போது உருத்திரகுமாரன் நமசிவாயகத்துடன் கதைத்துக் கொண்டு நின்றான். அவனைக் கண்ட திருநாவுக்கரசு சொன்னார்,''நான் மிகவும் வறியவன். பாடசாலைக்குச் சென்று கல்வி கற்காதவன். இருந்தாலும் பொய் சொல்லாது திருடாது ஒழுக்கமாக வாழ்வதால் இவ்வூர் மக்கள் அனைவரும் என்னை விரும்புகின்றனர். நான் வெளிநாட்டிற்குச் செல்ல முன்பும் ஒழுக்கமாகத் தான் வாழ்ந்தேன். அதனால் தான் நான் வெளிநாடு சென்று திரும்பி வந்த பின்பும் என்னை மக்கள் மதிக்கின்றனர். நீ அப்படியல்ல. உனது தந்தை பணக்காரன். நீ படித்தவன். இருந்தும் ஏன் இப்படி ஒழுக்கமில்லாமல் வாழ்கிறாய். நாகராசா கதிரேசனின் சொல்லுக்குக் கட்டுப்படாதிருந்தால் உனது நிலை என்னவென்று யோசித்துப் பார்த்தாயா..? கால் காசுக்குப்போன மானம் கோடி கொடுத்தாலும் வராது என்று உனக்குத் தெரியாதா..? நீ செய்வதெல்லாவற்றையும் உனது மனம் அறியும். மனமறிந்து தீயவற்றை எப்படி உன்னால் செய்ய முடிகிறது?'' என்று கேட்ட போது உருத்திரகுமாரன் எதுவும் பேசவில்லை'' என்றது குமரன் எலி.

''அவன் எப்படிப் பேசுவான். சொல்லும் போது தலையாட்டுவான். சொற்ப நேரத்தில் மறந்து விடுவான்'' என்றது லட்சுமி எலி.

**295. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானஞ்செய் வாரின் தலை.**

''கதிரேசனைப் பார். இளமைக் காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டவர். பின் பிள்ளைகள் வளர்ந்த பின்பு தான் பணக்காரனானவர். அவர் பொய் பேசியதை யாரும் கண்டவர்களா? ஒழுக்கக்கேடாக நடந்ததாக யாராவது சொல்ல முடியுமா? வறுமையிலும் செம்மையாக வாழ்பவன் தான் உண்மையான மனிதன். அப்படியானவன் தவசிகளையும் தானம் செய்பவர்களை விடவும் உயர்ந்தவன். அவர் அப்படி வாழ நீ எப்படி வாழ்ந்தாய்? வாழ்ந்து வருகிறாய். வாய் திறந்தால் பொய் தான் உதிரும். பொய் சொல்வது தான் முதல் கேடு. அதன் பின் எல்லாத் துன்பங்களும் தொடர்ந்து வரும். உன்னைவிடாது துன்பங்கள் துரத்துகின்றன. கதிரேசுவுக்குத் துன்பம் வந்ததுண்டா? அவருக்கு எப்போது துன்பம் வரும். நாம் உதவி செய்ய என்று ஊரவர் முழுப்பேரும் காத்திருக்கின்றனர். இனியாவது யோசி'' என்று திருநாவுக்கரசு கூறிய போதும் உருத்திரகுமாரனது முகத்தில் எந்தவிதமான அறிகுறியும் தென்படவில்லை'' என்றது குமரன் எலி.

''அறிகுறி தென்பட்டால் எப்போதோ திருந்தியிருப்பான்'' என்றது லட்சுமி எலி.

**296. பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை**
**எல்லா அறமும் தரும்.**

“ஆரூரன் கதிரேசனிடம் வந்த போது அவர் சொன்னார், “நீ ஒழுக்கமாக வாழ்பவன். ஒழுக்கம் என்பது பொய் சொல்லாமல் வாழ்தல். பொய் தான் பாவங்கள் எல்லாவற்றிற்கும் முதல் காரணி. ஒரு செயலை மறைக்க ஒரு பொய் சொன்னால் அதை நிறுவ ஆயிரம் பொய்களைக் கூறுதல் வேண்டும். சத்தியம் செய்தல் வேண்டும். இதனால் மனக்குழப்பம் ஏற்படும். மனக்குழப்பத்தால் பதட்டம், இருதயத்துடிப்பு அதிகரித்தல் யோசனை, மாறாட்டம்என்பன உருவாகும். அதனால் உலகத்தவர்கள் பழிப்பர். பொய் சொல்லாதவனை உலகம் மதிக்கும். அவனுடன் தொடர்பு கொள்ளப் பலர் முன் வருவர். அதனால் உதவிகள் பலவும் கிடைக்கும் என்பதை உனது வாழ்க்கையில் இருந்து தெரிந்து கொண்டேன்” என்றார் கதிரேசன். ஆரூரன் கண்களால் கண்ணீர் வழிய அவரைப் பார்த்துக் கொண்டு நின்றானே தவிரப் பேசவில்லை” என்றது குமரன் எலி.

“நல்லவர்கள் அதிகம் பேசமாட்டார்கள் என்பார்கள். ஆரூரன் மகிழ்வுடன் பேசுவானே தவிர அதிகம் பேசமாட்டான்” என்றது லட்சுமி எலி.

**297. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யமை செய்யாமை நன்று.**

“ஆரூரனும் அவனது மகள் காயத்திரியும் கோவிலடிக்குத் திருநாவுக்கரசைத் தேடி வந்தனர். திருநாவுக்கரசு கதிரேசனுடன் கதைத்துக் கொண்டிருந்தார். காயத்திரி இருவரது பாதங்களையும் தொட்டு வணங்கினாள், “கதிரேசன் ஐயா தான் எனது குலதெய்வம். எனது மகளின் கல்விக்கு அவர் உதவி செய்து கொண்டே இருந்தார். எப்போதும் அவர் உதவி செய்வதால் நான் மகளின் பரீட்சைக் காசைத் திருநாவுக்கரசு ஐயாவிடம் கேட்டுப்பெற்றேன். எனது மகள் ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்து விட்டாள். இனி நியமனம் கிடைக்கும். நீங்கள் இருவரும் நூற்றாண்டு காலம் சுகமாக வாழவேண்டும்” என்றான். அதைக்கேட்ட கதிரேசன் சொன்னார்,“பொய்சொல்லாமல் இருப்பதென்ற அறச்செயலை ஒருவன் கடைப்பிடித்து வந்தால் தான தர்மங்கள் செய்யத்தேவையில்லை. பொய் சொல்லாமை என்பதுள் எல்லா அறங்களும் அடங்கும். உனது மகளைத் தனது மகனுக்குத் திருமணம் செய்யப் பொன்னம்பலம் விரும்புகிறார். நான் தான் ஆசிரிய நியமனம் கிடைத்த பின்பு பேசுவோம் என்றேன். இனிப் பேசலாம் தானே” என்று கூற ஆரூரன் சொன்னான்,“ஐயா, எனது நிலைமை உங்களுக்குத் தெரியும். குடியிருக்கும் காணியே இரவல் காணி. அத்துடன் ஐந்து பிள்ளைகள் இருக்கு” என்று சொல்லும் போது கதிரேசன் சொன்னார்,“பொன்னம்பலம் பெரும்பணக்காரன். அவனுக்கு ஒழுக்கமான குடும்பம் தான் தேவை. பொன்னம்பலத்தின் மகனான ரவீந்திரன் உனது மகளை விரும்புகிறான்” என்றார்” என்றது குமரன் எலி.

“கரும்பு திண்ணக் கூலி வேண்டும் என்ன?” என்று சொன்னது லட்சுமி எலி.

**298. புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை**
**வாய்மையான் காணப் படும்.**

“தொடர்ந்து கதிரேசன் சொன்னார்,“நாம் உடலில் படியும் அழுக்குகளை நீரினால் கழுவி அகற்றுகிறோம். அதனால் உடல் சுத்தமாகிறது. பலருடன் சேர்ந்து மகிழ முதலில் தேவையானது உடற்சுத்தம். உடலைவிடப் பல மடங்கு அழுக்காவது மனம், பொறாமை, அவா, ஆசை, அடுத்தவரைக் கெடுத்தல் போன்ற பல விடயங்களால் மனம் அசுத்தமாகிறது. அசுத்தமான மனதுடன் கடவுளை வணங்க முடியாது நல்ல காரியங்களைச் செய்ய முடியாது. நல்லவர்களோடு உறவு வைக்க முடியாது. அதனால் மனதைச் சுத்தப்படுத்த வேண்டும். மனம் சுத்தமாக வேண்டுமானால் வாய்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும். வாய்மை என்பது மற்றவர்களைச் சொற்களால் துன்பப்படுத்தாமை. நீ மற்றவர்களை மதித்து

அவர்களுடன் மகிழ்வாக உறவாடுகிறாய். அதனால் தான் உன்னை எல்லோரும் விரும்புகின்றனர். அதனால் தான் பெரும் தனவந்தரான பொன்னம்பலம் தனது மகனுக்கு உனது மகளைத் திருமணம் செய்ய விரும்புகிறார்'' என்றார்'' என்றது குமரன் எலி.

''ஆரூரன் நல்லவன். நல்லதே நடக்கிறது. உருத்திரகுமாரன் கெட்டவன். அவனது பெண்ணைத் திருமணம் செய்ய யாரும் முன் வருகிறார்களில்லை'' என்றது லட்சுமி எலி.

**299. எல்லா விளக்கும் விளக்குஅல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு**

''ஐயா, எனது ஆசிரியர் சோமசுந்தரம் அவர்கள் ''பிள்ளைகளே, இருளை நீக்குகின்ற விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல. மனிதர்களை உயர்ந்தவர்களாக்கும் பொய்யாமை என்ற மனத்தில் இருக்கும் இருளை விலக்கும் விளக்கே சிறந்த விளக்கு. அதனால் நீங்கள் ஒரு போதும் பொய் சொல்லாதீர்கள். அப்படி வாழ்ந்தீர்களானால் உலகத்தவர் உங்களை மதிப்பர், உதவிகள் செய்வர், கடவுள் குறைகளை அகற்றுவார்'' என்று கற்பித்தார். அதனால் அதன்படி வாழ்கிறேன்'' என்று ஆரூரன் கதிரேசனுக்குக் கூற அவர்,''அப்படியே வாழ்'' என்று வாழ்த்தினார்'' என்றது குமரன் எலி.

''ஆரூரன் ஏழை என்றாலும் ஒழுக்கமுள்ளவன். இனி அவனது வாழ்வு சிறக்கும்'' என்றது லட்சுமி எலி.

**300. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்து ஒன்றும்**
**வாய்மையின் நல்ல பிற.**

''என்னுடைய வாழ்க்கையில் நான் பல துன்பங்களை அனுபவித்துள்ளேன். அப்படியான வேளைகளில் நான் வாய்மையைக் கடைப்பிடித்தமையால் தான் இந்த நிலைக்கு உயர்ந்தேன். வாய்மையே வெல்லும். நீயும் தற்பொழுது உயரத்தொடங்கி விட்டாய். அதற்குக் காரணம் உலகில் உண்மையான பொருள் வாய்மை என்று நீ உணர்ந்தமையே யாகும். இனி உனக்கு எந்தவிதமான குறைகளும் வராது'' என்று கதிரேசன் சொல்ல ஆரூரன் மகிழ்வுடன் சிரித்தான்'' என்றது குமரன் எலி.

''மகளுக்குத் தொழில், பெரிய இடத்துக் கல்யாணம் இனி ஆரூரனுக்கு என்ன குறை?'' என்றது லட்சுமி எலி.

## வெகுளாமை – 31

**301. செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்**
**காக்கின்என் காவாக்கால் என்.**

''இப்படிக் கதிரேசன் கோபப்படுவாரென்று நான் நினைக்கவில்லை. கோவிலடியில் எல்லோரும் கதிரேசனைப் பார்த்து அதிசயித்தனர். நாகராசாவுடன் கதிரேசன் நல்ல முறையில் கதைத்து அவனைக் கொண்டு தான் கோபமிகுதியால் பழிவாங்குவதற்காகவே திருட்டில் உருத்திரகுமாரனுக்கும் பங்குண்டு என்று சொன்னேன். அது தவறு என்று காவல்துறை அதிகாரிக்குச் சொன்னமையால் தான் உருத்திரகுமாரன் விடுவிக்கப்பட்டான். அவன் காலையில் தனது கையாட்களுடன் நாகராசாவின் வீட்டுக்குச் சென்று நாகராசாவைத் தாக்கியுள்ளான். அதனால் தான் கதிரேசனுக்குக் கோபம் வந்தது, ''நீ பற்குணத்திற்கோ நவராசாவிற்கோ அடிப்பாயா? இல்லைக் கோபமாக ஏசுவாயா? அவர்கள் பலம் மிக்கவர்கள். உன்னை அடித்து முறித்து விடுவார்கள். நீ கற்றவன். யாருடன் எப்படிப் பழகுதல் வேண்டுமென்று அறிந்தவன். பலிக்கின்ற இடத்தில் கோபம் வராமல் காப்பவனே சினத்தைக் காப்பவனாவான். பலவீனரிடத்தில் கோபத்தைக் காண்பிப்பது பெருமைக்குரியதல்ல. தற்செயலாக அவன் உனக்குத் திரும்பி ஒரு அடி

அடித்திருந்தால் உனது நிலை என்ன..?'' என்று கோபமாகக் கதிரேசன் உருத்திரகுமாரனை ஏசினார்'' என்றது குமரன் எலி.

''சொல்கிறவனுக்குத் தான் சொல்ல வேண்டும். இவனை விட நாகராசா மேலானவன்'' என்றது லட்சமி எலி.

**302. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்**
**இல்அதனின் தீய பிற.**

''உருத்திரகுமாரா, திருநாவுக்கரசுவின் காணிப் பிரச்சினையில் நவராசா உனக்கு அடிக்க வந்த போது நடுநடுங்கியபடி மன்னிப்புக் கேட்டனீ. அவன் பெருந்தன்மையானவன். நீ பலவீனன் என்று தெரிந்து உன்னை அடிக்காது விட்டான். வலியவர்களிடம் கோபம் பலிக்காது. அவர்களோடு கோபம் கொள்வதால் பலவிதமான தீமைகள் தான் வரும் என்று நீ ஒதுங்கி நடக்கிறாய். ஆனால் எளியவர்களிடம் உனது கோபத்தைக் காட்டுகிறாய். இது பெரும் தீமைகளைத் தான் உனக்குத் தரும். இப்போ நாகராசா காவல்துறை அதிகாரிக்கு உன்னைப் பற்றிச் சொல்லியுள்ளான். இனிமேல் நானோ அல்லது திருநாவுக்கரசோ அல்லது நமசிவாயகமோ உனது விடயங்களில் தலையிடமாட்டோம். இனி என்னிடம் எதற்கும் வராதே''என்று கதிரேசன் சொன்ன போது உருத்திரகுமாரனின் முகம் கறுப்பதைக் கண்டேன்'' என்றது குமரன் எலி.

''சொல்லச் சொல்லக் கேட்காதவனைக் கைவிட்டால் தான் திருந்துவான்'' என்றது லட்சுமி எலி.

**303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய**
**பிறத்தல் அதனான் வரும்.**

''நீ உனது வாழ்நாளில் யாருடனாவது அன்பாகப் பேசியுள்ளாயா..? நீ இவ்வளவு காலமும் எவ்வளவு பேருடன் முரண்பட்டிருக்கிறாய். ஒவ்வொருவரும் கோபத்தால் பல தீயவிளைவுகள் வரும். அதனால் கோபத்தை அடக்க வேண்டுமென்று நினைத்து அடக்குகிறார்கள். கோபத்தை அடக்க முடியாதவர்கள் உன்னை வாய்க்கு வந்தபடி ஏசியுள்ளனர், தாக்கியுள்ளனர், சிலர் மறைந்திருந்து தாக்கியுள்ளனர், சிலர் உன்னைப் பற்றிக் கேவலமாகக் கதைக்கின்றனர். இவற்றையெல்லாம் நீ உணரமாட்டாயா..? உனது மகளுக்குத் திருமணம் செய்ய முடியாதுள்ளது. கஜேந்திரன் கூட உனது குடும்பத்தில் திருமணம் செய்ய விரும்பவில்லை. தனது மகள் காதலித்து விட்டாள் என்று கவலைப்படுகிறான். உனக்கு நான் இப்பவும் புத்திமதி சொல்லக் காரணம் நாகராசா என்னை நம்பியதால் பாதிக்கப்பட்டுள்ளான். இல்லாவிட்டால் உன்னுடன் நான் கதைக்கமாட்டன்'' என்று கதிரேசன் கோபமாகக் கூறிய போது உருத்திரகுமாரன் எதுவும் பேசாமல் நின்றான்'' என்றது குமரன் எலி.

''எப்படிப் பேசுவது. கதிரேசன் பாவம் பார்க்க, இவன் அவரை ஏறி மிதிக்கிறான்'' என்றது லட்சுமி எலி.

**304. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**
**பகையும் உளவோ பிற.**

''கதிரேசனை வெகுநேரமாகக் காணாமையால் அவரது மனைவி கோவிலடிக்கு அவரைத் தேடி வந்தாள். கடந்த இருவாரங்களாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். நாகராசா வந்து உருத்திரகுமாரனைப் பற்றிச் சொன்னதும் அவருக்குக் கோபம் வந்தது. அத்துடன் சில நாட்களாக அவர் கோவிலுக்கு வரவில்லை. அதனால் தான் வந்தார். உருத்திரகுமாரனைக் கண்டதும் அவருக்குக் கோபம் வந்தது. அதனால் கோபப்பட்டு ஏசினார். அதனால் அவருக்குக் களைப்பாக இருந்தது. அதனால் நிலத்தில் அமர்ந்தார். அவருக்கு அருகில் திருநாவுக்கரசு இருந்து விசிறியால் விசுக்கிக் கொண்டிருந்தார், ''நான் யார் மீதும் கோபப்படுவதில்லை.

இன்று ஏனோ தெரியவில்லை உருத்திரகுமாரன் மீது அளவுக்கதிகமாகக் கோபம் வந்து விட்டது. அதனால் இயல்பாக இருக்க முடியவில்லை. மனம் பரபரக்கிறது. ஏன் இவனை ஏசினேன் எனக் கவலையாக இருக்கிறது'' என்று கதிரேசன் கூறிய போது திருநாவுக்கரசு சொன்னார், ''முகமலர்ச்சியையும் மனமகிழ்ச்சியையும் சினம் அழிப்பதால் சினங்கொள்ளக்கூடாதென்று பெரியவர்கள் சொன்னது உண்மை. உங்கள் முகம் பொலிவிழந்து விட்டது என்றார்'' என்றது குமரன் எலி

'கோபத்தில் ஆராயாமல் கதைப்பது, பின் மனஅமைதியை இழந்து தவிப்பது தான் மனிதனின் இயல்பு'' என்றது லட்சுமி எலி.

**305. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்.**

''அப்போது அங்கே வந்த ஆரூரன், ''ஐயாவின் முகம் பொலிவிழந்து களைத்தவர் போலக் காணப்படுகிறீர்கள். நான் ஒரு முக்கிய விடயம் கதைக்க வந்தேன். கதைக்கலாமா..?'' என்று கேட்டான். ஒரு நிமிடக் கோபம் என்னை இப்படி மாற்றி விட்டதே என்று நினைத்த கதிரேசன் சிரித்தவாறு சொன்னார், ''நீ சொல்லு, ''ஐயா உருத்திரகுமாரனின் மகளுக்குக் காலசர்ப்ப யோகம் உள்ளது. எனது இனத்தவர் ஒருவரின் மகனுக்கும் காலசர்ப்ப யோகம் உள்ளது. அவர் மிகவும் வசதியானவர். மகன் பொறியியலாளன். அவர் தனது மகனுக்கு பல இடங்களிலும் பொம்பிளை தேடியும் கிடைக்கவில்லை. உருத்திரகுமாரனின் மகளின் சாதகம் பொருந்தியது. தகப்பன் சரியில்லாவிட்டாலும் மகளைச் செய்வோம் என்றவர். இப்போ நாகராசாவின் பிரச்சினையால் மறுக்கிறார். ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் அவன் தன் கோபத்தை அடக்க வேண்டும். இல்லையென்றால் அவனது சினம் அவனையே அழித்து விடும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது உண்மை'' என்றான் ஆரூரன். அதற்குக் கதிரேசன் சொன்னார், ''மகனே. அதை நீ உணர்ந்துள்ளாய். அவன் உணரல் வேண்டும். நான் சொல்ல என்ன இருக்கிறது. நீ போய் அவனுடன் கதை'' என்றவர்'' என்றது குமரன் எலி.

''கதிரேசன் சொன்னது சரி. ஒருமுறை சொன்னால் கேட்கக் கூடியவனுக்குத் தான் புத்திமதி சொல்லலாம்'' என்றது லட்சுமி எலி.

**306. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையைச் சுடும்.**

''அவர் எனது இனத்தவர் என்பதால், நான் தான் அவருக்குத் தன்னைப் பற்றிக் கூறிக் கல்யாணத்தைக் குழப்பியதாக உருத்திரகுமாரன் சொல்வான். சினம் என்ற நெருப்பு தன்னையும் அழிக்கும், தன்னைச் சேர்ந்தவர்களையும் அழிக்கும், தன் இனத்தையும் அழிக்கும் என்று புரியாதவனாக உருத்திரகுமாரன் இருக்கிறான். அவன் யாரையும் நம்பமாட்டான். அத்துடன் இப்படியான விடயங்களைப் பற்றிப் பேச எனக்குத் தெரியாது ஐயா'' என்று ஆரூரன் கலங்கினான்'' என்றது குமரன் எலி.

''மனச்சாட்சிக்குப் பயந்தவர்கள் நீதியில்லாதவற்றைத் துணிந்து பேசமாட்டார்கள்'' என்றது லட்சுமி எலி.

**307. சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு**
**நிலத்துஅறைந்தான் கைபிழையா தற்று.**

''மகனே, நிலத்தைக் கையால் ஓங்கி அடித்தவனது கையானது எவ்வளவு துன்பப்படுமோ, அவ்வளவு துன்பத்தைச் சினம் கொள்பவனும் அனுபவிப்பான் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் பயப்படாது

நீ போய்ச் சொல்'' என்றார் கதிரேசன். அப்போதும் ஆரூரன் தயங்கினான். அவனது தயக்கத்தைக் கண்ட திருநாவுக்கரசு,''ஆரூரா நான் உன்னுடன் கூட வருகிறேன். நீ தான் கதைக்க வேண்டும். ஏனென்றால் திருமணத்தைப் பற்றிய எதுவும் எனக்குத் தெரியாது'' என்றார். அதற்கு ஆரூரன் சம்மதித்தான்'' என்றது குமரன் எலி.

''யார் எதைச் சொன்னாலும் ஆராயாது கதைப்பவன் உருத்திரகுமாரன்'' என்றது லட்சுமி எலி.

**308. இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று.**

''திருநாவுக்கரசு, பல சுடர்களாய் ஒளிரும் நெருப்பு ஒன்றாகச் சேர்ந்து வந்து சுடுவது போன்ற துன்பத்தை ஒருவன் செய்தாலும் அதை மறந்து மன்னிப்பது நல்லவர்களின் கடன் என்று கற்று விட்டு நான் உருத்திரகுமாரன் மீது கோபம் கொள்வது கூடாது. அது அவனது இயல்பு. இது எனது இயல்பு. நான் வருகிறேன்'' என்று கதிரேசன் கூறிய போது ஆரூரனது முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது'' என்றது குமரன் எலி.

''பெரியவர்களது கோபம் ஒரு கணம் கூட நில்லாது'' என்று கூறுவார்கள். அது உண்மை'' என்றது லட்சுமி எலி.

**309. உள்ளிய எல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி எனின்.**

''மறுநாள் மிகுந்த மகிழ்வுடன் கோவிலுக்கு வந்த ஆரூரன் கதிரேசனுக்கும், திருநாவுக்கரசுவிற்கும் சொன்னான், ''ஐயா, கோபம் கொள்ளாது ஒழுக்கமாக வாழ்ந்தால், அப்படி வாழ்பவன் எண்ணிய நன்மைகள் எல்லாவற்றையும் பெறுவான்'' என்பீர்கள். அது உண்மை. எனது இரண்டாவது மகளின் சாதகத்தை எடுத்துச் சோதிடரிடம் கொடுத்தேன். அவளுக்குக் காலசர்ப்ப யோகம் இருக்கு. அதனால் அதை எனது இனத்தவருக்குச் சொன்னேன். அவர் தனது மகனுக்கு எனது மகளைத் திருமணம் செய்ய விரும்புகிறார். ஆனால் உருத்திரகுமாரன் கோபிப்பானோ எனப் பயமாக இருக்கு'' என்றான். அதற்கு கதிரேசன் சொன்னார், ''எல்லாம் விதிப்படி நடக்கும். நீ அமைதியாக இரு. காலம் எல்லாவற்றையும் சீர் செய்யும் என்றவர்'' என்றது குமரன் எலி.

''காலம் என்பது இல்லை என்று கூற முடியாது. இப்போ ஆரூரனுக்கு நல்ல காலம்'' என்றது லட்சுமி எலி.

**310. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை.**

''தனது மகளின் திருமணம் குழம்பியதால் மிகுந்த துன்பத்துடன் கோவிலுக்கு வந்த உருத்திரகுமாரன் சொன்னான்,''எடுத்ததற்கெல்லாம் கோபப்பட்டுக் கோபப்பட்டு நல் வாழ்வை இழந்து விட்டேன். இப்போது நான் உயிருள்ள பிணம். எல்லாவற்றையும் பொறுத்துப் பொறுத்துத் துன்பப்பட்ட ஆரூரன் துறவியைப் போல வாழ்ந்து பெருவாழ்வு பெற்று விட்டான். படிக்காத அவனுக்கு இருந்த அறிவு எனக்கில்லாமல் போச்சு'' என்று அழுதான் உருத்திரகுமாரன். அதற்குக் கதிரேசன் சொன்னார்,''நாங்கள் சொல்வதை நீ கேட்பதில்லை. கேட்டிருந்தால் உனது வாழ்க்கை இன்பமாக இருந்திருக்கும். இனியாவது நடந்தவற்றை உணர்ந்து திருந்தி வாழ் என்றவர்'' என்றது குமரன் எலி.

''உணர்ந்தால் போதுமா? செயலில் அல்லவா காட்டுதல் வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

## இன்னா செய்யாமை - 32

**311. சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்**

''நாவேந்தன் இப்போது பயம் காரணமாகத் திருந்தி வாழ வேண்டும் என்று எண்ணினான். கதிரேசன் இனிமேல் பிரச்சினை காரணமாகத் தனது வீட்டுக்கு வரக்கூடாது என்று கூறிவிட்டார். அத்துடன் காவல்துறை அதிகாரிக்கும் இவர்களை இனிமேல் பிணையில் விடக்கூடாதென்றும் கூறிவிட்டார். அதனால் இனிமேல் திருந்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று நாவேந்தன் முடிவெடுத்தான். அன்று கோவிலுக்கு வந்த நாவேந்தனை உருத்திரகுமாரன் தனியான ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்று சொன்னான், ''நாவேந்தா, உனக்கு ஓர் இலட்சம்'' என்றதும் நாவேந்தனது மனதில் ஆசை பிறந்தது. எனினும் உருத்திரகுமாரனை நம்பமுடியாதென நினைத்தான், ''யோசிக்காதை உனக்கு அஞ்சலிக்குப் பேசப்படும் மாப்பிளையின் தகப்பனான கைலாயத்தைத் தெரியும். அவரிடம் சென்று அஞ்சலியைப் பற்றித் தவறாகக் கூறி அக்கல்யாணத்தை நிறுத்த வேண்டும்'' என்று சொல்லும் போது நாவேந்தன் சொன்னான், ''அஞ்சலி எனது மகளோடு படிப்பவள். எனது மகளுடன் வீட்டுக்கு வந்தால் என்னுடன் அன்பாகக் கதைப்பவள். அத்துடன் ஆரூரன் பாவம். அப்பாவி. கைலாயர் ஒரு முரட்டு மனிதன். ஏறுமாறாகக் கதைத்தால் அடித்தும் விடுவார். அவர் விசாரிக்காமல் எதையும் செய்யமாட்டார். அதனால் பெரும் செல்வத்தை நீ தந்தாலும் அச்செயலை நான் செய்யமாட்டேன். நான் உத்தமன் அல்ல. ஆனால் ஆரூரனுக்குத் துரோகம் செய்ய என்னால் முடியாது. என்னைக் கெடுக்கிறீர்கள். இப்பவே இதைப் பற்றி நான் கைலாயருக்குக் கூறுகிறேன்'' என்றான் ஆரூரன்'' என்றது குமரன் எலி.

''சிலர் தமது நன்மைக்காகப் பிறரைத் திருந்தவிடமாட்டார்கள்'' என்றது லட்சுமி எலி.

**312. கறுத்துஇன்னா செய்தஅக் கண்ணும் மறுத்துஇன்னா**
**செய்யாமை மாசுஅற்றார் கோள்.**

''கதிரேசனுக்கு நான் நீங்கள் சொன்னதற்காக எவ்வளவு பெருந்துன்பங்களைச் செய்திருப்பேன். அப்போது கதிரேசன் எய்தவன் இருக்க அம்பை நோவதால் பயனில்லை என்று கூறுவார். அப்போது எனக்கு அது புரியவில்லை. காசுக்காகப் பல துன்பங்களை அவருக்குச் செய்த போதும் அவர் என்னைக் கண்டித்தாரே தவிரத் தண்டனை தரவில்லை. காவல்துறை அதிகாரியிடம் அவர் ஒரு சொல்லுச் சொன்னால் என்னைச் சிறையில் அடைத்திருப்பார். அப்படிப்பட்ட புண்ணியவானுக்கு நான் பல துரோகங்கள் செய்து விட்டேன். இனிச் செய்ய முடியாது. செய்தால் சிறை செல்ல நேரிடும். அதன் பின் எனது குடும்பமும் துன்பப்படும். நீ உனது செயல்கள் முடியும் வரை உதவிகள் செய்வாய். கதிரேசன் நான் பெரும் துன்பம் செய்தாலும் எனக்கு உதவி செய்வார். அப்படிப்பட்ட பெரியவர்களுக்கு இனிமேல் நான் தீங்கு செய்யமாட்டேன்'' என்று நாவேந்தன் கூறினான்'' என்றது குமரன் எலி.

''நல்ல மாற்றம். அது தொட வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**313. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
**உய்யா விழுமம் தரும்.**

''கதிரேசன் சொல்வார்,''தான் குற்றம் செய்யாத போது தனக்கு ஒருவன் தீங்கு செய்தால் அதை எண்ணி அவனுக்குத் தீங்கு செய்தால் அது செய்பவனுக்குத் தீராத துன்பங்களையே தரும். நீ உனக்கு நன்மை செய்பவர்களுக்கே தீங்கு செய்கிறாய். தீங்கு செய்தவனைப் பழிவாங்குவதே பாவம். அப்படியிருக்க உனக்குத் தீங்கு செய்யாதவர்களுக்குத் தீங்கு செய்வது தீராத பழியை உண்டாக்கும். அதனால் தான் நீ

உழைத்தும் நிம்மதியில்லாமல் அலைகிறாய். உனது குடும்பத்தினரும் துன்பப்படுகின்றனர். அதனால் பணத்திற்காகத் தீங்குகளைச் செய்யாதே. தீங்கு செய்பவர்களையும் என்னைப் போல மன்னித்து விடு. அதன் பின் உனது வாழ்வில் மாற்றம் ஏற்படும். உன்னை அனைவரும் மதிப்பர். அத்துடன் உனது குடும்பத்தினரும் மகிழ்வுடன் இருப்பர். அதனால் எனக்குத் தீங்கு செய்தவனுக்கும் நான் தீங்கு செய்யமாட்டேன். ஆரூரன் எனக்குத் தீங்கே செய்யவில்லை. எப்படி நான் அவனுக்குத் தீங்கு செய்வது?'' என்று கேட்டான்'' என்றது குமரன் எலி.

‘‘இப்ப சொல்லுவான், உருத்திரகுமாரன் கள்ளைச் சாராயத்தை வாங்கிக் கொடுக்க மாறிவிடுவாங்கள்'' என்றது லட்சுமி எலி.

**314. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்.**

‘‘அப்போது அங்கு வந்த திருநாவுக்கரசு சொன்னார்,‘‘நீ திருந்துவதாக இல்லை. சிறிது நேரத்திற்கு முன் உருத்திரகுமாரனுடன் என்ன கதைத்தாய்? கேட்டு விட்டு வந்து சொன்னதைப் பற்றி நான் ஆராயவில்லை. நிட்சயமாக உருத்திரகுமாரன் நல்லதைக் கதைத்திருக்க மாட்டான்'' என்ற போது நாவேந்தன் உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னான், ஐயா, நான் திருந்தலாமென்று நினைத்தால் விடுகிறார்கள் இல்லை. ஆரூரனின் மகளின் திருமணத்தைக் குழப்பினால் ஓர் இலட்சம் ரூபா தருவதாக உருத்திரகுமாரன் சொன்னான். நான் மறுத்துவிட்டேன். அவன் நீங்கள் வருவதைக் கண்டதும் சென்று விட்டான்'' என்று நாவேந்தன் கூற,‘‘அவன் திருந்தமாட்டான், ‘‘ஒருவர் தனக்குத் தீங்கு செய்தால் அவரைத் தண்டிப்பதென்பது தீங்கு செய்தவன் வெட்கப்படும் படியாக அவனுக்கு நன்மை செய்வதே யாகும்'' என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால் தான் காணி விடயத்தில் அவனை மன்னித்தேன். இல்லாவிட்டால் அவனது வேலை பறிபோயிருக்கும். அவன் சிறை சென்றிருப்பான். அப்படிச் செய்தும் அவன் திருந்துவதாக இல்லை. நான் வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டும் என்பதற்காகத் தானாம் தன்னை மன்னித்தேன் என்று கூறித்திரிகிறான். இவன் திருந்தவே மாட்டான் என்று திருநாவுக்கரசு கூறுவதைக் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

‘‘திருந்தாமல் விட முடியாது. யாரிடமாவது வாங்கிக் கட்டினால் திருந்தி விடுவான்'' என்றது லட்சுமி எலி.

**315. அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**
**தம்நோய்போல் போற்றாக் கடை.**

‘‘நாவேந்தா, நீ காசை வாங்கிக் கொண்டு ஆரூரனின் திருமணத்தைக் குழப்பப் போகிறாயா..? மறைக்காமல் சொல். மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பங்களை தமக்கேற்பட்ட துன்பமாகக் கருதி அதை நீங்காவிட்டால் ஆறாம் அறிவான பகுத்தறிவால் என்ன பயன்..? சரி துன்பத்தை நீக்க வேண்டாம். துன்பம் செய்யாமலாவது இருக்கலாமல்லவா. ஆரூரன் யாருக்கும் கெடுதல் செய்யாதவன். அவனுக்குக் கெடுதல் செய்வோர் தப்பிப்பிழைக்க முடியாது'' என்று திருநாவுக்கரசு கூறும் போது நாவேந்தன் குறுக்கிட்டுச் சொன்னான், ‘‘நான் மறுத்ததால் அவன் ஏசிவிட்டுச் செல்கிறான். மாப்பிளையின் தகப்பன் மிகவும் நேர்மையானவர். நான் சொன்னால் அதை அப்படியே ஊரில் சொல்லி விசாரிப்பார். அது அவரின் இயல்பு. பணத்திற்கு ஆசைப்பட்டுப் பட்டுக் கேவலமான வாழ்க்கை வாழ்கிறேன். காரியம் நிறைவேறாவிட்டால் உருத்திரகுமாரன் பணம் தரமாட்டான். காரியம் நிறைவேறாவிட்டால் மாப்பிளையின் தந்தை விடமாட்டார். அதனால் தான் பயப்படுகிறேன்'' என்று கலங்கியபடி நாவேந்தன் கூறினான்'' என்றது குமரன் எலி.

‘‘மனிதரில் அனேகமானவர்கள் படிப்பது குறுக்கு வழியில் முன்னேறத் தானே’’ என்றது லட்சுமி எலி.

**316. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்**

‘‘ஐயா, நான் எதைச் சொன்னாலும் யாரும் நம்பமாட்டார்கள். அது எனது வாழ்க்கை முறையால் ஏற்பட்டது. கதிரேசன் பல முறை புத்தி கூறிய பின்பும் உருத்திரகுமாரனின் பணத்திற்கும் சாராயத்திற்கும் ஆசைப்பட்டு பல செய்யக்கூடாத செயல்களைச் செய்து விட்டேன். எனது மகள் சுவர்ணா பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது அவளுடன் கற்கும் ஒருவனை விரும்பினாள். மாப்பிளையின் தகப்பன் அதை அறிந்து ஊரில் வந்து என்னைப் பற்றி விசாரித்திருக்கிறார். பலர் என்னிலுள்ள விரோதம் காரணமாக உண்மைகளை மறைக்காது சொல்லி விட்டனர். மாப்பிளையின் தகப்பன் உடனே தனது மகனின் படிப்பை நிறுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டார். அத்துடன் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்தும் கொடுத்துவிட்டார். அதனால் மனமுடைந்த எனது மகள் பித்துப்பிடித்தவள் போல மாறிவிட்டாள். அதை என்னால் தாங்க முடியவில்லை. அப்படி நான் திருமணத்தைக் குழப்பினால் அஞ்சலியும் பாதிக்கப்படுவாள். எனது வாழ்க்கையில் நடைபெற்ற அந்தத் துயரச் சம்பவம் அஞ்சலியின் வாழ்க்கையில் நடக்கக் கூடாது’’ என்று கவலையோடு நாவேந்தன் திருநாவுக்கரசுவிற்குக் கூறினான்’’ என்றது குமரன் எலி.

‘‘அவரவருக்குத் துன்பம் வந்தால் தான் மற்றவர்களின் துன்பம் தெரியும்’’ என்றது லட்சுமி எலி.

**317. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்
மாணாசெய் யாமை தலை.**

‘‘ஐயா, கதிரேசன் ஐயா எனக்கு அடிக்கடி புத்திமதிகள் சொல்வார், ‘‘நாவேந்தா, நீ செய்யும் தீயசெயல்கள் உன்னை மட்டும் பாதிப்பதில்லை. உனது குடும்பத்தையும் அது பாதிக்கும். சுவர்ணா கெட்டிக்காரி. பல்கலைக்கழகத்தில் படிக்கிறாள். நாளை அவள் நல்லதொரு தொழிலைப் பெறுவாள். அதன் பின் அவளுக்கு உன்னால் கெட்ட பெயர் வந்து விடும். தீயசெயலில் சிறிது பெரிது என்று இல்லை. நீ சிறிய செயல் என்று நினைப்பது சம்பந்தப்பட்டவனுக்குப் பெரிய செயலாக இருக்கும். பாவம் வித்துப் போன்றது. அது முளைத்து வளர்ந்தால் அதற்கேற்ப பயனைத் தரும். புண்ணியமும் அப்படித் தான். எனவே சிறிய செயல் என்று நினைத்து தீயவற்றைச் செய்யக் கூடாது’’ என்பார். அது நிஜமாகி விட்டது. இப்போது எனது மகள் மனம் குழம்பியுள்ளாள். வீட்டில் எந்த நாளும் பிரச்சினைகள் தான். நான் காதலித்துச் செய்த மனைவி இப்போ என்னுடன் கதைப்பதில்லை. உணவு தருவதில்லை’’ என்று விம்மி விம்மி நாவேந்தன் அழுதான்’’ என்றது குமரன் எலி.

‘‘செய்த பாவம் சூழ்ந்தால் இப்படியான வேதனைகளை அனுபவிக்க வேண்டும் என்று மனிதரில் பலர் நினைப்பதில்லை’’ என்றது லட்சுமி எலி.

**318. தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்.**

‘‘எனது மகளின் திருமணம் குழம்பியதால் நான்படும் துன்பம் இவ்வளவு என்று அளவிட்டுக்கூற முடியாது. அஞ்சலி எனது மகளின் சினேகிதி. அவளின் திருமணத்தை உருத்திரகுமாரன் குழப்பச் சொல்கிறான். குழப்பினீர்களானால் என்னை உயிரோடு காணமாட்டீர்கள் என்று எனது மகள் சொன்னவள். அதுவும் உருத்திரகுமாரனது பேச்சைக்கேளாமைக்கு ஒரு காரணமாகும். இப்போது தான் ஐயா எனக்குத் துன்பமென்றால் என்ன என்று தெரிகிறது. என்னை விட ஆயிரம் மடங்கு துன்பங்கள் உருத்திரகுமாரனுக்கு வந்த போதும் அவன் கலங்குவதில்லை. அதனால் தான் அவர் தொடர்ந்து மற்றவர்களுக்குத் தீமைகளைச்

செய்கிறான். துன்பங்களால் துன்பப்பட்டிருந்தால் மற்ற உயிர்களுக்குத் துன்பங்களைச் செய்யமாட்டான்'' என்று திருநாவுக்கரசுவிற்கு நாவேந்தன் சொன்னான்'' என்றது குமரன் எலி.

''உருத்திரகுமாரன் இரக்கமே இல்லாத யமன்'' என்றது லட்சுமி எலி.

**319. பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா**
**பிற்பகல் தாமே வரும்.**

''கதிரேசன் ஞானி. அவர் சொல்வதெல்லாம் நடக்கும்,''நாவேந்தா விளையாட்டாகக் கூட ஒருவருக்குத் துன்பம் செய்யக்கூடாது. அதைவிடத் திட்டமிட்டுச் செய்யும் தீமைகள் பெருந் தீமைகளைத் தரும். நீ ஒருவனுக்கு முற்பகல் தீமை செய்தால், பிற்பகலில் உன்னைத் தேடி நீ செய்த தீமைகளின் பலன் வந்து சேரும் என்பதை மறக்காதே'' என்பார். அந்த நேரத்துக் குடி மயக்கமும் காசாசையும் அவரது சொல்லைக் கேட்க என்னை விடவில்லை. இப்போ நான் செய்த தீமைகளெல்லாம் ஒன்று சேர்ந்து வந்து வருந்துகின்றன. நேற்று எனது மகள் மண்ணெண்ணெய்யைத் தனக்கு மேல் ஊற்றித் தீ வைக்க முயன்றாள். தாய் அதைக் கண்டு விட்டுக் குழற அக்கம் பக்கத்தினர் வந்து காப்பாற்றினர். அதனால் கோபங் கொண்ட எனது மனைவி, ''நீ செய்த பாவம் தான் எமது குடும்பத்தைத் துன்புறுத்துகிறது. இந்தா மண்ணெண்ணெய் ஊற்றி நீயே கொழுத்து. நீ செத்தால் தான் எமது குடும்பம் உருப்படும் என்றாள்'' என்று மிக்க வேதனையோடு நாவேந்தன் திருநாவுக்கரசுவிற்குக் கூறினான்'' என்றது குமரன் எலி.

''எதுவும் தனக்கு வந்தால் தான் தெரியும்'' என்றது லட்சுமி எலி.

**320. நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்**
**நோய்இன்மை வேண்டு பவர்.**

''மனைவி அப்படிச் சொன்ன பின் எனத மூத்த சகோதரனும் வந்து என்னை வாயில் வந்தபடி பேசினான்,''உனது மனைவி சொன்னது போல நீ செத்தால் தான் எமது குடும்பங்கள் உருப்படும். செத்துத்தொலை'' என்றான்,''எனது மகன் சொன்னான்,''நான் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. மாணவர்கள் கேலி செய்கிறார்கள். அதனால் அம்மாவும், பெரியப்பாவும் சொன்னது போலை செத்துத்தொலை. நான் நிம்மதியாகப் பாடசாலைக்குப் போகலாம்'' என்றான். என்னால் அவர்களது பேச்சைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர்கள் சொல்வது போல நான் செய்த தீமைகள் தான் என்னை வந்து வருத்துகின்றன. துன்பம் செய்யாது வாழும் உங்களுக்கோ கதிரேசனுக்கோ எந்தத் துன்பமும் இல்லையே. ஏனென்றால் நீங்கள் மற்றவர்களுக்குத் துன்பம் செய்வதில்லை'' என்று அழுதான் என்றது குமரன் எலி.

''பட்டால் தான் தெரியும். சொல்லிப் பிரயோசனம் இல்லை'' என்றது லட்சுமி எலி.

## கொல்லாமை – 33

**321. அறவினை யாதுஎனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும்.**

''நாவேந்தன் மிகுந்த கவலையோடு மடத்திற்கு அருகே நிற்கும் அரசமரநிழலில் வெகுநேரமாகப் படுத்திருந்தான். அப்படி அவன் ஒரு நாளும் படுப்பதில்லை. எல்லோரும் பார்த்து விட்டுச் சென்றனரே தவிர யாரும் விசாரிக்கவில்லை. யோகநாதன் வந்து அவனின் அருகில் அமர்ந்தார், ''ஒருநாளும் இல்லாதது போல இன்று இதில் படுத்திருக்கிறாய். என்ன நடந்தது?'' என்று கேட்டார். சில நிமிடங்கள் எதுவும் பேசாத நாவேந்தன் சொன்னான், ''இன்றைக்குப் பிரதோச விரதம். எனக்குத் தெரியாது. சந்தையில் ஒரு சேவல்

வாங்கி வந்து உரித்துக்கொடுத்தேன். தாயும் மகளும் வந்து என்னை ஏசிக்கலைத்து விட்டுக்கோழியை நாய்க்குப் போட்டுவிட்டார்கள். முன்பென்றால் ஏசுவார்கள். இப்ப அடிக்கவும் வருகிறார்கள். எனது மகளை நினைக்கப் பயமாக இருக்கிறது. மனக்குழப்பம் உள்ளவள் நான் கதைத்தால் ஆயிரம் கதை சொல்கிறாள், ‘‘எந்த உயிரையும் கொல்லாமல் வாழ்வது தான் அறம். உயிர்க்கொலை தான் மற்றைய தீயசெயல்களுக்கெல்லாம் முதற்காரணி. இறைச்சிக்கு மதுகுடிக்க வேண்டும். மது குடித்தால் பிறருடன் சண்டை பிடிக்க வேண்டும். அதனால் வசைகள் பேசவேண்டும். இப்படி பாவங்கள் உயிர்க் கொலையால் தான் வருகின்றன’’ என்று வாய்க்கு வந்தபடி என்னை ஏசினாள். அதனால் புறப்பட்டு வந்து விட்டேன்’’ என்றான்’’ என்றது குமரன் எலி.

‘‘செய்த பாவங்கள் இப்பத் தான் சூழத்தொடங்கியுள்ளது’’ என்றது லட்சுமி எலி.

**322. பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை**

‘‘மத்தியானம் சாப்பிட்டாயா?’’ என்று யோகநாதன் கேட்க நாவேந்தன் இல்லை என்று தலையசைத்தான்,‘‘மடத்தில் உணவு கொடுக்கும் முன்பே வந்து விட்டாய். வந்து சாப்பிட்டிருக்கலாம் தானே’’ என்று யோகநாதன் கேட்க நாவேந்தன் சொன்னான்,‘‘நான் மடத்தில் அன்னதானம் செய்பவர்களைக் கேலி செய்வேன். அத்துடன் மாமிசமும் மதுவும் இல்லாமல் சாப்பிடமாட்டேன். முன்பு எனக்குப் பயந்து நடுங்கிய எனது மனைவி இப்போ மகள் கொடுத்த தைரியத்தால் என்னை எதிர்க்கிறாள். அவள் சொன்னாள்,‘‘நீ எப்போதாவது தானதர்மம் செய்தாயா..? மடத்தில் தினமும் அன்னத்தைத் தானமாகக் கொடுக்கிறார்கள். அதற்குக் காரணம் தமக்குக் கிடைத்த பொருளை பல உயிர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்டு வாழ்வது அறங்கள் எல்லாவற்றிலும் சிறந்த அறம் என்று நீதிநூல்கள் கூறுகின்றன. அம்மாவின் தந்தை அடிக்கடி அன்னதானம் செய்வார். அந்தப் பயன் தான் எனக்கு உயர் கல்வியைத் தந்தது. நீ தேடிய பணத்தில் குடித்து விட்டுத் தீமை செய்வதால் எனக்கு விசர் பிடித்து விட்டது’’ என்றாள். இதை எப்படித் தாங்குவது?’’ என்று அழுதான் நாவேந்தன்’’ என்று கூறியது குமரன் எலி.

‘‘காலங்கடந்து ஞானோதயம் ஏற்பட்டுள்ளது. இப்போது கூடத்திருந்தினால் நல்லது’’ என்றது லட்சுமி எலி.

**323. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று.**

‘‘நீ படுபாவி. கொலைப் பாதகன். உனக்கு தர்மத்தைப் பற்றி சொன்னால் விளங்குமா..? ஒரு தர்மத்தையாவது உனது வாழ்நாளில் செய்திருப்பாயா? மிக உயர்ந்த தர்மம் என்பது எந்த உயிரையும் கொல்லாமல் வாழ்வது. அதற்கு அடுத்த தர்மம் பொய்பேசாமல் வாழ்வது. நீ எத்தனை உயிர்களைக் கொன்றிருப்பாய். எத்தனையாயிரம் பொய்களைச் சொல்லியிருப்பாய். உன்னைப் போன்ற ஒருவனுக்குப் பிள்ளையாகப் பிறந்து விட்டேனே என்ற அவமானத்தால் தான் நான் தற்கொலை செய்ய விரும்பினேன். அதுவும் நடைபெறவில்லை’’ என்று கத்தினாள். அப்படி இருக்கும் போது நான் எப்படி வீட்டுக்குப் போவது’’ என்று அழுதான் நாவேந்தன்’’ என்றது குமரன் எலி.

‘‘இனி அழுது என்ன பிரயோசனம். இனித் திருந்தி வாழ்வேன் என்று சொன்னாலும் சுவர்ணா நம்பமாட்டாள். ஏனென்றால் நாவேந்தன் பலமுறை கோவிலில் சத்தியம் செய்தவன்’’ என்றது லட்சுமி எலி.

**324. நல்ஆறு எனப்படுவது யாதெனின் யாதுஒன்றும்**

**கொல்லாமை சூழும் நெறி.**

“நாவேந்தா, உனது மகள் நாவலர் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்ற போது தரம் ஒன்றிலும் இரண்டிலும் பத்மாசனி என்ற பிராமணப் பெண் தான் வகுப்பாசிரியராக இருந்து கற்பித்தவர். அவர் பிராமணப் பெண்ணாகையால் மாமிசம் உண்ணக் கூடாதென்று வற்புறுத்திக் கூறுவார். அவரிடம் கற்ற சில மாணவர்கள் மாமிசம் சாப்பிடாது விட்டுவிட்டனர். அதில் உனது மகளும் ஒருத்தி. பின் வளர்ந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான பின்பும் அவள் மாமிசம் உண்பதில்லை. நான் உன்னுடன் முன்பு குடித்து விட்டு உனது வீட்டுக்கு வந்தால் அவள் ஏசுவாள்,“உயிர்கள் எதையும் அழிக்காமல் வாழும் வாழ்க்கை தான் உயர்ந்த வாழ்க்கை. அவ் வாழ்க்கை தான் அறவாழ்க்கை. மாமிசம் உண்ணாதவர்கள் குடிப்பதில்லை. தீமையான செயல்களைச் செய்வதில்லை” என்பாள். அதனால் அவளுக்காக நீ இனிமேல் மாமிசத்தை உண்ணாமல் விடு. கஷ்டம் தான். என்ன செய்வது” என்று யோகநாதன் கூறிய போது நாவேந்தன் பதில் கூறவில்லை” என்றது குமரன் எலி.

“எப்படிப் பதில் கூறுவது. குடும்பத்துடன் அன்பாக இருந்து தீயசெயல்களைச் செய்யாதிருந்தால் மனைவி இரகசியமாகக் காய்ச்சிக் கொடுப்பாள். இவர் குடித்து விட்டு கண்டபடி உழறினால் எத்தனை நாட்களுக்குப் பொறுப்பது” என்று கேட்டது லட்சுமி எலி.

**325. நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை.**

“இப்போ எனது மகளுடன் கதைக்கவே முடியாது. அவள் படித்தவள். படிப்பில் கெட்டிக்காரி. அவளது கேள்விக்கு என்னால் பதில் கூற முடியவில்லை. நான் குடித்தாலும் தீயசெயல்களைச் செய்தாலும் முன்பு ஓரளவாவது மதித்தவள். இப்போ என்னைக் கண்டதும் அவளுக்குக் கொலை வெறி ஏற்படுகிறது, “இந்த ஊரில் எத்தனை பேர் ஒழுக்கம் தவறாது வாழ்கின்றனர். நீயும் அந்தக் கேவலமான வாத்தி உருத்திரகுமாரனும் இன்னும் இரண்டு மூன்று பேரும் தானே தீயவர்களாக இருக்கிறீர்கள். வாழ்க்கையில் வரும் துன்பங்களைக் கண்டு அஞ்சித் துறவிகளானவர்கள் பலர். மார்க்கண்டனைப் போன்றோர் துறவிகள் என்ற பெயரில் ஒழுக்கக்கேடாக நடக்கிறார்கள். பலர் ஒழுக்கமுள்ள தலை சிறந்த துறவிகளாக வாழ்கின்றனர். இவர்களை விட இல்வாழ்வில் இருந்து கொண்டு உயிர்களைக் கொல்லாது வாழ்பவர்களே உயர்ந்தவர்கள் என்று நூல்கள் கூறுகின்றன. அப்படி இருக்கும் போது சொல்லச் சொல்லக் கேளாது விரத நாட்களிலும் உயிர்க் கொலை செய்யும் உன்னை எனது தந்தை என்று ஏற்கமாட்டேன்” என்றாள். முன்பு போல ஏசிவிட்டு பேசாமல் இருப்பாளென நினைத்தேன். இன்று அவளது பேச்சு ஓயவே இல்லை. அதனால் வீட்டில் இருக்க முடியாது புறப்பட்டேன்” என்று நாவேந்தன் யோகநாதனுக்குச் சொன்னான்” என்றது குமரன் எலி.

“செய்த பாவமெல்லாம் ஒன்றாகச் சூழ்ந்து விட்டது” என்றது லட்சுமி எலி.

**326. கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லாது உயிர்உண்ணும் கூற்று.**

“கதிரேசன் ஐயாவுக்கு எண்பத்தைந்து வயது. இப்போதும் இளைஞனைப் போலத் துடிப்புடன் இருக்கிறார். தினமும் காலையில் கோவிலைக் கூட்டித் துப்பரவு செய்கிறார். மரங்களுக்கு நீர் பாய்ச்சுகிறார். தனது வேலைகளைத் தானே செய்கிறார். உனக்கு இப்போது ஐம்பத்தைந்து வயது நடந்தால் மூச்செடுக்கிறது. ஒரு நாளென்றாலும் கோவிலடியைக் கூட்டியிருப்பியா? நடக்கக் கஷ்டம் என்று ஓட்டோவில் செல்கிறாய். இது ஏன் தெரியுமா..? உயிர்களைக் கொல்லாமை என்ற அறத்தைக் கடைப்பிடிப்பவர்களை உலகத்து உயிர்களையெல்லாம் அழிக்கும் யமன் கூட நெருங்கமாட்டான். கதிரேசனது தந்தையார் புலால்

உண்பதில்லை. அவர் நூறு வயது கடந்தும் வாழ்ந்தவர். நீ கொலை செய்பவன். உன்னை யமன் விரைவாகக் கூட்டிச் சென்று விடுவான் என்று சொல்கிறாள்'' என்று நாவேந்தன் துயரத்துடன் கூறினான்'' என்றது குமரன் எலி.

''உவை இருப்பதிலும் பார்க்க இறப்பது நல்லது என்று யமன் தீர்மானித்திருப்பான்'' என்றது லட்சுமி எலி.

**327. தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது**
**இன்உயிர் நீக்கும் வினை.**

''செல்வராசா மாமா மிகவும் நல்லவர். ஒழுக்கமானவர். மாமிசம் உண்ணாதவர். அவருக்குத் திடீரென்று நோய் வந்து விட்டது. செய்யாத வைத்தியம் இல்லை. எல்லோரும் அவருக்கு யாரோ செய்வினை செய்து விட்டதாகக் கூறினர். பூசை செய்து பலி கொடுத்து கழிப்புக் கழித்தால் அவரது நோய் குணமாகி விடும் என்று ஊரவர் கூறினர். அவரது மனைவி தவனேஸ்வரியும் ஆசாரம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். இருப்பினும் பலி கொடுக்க அனுமதிக்கும் படி தனது கணவனைக் கேட்டாள். அவர் சொன்னார், ''தவனேஸ், எனது உயிருக்கு ஆபத்து என்பதற்காக இன்னோர் உயிரைப் பலியிட நான் விரும்பவில்லை. நான் வணங்கும் கடவுளும் அப்படிச் சொல்லவில்லை. பிழைப்புக்காகச் சிலர் மக்களை ஏமாற்றி வருகிறார்கள். ஓர் உயிரைப் பலியிடுவதை விட நான் இறக்கலாம்'' என்றவர். அவர் உனது மைத்துனர். அவருக்குள்ள உணர்வு ஏன் உனக்கில்லாமல் போனது?'' என்று கேட்கிறாள். இதற்கு நான் என்ன சொல்வது என்று கலங்கியபடி கூறினான் நாவேந்தன்'' என்றது குமரன் எலி.

''யோகநாதனும் நாவேந்தனைப் போலத் தானே வாழ்ந்தவர். அவரால் என்ன சொல்ல முடியும்?'' என்றது லட்சுமி எலி.

**328. நன்றுஆகும் ஆக்கம் பெரிதுஎனினும் சான்றோர்க்குக்**
**கொன்றுஆகும் ஆக்கம் கடை**

''செல்வராசா மாமா தன்னுயிரை விடப்பிற உயிர்களை நேசித்தமையால் தான் அப்படிச் சொன்னவர். அத்துடன் கழிப்புக் கழித்துப் பலி கொடுத்ததால் சுகமான ஒருவரைச் சொல்லு என்று தனது மனைவியைக் கேட்டவர். அவர் தான் உண்மையான மனிதன். கொல்வதால் ஏற்படும் பயனை அறிவில்லாதவர்கள் பெரிதாக எடுப்பதில்லை. ஆனால் அறிவுடையவர்கள் சொல்வதை மிகமிக இழிவாகக் கருதுவார்கள். கொல்லாதவன் கடவுளைப் போன்றவன். துறவிகளை விட உயர்ந்தவன். நீ கொலைகாரன். என்முன் நில்லாதே என்று கத்துகிறாள். அதனால் தான் வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்தேன்'' என்றான் நாவேந்தன்'' என்றது குமரன் எலி.

''தினை விதைத்தவர் தினை அறுப்பர். வினை விதைத்தவர் வினையைத் தானே அறுக்க வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**329. கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்**
**புன்மை தெரிவார் அகத்து**

''கொலைத் தொழில் இழிவானது. கொலை செய்வோர் புலையர் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். நீ புலையன். அதனால் நீ எமது வீட்டில் இருக்கக் கூடாது. இது அம்மாவின் தகப்பனின் வீடு அதனால் உடனே இங்கிருந்து வெளியே போ'' என்று கத்துகிறாள். நல்லாயிருந்தவளின் மனதை நான்

தான் பாதிப்படையச் செய்துவிட்டேன். எனக்கு இத்தண்டனை சரியானது'' என்று அழுதான் நாவேந்தன். நாவேந்தனது துயரத்தைப் பொறுக்க முடியாது யோகநாதனும் கண் கலங்கினார்'' என்றது குமரன் எலி.

''தந்தை தான் பிள்ளைக்குப் பாடங்கற்பிப்பது. இங்கு மகள் கற்பிக்கிறாள்'' என்றது லட்சுமி எலி.

**330. உயிர்உடம்பின் நீக்கியார் என்பசெயிர் உடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்.**

''நோய் மிகந்த உடம்போடு வறுமையில் வாடித் துன்பப்படும் நிலை, முன்னர் பல கொலைகளைச் செய்து உயிர்களை அழித்தவர்களுக்கு ஏற்படும் என்று நான் படித்துள்ளேன். அது உண்மை. இப்போ நீ நோயாளியாகி விட்டாய். உழைக்கவும் முடியாது. நீ செய்த கொலைகளுக்கான பழி முழுவதும் என்னை வந்தடைந்து விட்டது. இனி நான் என்ன செய்வது? படிப்பும் முடியவில்லை. தொடர்ந்து படிக்கவும் முடியவில்லை'' என்று அழுதவள். அதைப் பார்த்து சகிக்க முடியவில்லை'' என்று அழுதான் நாவேந்தன்'' என்றது குமரன் எலி.

''அழுது பாசாங்கு காட்டிக் குடும்பத்தோடு சேரப்பார்க்கிறான்'' என்றது லட்சுமி எலி.

## நிலையாமை – 34

**331. நில்லா தவற்றை நிலையின என்றுஉணரும்**
**புல்லறிவு ஆண்மை கடை.**

''நன்றாக இருண்டு விட்டது. நாவேந்தனுக்குப் பசித்தது. மடத்தில் இரவு உணவு கொடுத்துக் கொண்டிருந்தனர். ''நாவேந்தா பகல் உணவு உண்ட எனக்கே இப்போ பசிக்கிறது. பகல் உணவை உண்ணாத உனக்கு எப்படிப் பசிக்கும் என்பது எனக்குத் தெரியும். நீ இது வரை ஒரு நேரஉணவைக் கூட மடத்தில் உண்ணவில்லை. அந்தளவில் உன்னிடம் பணம் இருந்தது. அத்துடன் திமிரும் இருந்தது. இந்தத் திமிர் நல்லவற்றைச் சிந்திக்க விடாது. நீ கட்டிய மனைவியோ, பிள்ளைகளோ இல்லை. நீ தேடிய பணம், பொருளோ உன்னுடன் கூட வராது. நீ செய்யும் பாவபுண்ணியங்கள் தான் உன்னுடன் கூட வரும். நீ சாப்பிடவில்லையென்று உனது பெற்றோருக்கும்,சகோதரங்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் தெரியும். ஆனால் யாராவது ஒருவர் உன்னைத் தேடி வந்தார்களா? இல்லையே. நிலையில்லாதவற்றை நிலையானவை என்று தவறாக எண்ணுவது அறியாமை ஆகும். அது இழிவையே தரும். இதை உணராமல் இவ்வளவு காலமும் வாழ்ந்து விட்டாய். எல்லாவற்றையும் விட்டு விட்டு எழுந்து வந்து சாப்பிடு'' என்று யோகநாதன் நாவேந்தனுக்குக் கூறிய போதும் அவன் எழுந்து செல்லவில்லை'' என்றது குமரன் எலி.

''வீறாப்பு, திமிர், ஆணவமெல்லாம் காலப் போக்கில் தளர்ந்து அழிந்து விடும் என்பதை அவன் உணரவில்லை'' என்றது லட்சுமிஎ லி.

**332. கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று.**

''நாவேந்தா, நீ பெரும் பணக்காரனில்லா விட்டாலும் வசதியானவன். பணம் வரும் போகும். நீ வாகனங்களை வியாபாரம் செய்யும் போது நட்டமும் வரும் இலாபமும் வரும். பெருஞ் செல்வம் வரும் போது கூத்தாடும் இடத்தில் நிறைய மக்கள் வந்து சேர்வதைப் போலப் பணம் வந்து குவியும். அச்செல்வம் போகும் போது கூத்துப்பார்த்த மக்கள் கலைந்து செல்வதைப் போலப் போய் விடும் என்பார்கள். இப்போ உனக்குக் கெட்ட காலம் வருமானம் குறைவு. உன்னை உன் குடும்பத்தினர் வெறுக்க அதுவும் ஒரு காரணம். நீ உள்ளே வந்து சாப்பிடு. வெட்கப்பட்டால் நான் உணவை எடுத்து வந்து தருகிறேன்'' என்று

யோகநாதன் சொல்ல,‘‘இல்லை நான் வருகிறேன்’’ என்று கூறி எழுந்து மடத்துள்ச் சென்றான் நாவேந்தன்’’ என்றது குமரன் எலி.

‘‘இது கிராமம் சாப்பாட்டுக் கடைகள் இல்லை. ரோசத்தைப் பார்த்தால் பசி அடங்குமா..?’’ என்று கேட்டது லட்சுமி எலி.

**333. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்.**

‘‘இருவரும் சாப்பிட்டு வெளியே வந்து மீண்டும் அரசமர நிழலில் இருந்தனர். நாவேந்தன் சொன்னான்,‘‘நான் அறிவிருந்தும் முட்டாளாக வாழ்ந்து விட்டேன். சுவர்ணாவின் பெயரில் பத்து இலட்ச ரூபாவை வைப்பில் இட்டுள்ளேன். எனது ஒவ்வொரு பிள்ளைக்கும் வங்கியில் கணக்குண்டு. குடும்பத்தை நேசிக்காவிட்டால் அவர்களுக்குப் பணம் போட்டிருப்பேனா. நீ சொல்வதைப் போல செல்வம் எப்போதும் ஒருவரிடம் தங்கி நிக்காது. எனவே செல்வம் இருக்கும் போது நிலைத்து நிற்கும் அறங்களைச் செய்தல் வேண்டும். நான் பணம் நிலைத்திருக்குமென்று நினைத்து அறக்காரியங்கள் எதையும் செய்யவில்லை. இம்மடம் கட்டும் போது நிதி கேட்டு வந்தவர்களை ஏசினேன்,‘‘உழைப்பவர்களைச் சோம்பேறியாக்காதீர்கள். அனாதைகள் என்று யாரும் இல்லை. மடத்தில் இருப்பவர்களுக்குப் பிள்ளைகள், சகோதரங்கள் உண்டு. அவர்களைக் கவனிக்கச் சொல்லுங்கள் என்றேன். நான் சொன்னது தவறு என்று இன்று உணர்ந்து கொண்டேன். நான் செய்தது தவறு தான். ஆனால் எனது பணம் முழுவதையும் அவர்களல்லவா வைத்திருக்கிறார்கள். இது சரியா..? என்று நாவேந்தன் யோகநாதனைக் கேட்டான். அவர் பதில் கூறவில்லை’’ என்றது குமரன் எலி.

‘‘இதற்கு எப்படிப் பதில் கூறுவது’’ என்று கேட்டது லட்சுமி எலி.

**334. நாள்என ஒன்றுபோல் காட்டி உயிரும்ஈரும்**
**வாள்அது உணர்வார்ப் பெறின்**

‘‘நாவேந்தா, யோசித்துப்பார். நாள் என்பது ஒரு கால அளவு. அது உடம்பிலிருந்து உயிரைப் பிரித்து அறுக்கும் வாள். இளமையில் நான் எப்படி இருந்தேன். இப்போ எப்படி இருக்கிறேன். வயது சென்றதால் உடல் பலவீனமடைந்து விட்டது. இன்றோ நாளையோ எனது வாழ்வு முடிந்து விடும். எண்பது வருடங்கள் நான் வாழ்ந்தேன். அந்த வாழ்க்கையால் யாருக்கும் பயனில்லை. கதிரேசன் நமசிவாயகம், திருநாவுக்கரசு போன்றோர் தமக்காகவும், பிறருக்காகவும் வாழ்ந்தனர். இன்றைக்குக் கதிரேசனுக்கு ஒரு நோய் வந்தால் அவரைப் பராமரிக்க ஊரே தயாராக இருக்கிறது. எமக்கு நோய் வந்தால் யார் பார்ப்பார்கள். நீ தேடிய பணம் உன்னைக் காப்பாற்றுமா..? இல்லையே. நாம் ஒழுக்கமுள்ளவர்களாகவும், பிறருக்கு உதவிகள் செய்பவர்களாகவும் வாழ்ந்திருந்தால் இந்நிலைமை எமக்கேற்பட்டிராது’’ என்று சொல்லி யோகநாதன் கலங்க நாவேந்தன் திகைத்துப் போயிருந்தான்’’ என்றது குமரன் எலி.

‘‘வெள்ளம் வந்த பின்பு வரம்பு கட்ட முடியுமா..?’’ என்று கேட்டது லட்சுமி எலி.

**335. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்.**

‘‘என்னால் இனி உழைக்க முடியாது. அதனால் திடகாத்திரமான உடல் உள்ள வேளைகளில் எம்மால் இயன்றளவு நற்செயல்களைச் செய்தல் வேண்டும். நாவை அடக்கி விக்கல் எழுந்து சாவு வரும் நிலையில் நான் இருக்கிறேன். நீ அப்படியல்ல. இனியாவது நல்ல செயல்களைச் செய். அதற்காகக் குடும்பத்தைக் கவனியாது விடாதே. உன்னை நம்பி வந்தவளையும், உன்னால் பிறந்தவர்களையும்

காப்பாற்றா விட்டால் உனக்கு நரகம் தான் கிடைக்கும். உனது மனைவியும், பிள்ளைகளும் நல்லவர்கள். நீ தீயவர்களுடன் சேர்ந்து தீயசெயல்களைச் செய்தமையால் உனது குடும்பத்திற்குப் பெரும் பாதிப்பு உண்டானது. நன்றாகப் படித்த உனது மகள் இப்போது மனம் குழம்பியுள்ளாள். இதை எந்தத் தாயால் பொறுக்க முடியும். ஒருவன் நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது. நீ உனது குடும்பத்தவர்களுக்கு எவ்வளவு தீமைகள் செய்தாய். அமைதியாக இருந்து யோசித்துப்பார் விளங்கும்'' என்று யோகநாதன் கூறினார்'' என்றது குமரன் எலி.

''இனியும் யோசிக்காவிட்டால் அவன் மனிதனில்லை'' என்றது லட்சுமி எலி.

**336. நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு**

''கதிரமலை பாடசாலைக்குச் சென்று அதிபரைச் சந்தித்துக் கதைத்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று மயங்கி விட்டாராம். உடனே அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். வைத்தியர் அவர் இறந்து விட்டதாகக் கூறினாராம். வாவன் செத்த வீட்டுக்குப் போவம். நல்ல மனிதன். அடிக்கடி எனக்குப் பண உதவி செய்பவர். பாடசாலை விளையாட்டு மைதானம் சிறியது. அதனால் பக்கத்தில் இருக்கும் காணியை விற்கப்போகிறார்களாம். அது சம்பந்தமாகக் கதைக்கப் போனவர். வயது கூட நாற்பது வரை தான் இருக்கும். செல்லும் போது உற்சாகமாகச் சென்ற அவரைப் பிணமாக வீட்டுக்குக் கொண்டந்திருக்கிறார்கள். இது தான் உலகம். நேற்றிருந்தவர் இன்றில்லை என்று சொல்லும் பெருமையை உடையது இந்த உலகம். நான் எந்தவிதமான பிரயோசனமும் இன்றிப் பூமிக்குப் பாரமாக இருக்கிறன். பலருக்கு உதவிகள் செய்த மனிதனைப் பாவம் பாராது யமன் அழைத்துச் சென்று விட்டான். அதனால் எது எந்நேரமும் நடக்குமென்று கூறமுடியாது. அதனால் வாழும் வரை பயனுள்ளதாக வாழவேண்டும்'' என்று யோகநாதன் நாவேந்தனுக்குக் கூறினார்'' என்றது குமரன் எலி.

''நேற்று நாவேந்தனின் மனைவியோடு நாவேந்தனைப் பற்றிக் கதைத்து விட்டு,''எனக்கொரு அவசியமான வேலை உள்ளது நாளைக்குச் சந்திப்பம்'' என்றவர். இப்ப போய்ச் சேர்ந்திட்டார்'' என்றது லட்சுமி எலி.

**337. ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல.**

''வாழ்க்கையின் தத்துவத்தை ஒரு போதும் அறியாத நான் பல கோடிக்கணக்கான எண்ணங்களை மனதில் உருவாக்கி வளர்ந்து வாழ்ந்து வந்தேன். எனது மகள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானதும் நான் தான் இவ்வூரில் உயர்ந்தவன் என நினைத்தேன். அவளுக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என நினைத்தேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அதற்குக் காரணம் நான் முறையாக வாழாமையே. என்னைப் போன்ற தீயவர்கள் தம்முள் ஏராளமான எண்ணங்களை உருவாக்கிக் கற்பனையில் மகிழ்கிறார்கள். கதிரேசனைப் போன்ற பெரியவர்கள் கற்பனை செய்யாது வாழ்வின் தத்துவத்தை உணர்ந்து முறையாக வாழ்கிறார்கள். அவர்கள் நினைக்காதவையெல்லாம் நடைபெறுகின்றன. கதிரேசன் அடிக்கடி சொல்வார் எல்லாம் இறைவன் செயல். அவன் இயக்குகிறான். நான் இயங்குகிறேன் என்று. ஆனால் நான், நான் தான் செயல்களுக்குக் காரணமானவன். என்னை யாராலும் வெல்ல முடியாதென்று இறுமாந்திருந்தேன். இது தான் என்னைத் துன்புறுத்தியது'' என்று நாவேந்தன் யோகநாதனுக்குச் சொன்னான்'' என்றதுகுமரன் எலி.

''காலங்கடந்த பின்னாவது உண்மை உறைத்திருக்கிறது'' என்றது லட்சுமி எலி.

**338. குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே**

**உடம்போடு உயிரிடை நட்பு.**

“கதிரைமலையின் மரண வீட்டுக்கு வந்தவர்களெல்லாம் அவரை மலையளவு புகழ்ந்தார்களாம். இரங்கலுரையில் கதிரேசன் சொன்னாராம், “கதிரமலை பெயருக்கேற்ப சேவையில் உயர்ந்த மலை தான். இறக்கும் போது கூட அவர் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தைப் பெருப்பிப்பதற்காக அருகில் உள்ள காணியை வாங்க விரும்பியுள்ளார். முன்பிருந்த அதிபரை வெளிநாட்டில் இருந்து வந்த சிவகுமார் என்ற மாணவன் விளையாட்டு மைதானம் ஒன்று வாங்கித் தருவதாகக் கூறி அவரை ஏமாற்றி விட்டான். அதில் பெரும் பாதிப்பு உண்டான போது உதவியவர் கதிரமலை. அதனால் அவர் விளையாட்டு மைதானத்தைப் பற்றியே எண்ணியிருந்தார். உடம்புக்கும், உயிருக்கும் உள்ள தொடர்பென்பது முட்டைக்கும் குஞ்சுக்கும் உள்ள உறவைப் போன்றது. குஞ்சு வெளிப்பட்டதும் முட்டை தேவையில்லாமல் போய்விடும். அது போல் உயிர் வெளியேறியதும் உடல் தேவையில்லாத பொருளாகிவிடும். அதனால் உடம்பில் உயிர் உள்ளபோது நற்செயல்கள் பலவற்றைச் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கதிரமலை செய்தவர்” என்று கதிரேசன் பேசியதாக யோகநாதன் நாவேந்தனுக்குச் சொன்னார்” என்றது குமரன் எலி.

“பலர் சமூக சேவைகள் செய்தவர்களைப் பற்றிப் பெரிதாகப் பேசமாட்டார்கள். கதிரேசன் அப்படியானவர் அல்ல” என்றது லட்சுமி எலி.

**339. உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**

“திருநாவுக்கரசுவும் நன்றாகப் பேசினாராம். தான் வாழ்ந்த ஊரில் இங்கிருந்து வந்து வேலை செய்யும் ஒருவர் இருந்தாராம். அவன் அன்று இரவு உணவு உண்டு விட் மனைவி மக்களோடு மகிழ்வாகக் கதைத்து விட்டு நித்திரைக்குச் சொன்றாராம். விடியற்காலை நான்குமணிக்கு அவர் நித்திரை விட்டெழுவாராம். அன்று ஆறு மணியாகியும் எழும்பாததால் மனைவி சென்று பார்த்த போது அவர் இறந்திருப்பது தெரிய வந்ததாம். உயிர் எப்போது உடலை விட்டுப் பிரியும், எப்படிப் பிரியும் என்று யாருக்கும் தெரியாது. உறங்குவது போன்றது மரணம். உறங்குபவனுக்கு நடப்பவை எதுவும் தெரியாதது போல இறந்தவனுக்கும் எதுவும் தெரியாது. உறக்கத்தில் இருந்து விழித்தால் தான் உயிர் இருப்பது தெரியும். ஒவ்வொரு நாளும் இறந்து இறந்து பிறக்கிறது” என்று பேசியதாக நாவேந்தன் சொன்னான்” என்றது குமரன் எலி.

“வாழ்வு அப்படி இருக்க அதையெண்ணாது கற்பனைகளுடனும், கனவுகளுடனும் தானே பலர் வாழ்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு**

“நமசிவாயகமும் நன்றாகப் பேசினார் என்று யோகநாதன் நாவேந்தனுக்குக் கூறினார், “பல்வேறு வகையான நோய்களுடன் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் உடலுக்குள் இந்த உயிர் எங்கே தங்கியிருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. பூமியில் மட்டுமல்லாது வானில் மிதக்கும் கோள்களையும் ஆராய்ச்சி செய்து பல புதுமைகளை நிகழ்த்தும் மனிதரால் தனது உடலில் உயிர் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியாதது விநோதமல்லவா. இந்த உயிர் உடலின் ஒரு பகுதியில் தங்கியிருக்க இடங்கிடைக்கவில்லை என்று மெஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதனால் எப்போ உடலை விட்டு உயிர் பிரியப்போகிறதென்று தெரியாமல் வாழும் மனிதர்கள் தாமதியாது நற்செயல்களைச் செய்ய வேண்டுமென நினைத்துக் கதிரமலை பல்வேறு வேறுவிதமான சமூகசேவைகளைச் செய்து வந்தார். அவரைப் பின்பற்றுங்கள். அவரது ஆன்மா சாந்தியடையப் பிராத்திப்போம்” என்று பேசினாராம்” என்றது குமரன் எலி.

“இதைச் சுடலை ஞானம் என்று அறிவுள்ள மனிதர் சொல்வார்கள். அறிவுரைகளைச் சொல்வோரும் பின்பற்றுவதில்லை. கேட்போரும் நினைவில் வைப்பதில்லை’’ என்றது லட்சுமி எலி.

## துறவு – 35

**341. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.**

“நாவேந்தனின் மகள் சுவர்ணாவைச் சந்திப்பதற்காக திருநாவுக்கரசு அவர்களது வீட்டுக்கு வந்த போது அவருடன் யோகநாதனும் வந்தார். “மகளே, உனது தந்தை செய்தது மிகப்பெரிய தவறு. அதை இவ்வளவு காலமும் பொறுத்த நீ இப்போது தான் அவன் அத்தீயசெயல்களைச் செய்வதாக நினைக்கிறாய். இப்போ நாவேந்தன் திருந்தவேண்டுமென்று நினைக்க ஆரம்பித்த வேளையில் நீயும் உனது தாயாரும் கோபித்தால் அவன் திருந்தவே மாட்டான். அதனால் அவனுக்குத் திருந்துவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள். ஒருவன் ஒருபொருளில் தீவிரமாக ஆசைகொள்வதால் பல பிரச்சினைகள் உருவாகும். அவன் ஆசை கொண்ட அப்பொருளில் இருந்த ஆசையை நீக்கிவிட்டால் அப்பொருளால் துன்பமடைவதில்லை. உனது காதலன் உன்னை விரும்பியிருந்தால் உனது தந்தைக்காக உன்னை வெறுத்திருக்க மாட்டான். அவன் உனது அழகை விரும்பினான். ஆனால் பணம் இல்லை என்று அறிந்ததும் உன்மீதிருந்த ஆசையை நீக்கி விட்டு இன்னொரு பெண்ணுடன் இன்பமாக வாழ்கிறான். அதற்காக நீ வருந்தலாமா..? யோசித்துப் பார். நீயும் அவன் மீதிருக்கும் ஆசையை நீக்கு. அதனால் மகிழ்வுடன் வாழலாம்’’ என்று கூறச் சுவர்ணாவின் மனதில் மாற்றம் உண்டானது என்று யோகநாதன் கூறினார்’’ என்றது குமரன் எலி.

“ஆண்களில் பெரும்பான்மையானோர் பொழுதுபோக்கிற்காகவே காதலிக்கின்றனர். பின் ஏதாவது ஒரு சாட்டைச் சொல்லி விலகி விடுகின்றனர். இதைப் படித்த பெண்களும் உணர்வதில்லை’’ என்றது லட்சுமி எலி.

**342. வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டுஇயற் பால பல**

“மகளே, துன்பமில்லாத வாழ்வு வேண்டுமானால் தனது தகுதிக்கு மேற்பட்டவற்றில் ஆசைகொள்ளக்கூடாது. மீறி ஆசைப்பட்டால் துன்பம் தான் மிஞ்சும். நீ காதலித்தவன் பெரிய பணக்காரனின் மகன். அவன் உன்னையல்ல வேறு சில பெண்களையும் விரும்பி அவர்களுடன் சுற்றியுள்ளான். காதல் என்பது இரண்டு மனங்களிலும் உண்டாக வேண்டும். ஒன்றில் காமமும் மற்றதில் காதலும் இருந்தால் என்ன ஆகும்? அவன் உன்னைக் காதலிக்கவில்லை. காமுற்றான் என்பதை அறிந்த பின்பும் அந்த ஆசையை நீங்கவிட்டால் ஓயாத துன்பங்கள் தான் உண்டாகும் என்பதை உனது வீட்டிலேயே நடைபெறும் சம்பவங்கள் மூலம் அறிந்துள்ளாய். ஒரு பாதையால் செல்வது ஆபத்து என்று அறிவிப்பைப் பார்த்த பின்பும் அப்பாதையால் செல்வது அறிவுடைமையாகாது. அதனால் அவன் மீதிருக்கும் ஆசையை அகற்றி விட்டு உனது தந்தையின் செயற்பாடுகளை அவதானி’’ என்று திருநாவுக்கரசு சுவர்ணாவுக்குக் கூறியதாக யோகநாதன் சொன்னார்’’ என்றது குமரன் எலி.

“பாவம் பெண்கள். ஆண்கள் மனதில் ஒரு திட்டத்துடன் பழகுகிறார்கள் என்பதை அறியாது அவர்களை நம்பி வாழ்க்கையை நாசமாக்குகிறார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**343. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு**

‘‘மகளே, ஐம்புலன்களும் மிக்க கொடியவை. அவை மனிதனைத் தனது பிடிக்குள் வைத்து ஆட்டிப் படைக்கும். அதனால் ஐம்புலன்களையும் அடக்க வேண்டும். அதற்காகத் துறக்க வேண்டிய எல்லாவற்றையும் துறக்க வேண்டும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். காதல் என்பது ஐம்புலன்களையும் ஆட்கொண்டு மனிதர்களை ஆட்டிப்படைப்பது. ஐம்புலன்களும் காதலால் உண்டாகும் உணர்வுகளை எந்நேரமும் விரும்பும். உடலைத் தீண்டுவது இன்பம், பேசுவது இன்பம், பார்ப்பது இன்பம், முகர்வது இன்பம், கேட்பது இன்பம். இவை மூலம் ஆயிரக்கணக்கான இன்பங்கள் தோன்றும். உண்மையான காதலனால் இவை தோன்றுவதால் ஆபத்து இல்லை. பொய்யான காதலானால் இவற்றால் பெரும் தீமைகள் உண்டாகும். உனது காதல் பொய்யானது. அதனால் ஐம்புலன்களையும் அடக்கு. அதற்காகத் துறக்க வேண்டிய அனைத்தையும் துறந்தாயேயானால் எதிர்காலத்தை இன்பமாகக் கழிப்பாய்’’ என்று திருநாவுக்கரசு சுவர்ணாவுக்குச் சொன்னதாக யோகநாதன் சொன்னார்’’ என்றது குமரன் எலி.

‘‘வாழ்க்கையில் காதல் ஒரு பகுதி. காதல் தான் வாழ்க்கை அல்ல என்பதைப் புரிந்து கொள்வோர் துன்பப்படமாட்டார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**344. இயல்புஆகும் நோன்பிற்குஒன்று இன்மை உடைமை**
**மயல்ஆகும் மற்றும் பெயர்த்து**

‘‘ஒருவன் தவம் செய்ய வேண்டுமானால் முதலில் பற்றுக்கள் அனைத்தையும் துறக்க வேண்டும். பற்றுக்கள் இருந்தால் புலன்கள் அவற்றை நிறைவேற்ற நினைக்கும். அதனால் தவம் குழம்பும். தவவாழ்வை விட இல்வாழ்வு தான் சிறந்தது என்பார்கள். இல்வாழ்வான் பற்றில்லாதவனாக இருந்தால் அவ் இல்வாழ்வு நரகமாகி விடும். இல்வாழ்வு சிறக்க வேண்டுமானால் நற்செயல்களில் பற்று வைத்து தீயசெயல்களை விலக்க வேண்டும். நீ படித்தவள். பலருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவர். தீயவற்றின் மீது பற்றுக்கொண்டு வாழ்க்கையைத் துன்பமுடையதாக்காதே. அவற்றை விலக்கி விடு. வாழ்க்கை என்பதும் தவம் தான். அதனால் பற்றுக்களை நீக்கி வாழத் தயாராகு’’ என்றும் திருநாவுக்கரசு சொன்னதாக யோகநாதன் சொன்னார்’’ என்றது குமரன் எலி.

‘‘பெண்கள் காதலிப்பது தவறல்ல. ஆனால் அதை நினைத்துத் தமது பொன்னான வாழ்வை அழிப்பது தான் மகாதவறு’’ என்றது லட்சுமி எலி.

**345. மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்புஅறுக்கல்**
**உற்றார்க்கு உடம்பும் மிகை.**

‘‘மகளே,மனிதன் மீண்டும் மீண்டும் பிறக்காத நிலையை உண்டாக்கிக் கொள்ளல் வேண்டும். ஆசைகள் தீயவற்றைச் செய்யச் சொல்லும். செய்தால் தீமைகள் தான் வரும். ஒரு தீமையை நீக்க பல தீமைகள் செய்யும் நிலை உருவாகும். இதனால் பாவங்கள் பெருக பிறவிகளும் பெருகும். உடம்பு பாரமானது, நோய் மிகுந்தது. அதனால் பலவீனமானது. அப்படியிருந்தும் பலர் பலதின் மீதும் ஆசைப்பட்டு அது கிடைக்காததால் துன்பப்படுகின்றனர். பிறவியை வெறுப்பவன் ஆசைப்படமாட்டான். ஆசையில்லாத வாழ்வு அலைகள் இல்லாத கடலைப் போல அமைதியாக இருக்கும். வாலிப வயதில் தான் ஆசைகள் மனதில் அதிகமாக வரும். அதையடக்கினால் எதிர்காலம் சிறப்பானதாக இருக்கும். அதனால் நீ கொண்ட காதலின் மீதுள்ள பற்றை நீக்கு. நீ கற்றவள். புரிந்து கொள்வாயென நினைக்கிறேன்’’ என்று சுவர்ணாவுக்கு திருநாவுக்கரசு கூறியதாக யோகநாதன் சொன்னார்’’ என்றது குமரன் எலி.

‘‘பாவம் அவள். காதலால் வரும் துன்பம் கடலை விடப்பெரியது. அதை நீக்கினால் தான் இன்பம்’’ என்றது லட்சுமி எலி.

**346. யான்எனது என்னுஞ் செருக்கு அறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்**

“உருத்திரகுமாரன் திருநாவுக்கரசுவைத் தேடிக் கொண்டு கோவிலுக்கு வந்த போது அவர் கஜேந்திரனுடன் கதைத்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ட உருத்திரகுமாரன் யோகநாதனை அனுப்பி உடனே வந்து சந்திக்குமாறு கூறினான். திருநாவுக்கரசு பாடசாலையின் அருகில் பாடசாலைக்கென அவர் வாங்கிக் கொடுத்த நிலத்தைத் துப்பரவு செய்வது பற்றிப் பேசிக்கொண்டிருந்தமையால் உடனே அவர் வரவில்லை. அதைத் தவறாகப் புரிந்து கொண்ட உருத்திரகுமாரன் திருநாவுக்கரசுவிடம் வந்து சொன்னான்,“நான் சொல்லியனுப்பி அரைமணித்தியாலத்திற்கு மேலாகிறது. என்னை மதிக்காமல் இன்னொருவனோடு பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இவன் என்னை விடப் பெரியவனா? பணக்காரனா? இல்லை ஊரார் மதிப்பவனா?” என்று கேட்டான். அப்போது திருநாவுக்கரசு முக்கியமான விடயம் கதைக்கிறேன். சிறிது நேரம் பொறுத்திரு” என்று கூறிவிட்டுத் தொடர்ந்து கதைத்தார். அது உருத்திரகுமாரனுக்குப் பிடிக்கவில்லை. சிறிது நேரத்தின் பின் வந்த திருநாவுக்கரசு சொன்னார்,“நான் எனது என்ற அஞ்ஞானமான ஆணவத்தை அழிப்பவன் தேவர்களும் அடைய முடியாது சுவர்க்கத்தை அடைவான் என்பார்கள். பாடசாலை பற்றிய முக்கியமான விடயத்தைக் கதைத்ததால் வரமுடியவில்லை. இனிச் சொல் என்றார் என்றது குமரன் எலி.

“அவசரப்படுபவர்கள் ஆபத்துக்குள்ளாவர் என்று பெரியவர்கள் சொல்வார்கள்” என்றது லட்சுமி எலி.

**347. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**
**பற்றி விடாஅ தவர்க்கு**

“எதுவும் சொல்லாதிருந்த உருத்திரகுமாரனைப் பார்த்து திருநாவுக்கரசு சொன்னார்,“முக்கியமான விடயங்களை இடைநடுவில் கதைக்காது விட்டால் பின் ஆரம்பத்தில் இருந்து கதைக்க வேண்டிய நிலை உண்டாகும். ஒருவரிடம் தன்தேவையைச் சொல்லப்போபவன் பொறுமையாகக் காத்திருந்து தான் அதைச் சொல்லல் வேண்டும். எனக்கு எல்லோரும் சமம். எல்லோரையும் ஒரே மாதிரி மதிப்பவன் நான். நான் எனது என்ற பற்றுக்களை விடாதவர்களைப் பலவிதமான துன்பங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். இப்போ நீ சொல்ல வந்த விடயத்தைச் சொல்” என்றார். உருத்திரகுமாரன் சொல்லாது திரும்பினான். அப்போது எதிரே வந்த நவராசா சொன்னான்,“சிதம்பரக் கோவிலுக்குச் சொந்தமான காணிகளைக் கள்ள உறுதி முடித்து வைத்து விட்டு உங்கடை காணி என்று சொல்கிறீர்கள். அதை விடப் பகிடி அந்த நிலத்தை அன்பளிப்பாகத் தந்ததாகச் சொல்லிக் கடிதம் கேட்கிறீர்கள். தன்னுடைய காணியையே பலர் தன்னுடையது என்று சொல்லார்கள். ஏனென்றால் நான் எனது என்ற பற்றுக்களால் தான் பல்வேறு விதமான துன்பங்கள் வருமென்று அவர்கள் அஞ்சுகிறார்கள்” என்று சொல்ல உருத்திரகுமாரன் பேசாமல் நின்றான்” என்றது குமரன் எலி.

“எப்படிப் பேசுவர். கள்ள உறுதி முடித்த காணிகளையே தகப்பனும் மகனும் விற்பவர்களாச்சே” என்றது லட்சுமி எலி.

**348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர்**

“பற்குணம் தொடர்ந்து சொன்னான்,“முற்றும் துறந்தவர்கள் துறவிகள். அவர்களுக்கு ஆசையில்லை. பற்றுக்களைச் சிறிதும் துறக்காதவர்கள் அறியாமை என்னும் வலையில் அகப்பட்டுத் தவிப்பவர்கள். நீ ஊரவரின் சொத்துக்களுக்கு ஆசைப்பட்டு பற்றுக்களை வளர்த்து அவதிப்படுகிறாய். அத்துடன் திருநாவுக்கரசு

போல உன்னை மன்னிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறாய். பாடசாலைக் காணி விடயத்தில் உனக்கொரு பாடம் படிப்பிப்போம்'' என்று நவராசா கோபத்துடன் சொன்னான்'' என்றது குமரன் எலி.

''நவராசா போன்ற முரடர்கள் தான் சரி. திருநாவுக்கரசும், கதிரேசனும் பலத்துக் கூடக் கதைக்கமாட்டார்கள்'' என்றது லட்சுமி எலி.

**349. பற்றுஅற்ற கண்ணே பிறப்புஅறுக்கும் மற்று**
**நிலையாமை காணப் படும்.**

''ஆசைகளிலிருந்து முற்றாக விலகினால் தான் பிறவித்துன்பம் நீங்கும். ஆசையை விடாதவர்கள் பிறப்பு, இறப்பு என்ற நிலையற்ற வாழ்வைப் பெறுவார்கள். உனது ஆசைகளால் எவ்வளவு துன்பங்களை அனுபவித்தாய், அனுபவிக்கிறாய். இருந்தும் திருந்துகிறாயில்லை.எல்லாப் பிறப்புக்களிலும் செய்த பாவங்களைப் போக்கத்தான் இறைவனால் மனிதப் பிறப்பு ஆன்மாவுக்குக் கொடுக்கப்படுகிறது. அதில் ஆசைகளை விலக்கி ஒழுக்கமாக வாழ்ந்து பிறப்புக்களை அறுத்து இறைவனை அடைய வேண்டும். அதற்காகத் தான் பகுத்தறிவை மனிதனுக்கு இறைவன் கொடுத்துள்ளார். கல்வி கற்கும் தன்மையைக் கொடுத்துள்ளார். ஆனால் பெரும்பான்மையான மக்கள் தாம் கற்ற கல்வியைக் கொண்டும், பகுத்தறிவைக் கொண்டும் ஆசைகளை வளர்த்து அல்லற்படுகிறார்கள். நீ கற்றவன். கற்பிப்பவன். அப்படி இருந்தும் மாறுகிறாயில்லை. அதனால் பெருந்துன்பப்பட்டும் திருந்துகிறாயில்லை'' என்று பற்குணம் கூறும் போது உருத்திரகுமாரன் கேலியாகச் சிரித்தான்'' என்றது குமரன் எலி.

''அவரைப் பார்த்து எல்லோரும் கேலியாகச் சிரிக்கிறார்கள். அது தெரியாமல் அவர் கேலியாகச் சிரிக்கிறாரா?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**350. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு**

''சகல பற்றுக்களையும் விட்டு விடுவதற்குப் பற்றில்லாதவனாகிய கடவுளின் மேல் பற்று வையுங்கள். மகிழ்வும், நிம்மதியும், பேரின்ப வாழ்வும் கிடைக்குமென்று பெரியவர்கள் கூறுகின்றனர். உனக்குக் கடவுள் மீதே நம்பிக்கையில்லை. தான தர்மங்கள் மீது நம்பிக்கையில்லை. கோவிலைக் கட்டுகிறார்கள். நீ ஏதாவது கொடுத்தாயா..? அன்னதான மடத்தில் ஒரு நாள் உணவு ஏழைகளுக்குக் கொடுத்தாயா..? தீயவழியில் பணத்தைச் சேகரிக்கிறாய். உனக்கு அந்தப் பணத்தால் என்ன கிடைத்தது. முப்பத்தைந்து வயது கடந்தும் உனது மகள் திருமணம் செய்யவில்லை. சரவணபவனின் மகள் பத்தொன்பது வயதில் திருமணமானவள். சரவணபவன் ஏழை. பணமில்லாதவன். ஆனால் நல்லவன். கடவுள் மீது நம்பிக்கை உள்ளவன். அதனால் மகிழ்ச்சியாக வாழ்கிறான். நீயும் கடவுள் மீது நம்பிக்கை வை. அதன் பின் தீயவற்றைச் செய்ய மனம் வராது'' என்று கூறி விட்டுச் சென்றான் பற்குணம்'' என்றது குமரன் எலி.

''கோவிலை இடிப்பவனைக் கோவிலைக் கும்பிடு என்றால் எப்படி இருக்கும்?'' என்றது லட்சுமி எலி.

## மெய் உணர்தல் - 36

**351. பொருள்அல் லவற்றைப் பொருள்என்று உணரும்**
**மருளான்ஆம் மாணாப் பிறப்பு.**

''கோவிலுக்கு வந்த திருநாவுக்கரசுவிற்குக் கதிரேசன் சொன்னார், ''நான் உருத்திரகுமாரனிடம் நிதி சேகரிக்கச் செல்ல வேண்டாம் என்று கூறியும் நீங்கள் கேட்காது சென்று அவமானப்பட்டு வந்துள்ளீர்கள். அவன் பெற்றோருக்கே உணவு கொடாதவன். பாடசாலை மைதானத்திற்குத் தருவானா என்ன? நான்

முழுப்பணத்தையும் தந்து விடுவேன். ஆனால் பலர் தாம் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று சொன்னதற்காக எல்லோரிடமும் சேருங்கள் என்றேன். காணிக்குத்தேவையான பணம் கிடைத்து விட்டது. மேற்கொண்டு சேருங்கள். சுற்றிக் கற்சுவர் கட்டலாம் என்றேன். அதற்காக அவனிடம் சென்றுள்ளீர்கள். அவன், ''நீங்கள் ஏன் பணம் சேகரிக்கிறீர்கள். அது அரச பாடசாலை. அரசாங்கம கட்டித் தரும். சிலர் பணத்தைக் கையாடவும், புகழுக்காகவும் செய்கிறார்கள்'' என்றானாம். அவன் மெய்ப்பொருளான கடவுளை நம்பாதவன். கண்கண்ட தெய்வங்களான பெற்றோரைத் துன்புறுத்தியவன். பாடசாலைக்கெனத் தகப்பன் கொடுத்த காணியைக் கொடுக்கவில்லை என்றவன். அதனால் தான் அவன் இகழப்படுகிறான். அவனது பிறப்பு உயர்வை இகழ்ந்து அவமானப்படுகிறது'' என்று கவலையோடு கதிரேசன் கூறினார்'' என்றது குமரன் எலி.

''பல மனிதர்கள் மெய்யானதைப் பொய் என்றும் பொய்யானதை மெய்யென்றும் நம்புவதால் தான் துன்பப்படுகின்றனர். அவமானப்படுகின்றனர். இருந்தும் திருந்துவதாக இல்லை'' என்றது லட்சுமி எலி.

**352. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசுஅறு காட்சி யவர்க்கு**

''படித்தவன் பட்டதாரி ஆசிரியன். பல கல்விமான்களோடு பழகுபவன். அதைவிட ஆயிரமாயிரம் பிரச்சினைகளுக்குட்பட்டவன். அதனால் திருந்த ஒரு வாய்ப்புக் கொடுக்கலாமென்று சென்றேன். அவன் திருந்தமாட்டான். மயக்கம் நீங்கிய குற்றமில்லாத அறிவுடையவர்களிடம் அறியாமை என்ற தன்மை இல்லை. அதனால் அவர்கள் இன்பமாக வாழ்கிறார்கள். மற்றவர்களையும் மகிழ்வுடன் வாழவைத்துத் தாமும் மகிழ்வுடன் வாழ்கின்றனர். அறியாமை உள்ள அவன் திருந்தமாட்டான்'' என்று திருநாவுக்கரசு கூறக்கதிரேசன் சொன்னார்,''அது தெரிந்து தான் நான் உங்களைப் போகவேண்டாம் என்று சொன்னேன். அவனுக்கு மற்றவர்களைக் கேலி செய்வது பெரும் இன்பம்'' என்று கூறினார்'' என்றது குமரன் எலி.

''மனிதரின் இயல்பை மாற்றுவது சிரமமானது என்று பல நூல்கள் கூறுகின்றன என்று நமசிவாயகம் அடிக்கடி சொல்வார். அது உண்மை'' என்றது லட்சுமி எலி.

**353. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணியது உடைத்து.**

''திருநாவுக்கரசு, எதையும் சந்தேகமில்லாமல் தெளிவாக அறியக்கூடியவர்களுக்கு இந்த உலகத்தை விட அவர்கள் அடைய வேண்டிய சுவர்க்கம் மிக அருகில் உள்ளது என்பார்கள். அதை நான் நம்புகிறேன். அதனால் தான் தேவையில்லாத விடயங்களில் தலையிடுவதை விரும்புவதில்லை, தேவையில்லாத இடங்களுக்குச் செல்வதில்லை. உருத்திரகுமாரன் யாரையும் மதிப்பவனல்ல. அவன் கூறுவதை யாராலும் தாங்கிக் கொள்ள முடியாது. அது தெரிந்தும் செல்வது மடமை அல்லவா. அவன் உங்களைப் பேசியதாக அறிந்ததும் மனம் வலிக்கிறது. இறைவா இவர்களையும் நீயா படைத்தாய் என்று எண்ணத்தோன்றுகிறது. பக்குவப்பட்ட மனமாக இருந்தாலும் அவற்றை நினைக்காது விடுமா..? எனக்கு வயது வந்து விட்டது. இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டு என்னைப் படைத்த ஆண்டவனடியை அடைய வேண்டும் என்ற எண்ணமே மனதில் மிகுந்து காணப்படுகிறது. அதனால் தீயதைப்பார்க்க முடியவில்லை. அது போல தீயதைக் கேட்கவும் முடியவில்லை'' என்று கதிரேசன் உணர்ச்சிகரமாகக் கூறுவதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார் திருநாவுக்கரசு'' என்றது குமரன் எலி.

''நல்லவர்கள் எப்போதும் நல்லவற்றையே எண்ணுவார்கள், பேசுவார்கள், கேட்பார்கள். இது பலருக்குப் புரிவதில்லை'' என்றது லட்சுமி எலி.

**354. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே**
**மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.**

“திருநாவுக்கரசு, மெய்யுணர்வு இல்லாதவர்கள் ஐம்புலன்களின் செயற்பாடுகளை முழுமையாகப் பெற்றிருந்தாலும் அதனால் பயனடையமாட்டார்கள். குருடன் பட்டப்படிப்புப் படிப்பதைக் காண்கிறோம். ஊமை பெரும் அறிவாளியாக இருப்பதாகக் காண்கிறோம். செவிடன் பெரிய அதிகாரிகளாக இருப்பதைக் காண்கிறோம். அதுபோல ஐம்புலன்களையும் முழுமையாகப் பெற்றவர் மிகமிகக் கொடியவர்களாக இருப்பதைக் காண்கிறோம். தேவராசா பெரிய அதிகாரி. பணக்காரன். பல பட்டங்களைப் பெற்றவன். அவன் தனது திணைக்களத்தில் மோசடி செய்தமையால் சிறையில் இருக்கிறான். மானம், மதிப்பு, கௌரவம் யாவற்றையும் இழந்த அவனைப் பெற்றோரும், மனைவியும், பிள்ளைகளும் விரும்பாததால் சிறைக்குச் சென்று பார்க்கவில்லை. இவனுக்குக் கடவுள் முழுமையாகக் கொடுத்த ஐம்புலன்களால் என்ன பயன். பணத்தால் என்ன பயன்..? என்று கேட்கத் திருநாவுக்கரசு எதுவும் பேசவில்லை” என்றது குமரன் எலி.

“அவர் எப்படிப் பேசுவார்?” என்றது லட்சுமி எலி.

**355. எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு**

“திருநாவுக்கரசு, எந்தப்பொருளாக இருந்தாலும் அதன் தோற்றத்தைக் கண்டு மயங்காமல் அந்தப் பொருளின் உண்மையான தன்மையை அறிவதே அறிவாகும். தேவராசாவுக்குத் திருமணம் பேசும் போது பெண்பிளையின் தகப்பனார் அயலூரவர் என்னைப் பற்றி அறிந்து என்னிடம் வந்து அவனைப் பற்றிக் கேட்டார். தேவராசா நல்ல அழகன். கட்டான தேகம் கொண்டவன். உயர்ந்த உத்தியோகத்தன். அது எனக்குத் தெரியும். மிகுதியை நீங்கள் விசாரித்து அறியுங்கள் என்று சொன்னேன். பெண்பிளையின் தகப்பன் அதிபர். பாடசாலையில் பல தில்லு முல்லுகளைச் செய்தவர். அவர் விசாரிக்கும் போது சிலர் தேவராசா கெட்டவன், லஞ்சம் வாங்குபவன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதைப் பெண்ணின் தகப்பன் பெரிதாக எடுக்கவில்லை. திருமணத்தைச் செய்து வைத்தார். இப்போ அவர் சிறையில். மனைவி பிள்ளைகள் வெளியே செல்ல வெக்கப்பட்டு வீட்டுக்குள் இருக்கிறார்கள்” என்று கதிரேசன் கூற திருநாவுக்கரசு அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்” என்றது குமரன் எலி.

“அவர் தன்னைப் போலத் தான் மாப்பிளையும் என நினைத்திருப்பார். நாகபாம்பு மிகவும் அழகானதென்பதற்காக அதைப் பிடித்து வளர்க்க முடியுமா?” என்று கேட்டது லட்சுமி எலி.

**356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி.**

“உண்மை தான் அண்ணை, கற்க வேண்டியவற்றைக் கற்று உணரவேண்டிய உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள் எப்போதும் இன்பமாக வாழ்வார்கள். அவர்கள் சுவர்க்கத்தை அடைந்து அங்கும் இன்பமாக வாழ்வார்கள். தேவராசாவின் மனைவியின் தந்தை எனது உறவினன். அவர் நான் வெளிநாட்டில் இருக்கும் போது தேவராசாவைப் பற்றி விசாரித்தார். நான் எப்படிச் சொல்வது என்று புரியாது உங்களை விசாரிக்கும் படி சொன்னேன். நீங்களும் சொன்னீர்கள், ஊரவர்களும் சொன்னார்கள். கற்கவேண்டியவற்றைக் கற்காது தனது பிழைப்புக்காகக் கற்ற பொண்ணின் தகப்பன், மாப்பிளை பல வழிகளாலும் உழைத்துச் சம்பாதிப்பாரென்று எண்ணித் திருமணத்தை முடித்தார். இப்போ துக்கப்படுகிறார். கற்றவர்கள் பல வழிகளாலும் ஆராய்ந்து நல்ல முடிவை எடுக்க வேண்டும். மனிதனுக்கு ஆறாவது அறிவை இறைவன்

கொடுத்தது. உண்மையான பொருளை ஆராய்ந்து அறிய, ஆனால் அப்படி நடக்காது. பலர் துன்பங்களைத் தாமே தேடிக்கொள்கிறார்கள்'' என்று திருநாவுக்கரசு கதிரேசனுக்குக் கூறினார்'' என்றது குமரன் எலி.

''மனிதரில் கற்பவர்களில் பலர் பிழைப்பதற்காகத் தானே கற்கிறார்கள். மெய்ப்பொருளை உணர அல்ல'' என்றது லட்சுமி எலி.

**357. ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்**
**பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு.**

''ஒருவன் தான் கற்ற கல்வியாலும், பட்ட அனுபவங்களாலும் உண்மையான நிலையை ஆராய்ந்து அறிந்தால் அவனுக்கு ஒரு போதும் துன்பங்கள் வரமாட்டாது. அவன் பூவுலகிலும், வானவர் உலகிலும் என்றும் இன்பமாக வாழ்வான். இதைப் பலர் உணர்வதில்லை. தேவராசாவின் தந்தை கட்டட ஒப்பந்தக்காரன். ஏராளமான சொத்தைச் சேர்த்து வைத்திருக்கிறார். மனைவியின் தந்தையும் பணக்காரர். ஒரே ஒரு பெண்பிள்ளை. அதனால் முழுச்சொத்தையும் தேவராசாவுக்குக் கொடுத்துவிட்டார். அப்படியிருக்க தனது நிலையை உணராமல் பேராசை மிகுதியால் லஞ்சம் வாங்கி அகப்பட்டுத் தேவராசா சிறையில் வாடுவது உண்மைப் பொருளை உணராமையால் தானே'' என்று திருநாவுக்கரசு சொன்ன போது கதிரேசன் சொன்னார்,''ஆசை அவாவாக மாறும் போது நடக்கக்கூடாததெல்லாம் நடக்கும்'' என்று கூறினார்'' என்றது குமரன் எலி.

''மனிதர்களுக்குத் தன்னைப் பற்றியும் தெரியாது, தர்மத்தைப் பற்றியும் தெரியாது. அதனால் தான் கற்ற கல்வியாலும் பயனடைவதில்லை'' என்றது லட்சுமி எலி.

**358. பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு**

''திருநாவுக்கரசு, பெரும்பான்மையான மனிதர்கள் துன்பங்களை தாமே வரவழைத்துக்கொள்கின்றனர். படித்தவனும் சரி பாமரனும் சரி தாமே துன்பங்களை வரவழைத்து விட்டுத் துன்பத்தைத் தாங்க முடியாது அழுகின்றனர். கடவுள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான மூளையைக் கொடுத்துள்ளார். உருத்திரகுமாரனும், தேவராசாவும் கற்றவர்கள். பணக்காரர்கள் இவர்களுக்கேன்துன்பங்கள் வரவேண்டும். கஜேந்திரன், நவராசா, நாகராசா, நாவேந்தன் போன்றோர் ஏழைகள் என்று சொல்வதிற்கில்லை. பிள்ளைகள் கற்றவர்கள். அவர்கள் தீமையானவற்றைச் செய்து துன்பங்களைத் தேடிக்கொள்கிறார்கள். இதற்குக் காரணம் அறியாமை. அறியாமை நீங்க வேண்டுமானால் கடவுளை மெய்யன்போடு வணங்குதல் வேண்டும். ஆசையோடும், அவாவோடும், பொறாமையோடும் வணங்கினால் கடவுளின் அருள் கிடைக்குமா? எனக்கு எதுவும் வேண்டாம். உன் நிழலில் சேர் என்று தான் நான் வணங்கி வருகிறேன். வேண்டுதல் இல்லாத பிராத்தனை தான் பயனைத்தரும். சென்ற வருடம்பெரும் வருமானம் கிடைத்தது என்று கதிரேசன் கூறினார்'' என்றது குமரன் எலி.

''மனிதர்கள் பிரதியுபகாரத்தை எதிர்பாராது எதையும் செய்வதில்லை. அது அவர்களின் இயல்பு. அவ்வியல்பு தான் கடவுளை வணங்கும் போதும் உண்டாகிறது'' என்றது லட்சுமி எலி.

**359. சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றுஅழித்துச்**
**சார்தரா சார்தரும் நோய்.**

''எல்லாவற்றிற்கும் ஆதாரமான கடவுளை உணர்ந்து பொருட்களின் மீது உண்டாகும் பற்றுக்களை அகற்றி, கடவுளே கதியென்று வாழ்பவர்களை ஒரு போதும் துன்பங்கள் நெருங்காது. இது எனது வாழ்வில் நான் கண்ட உண்மை. இம்முறை வேளாண்மையின் மூலம் பத்து இலட்சம் ரூபா இலாபம் கிடைத்தால்

பாடசாலைக்கான விளையாட்டு மைதானத்தை வாங்கிக் கொடுப்போம் என்று நினைத்தேன். இருபது இலட்ச ரூபா இலாபம் கிடைத்தது. அதை மடத்தில் இருக்கும் வயோதிபரிகளுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்க நினைத்துள்ளேன். நான் ஒரு போதும் கடவுளை எதுவும் கேட்டதில்லை. அவர் எனது தேவைகளை உணர்ந்து தருகிறார். எனது மூத்த மகனுக்கு வெளிநாட்டில் சென்று கற்கப் புலமைப்பரிசில் கிடைத்துள்ளது. மகன் தான் விண்ணப்பித்ததாகக் கூறினான். அதை நான் மறந்து விட்டேன். இன்று காலை அவன் வந்து சொன்ன பின்பு தான் எனக்கு அந்த ஞாபகம் வந்தது. பற்றில்லாமல் வாழ்ந்தால் கடவுள் தேவையானதைக் கொடுப்பார்'' என்று கதிரேசன் கூறினார்'' என்றது குமரன் எலி.

''எது நடக்கும், எது நடக்காது என்று ஆறறிவு படைத்த மனிதருக்குத் தெரியாததால் தான் துன்பப்படுகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**360. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்.**

''உலகில் அவதிப்படுவோரை அவதானித்துப்பார். அழகான மனைவியை உடையவன் பார்க்கச் சகிக்க முடியாத இன்னொரு பெண்ணை விரும்பித் துன்பப்படுகிறான். அன்பாகக் கதைத்து பண்பாகப் பழகினால் உலகையே தன்கைக்குள் அடக்கலாம் என்று கற்ற பலர் பிறருடன் முரண்பட்டு கோடு கச்சேரி என்று அலைகிறார்கள். தனக்குத் தனக்கென்று கடவுளால் ஒதுக்கப்பட்டவை அனைத்தும் வந்து சேரும் என்பதை அறிந்தும், அறியாமையால் தீமைகளைச் செய்து பலர் துன்பப்படுகின்றனர். ஆசை, சினம், அறியாமை தான் துன்பங்களுக்குக் காரணம் என அறியாதவர்கள் தான் இன்று பல வழிகளாலும் துன்பப்படுகின்றனர். தேவராசாவுக்கு வேலையிலிருந்து நீக்கும் கடிதம் வந்து விட்டதாம். உருத்திரகுமாரனது பதவி பறிபோயிருக்கும். நீ காட்டிய இரக்கத்தால் தப்பினான். இப்படி கற்றவர்கள் வாழத்தெரியாது அல்லற்படுகிறார்கள். சொன்னாலும் கேட்கமாட்டார்கள். கற்றதையும் உணரமாட்டார்கள்'' என்று கதிரேசன் கூறத் திருநாவுக்கரசு கேட்டுக்கொண்டிருந்தார்'' என்றது குமரன் எலி.

''தெய்வத்தை அதைத் தா இதைத் தா என்று கேட்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் தெய்வத்தை நம்புவதில்லை. குறுக்கு வழிகளையே நம்புகின்றனர்'' என்றது லட்சுமி எலி.

## அவா அறுத்தல் - 37

**361. அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்**
**தவாஅப் பிறப்புஈனும் வித்து**

''திருநாவுக்கரசும் அவ்வூர்ப் பாடசாலை அதிபரும் கோவிலடிக்கு வந்து கதிரேசனைச் சந்தித்தனர். அதிபர் சொன்னார், ''ஐயா, தாங்கள் எமது பாடசாலையின் பழைய மாணவர். தாங்கள் எமது பாடசாலைக்கும் இக்கிராமத்திற்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளீர்கள். அதனால் தங்களைக் கௌரவித்து ஒரு விழா நடத்த விரும்புகிறோம். பெற்றோரும், ஆசிரியர்களும் ஊரவர்களும் அதை விரும்புகிறார்கள்'' என்றார். அதைக் கேட்டுச் சிரித்த கதிரேசன் சொன்னார், ''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் விழாக்களில் கலந்து கொள்வதில்லை. அதற்குக் காரணம் ஒரு விழாவில் கலந்து கொண்டால் அதைப் பின்பற்றி ஊரவர்கள் பல விழாக்களை எடுப்பார்கள். இதனால் பல்வேறு விதமான ஆசைகள் மனதில் எழும். ஆசைகளில் மிகவும் கேவலமானது புகழின் மேல் ஆசை கொள்ளல். விழாவுக்கு வருவோர் நான் செய்யாதவற்றையெல்லாம் செய்ததாகக் கூறுவார்கள். அரிச்சந்திரன் என்பார்கள், கர்ணன் என்பார்கள். இதனால் சலனப்படாத மனமும் சலனப்படும். நான் கடவுள் தந்ததைக் கொடுக்கிறேன். கொடுக்கக் கொடுக்கக் கடவுள் அள்ளித் தருகிறார். கற்ற புலமைமிக்க பலர் ஊரில் வாழ்கின்றனர். அவர்களது

புலமையைக் கௌரவிப்பார் இல்லை. அவர்கள் தான் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். ஆசை என்பது உயிர்களுக்குப் பிறவி என்ற துன்பத்தைக் கொடுக்கின்ற வித்து. அதனால் என்னை விடுங்கள்'' என்று சொன்னார்'' என்றது குமரன் எலி.

''ஊரறிந்த பார்ப்பானுக்குப் பூநூல் தேவையில்லை என்பார்கள். ஊர் அறிந்த கதிரேசனுக்கு ஏன் விழா'' என்றது லட்சுமி எலி.

**362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**
**வேண்டாமை வேண்ட வரும்.**

''ஆசை இல்லாமல் வாழவேண்டும். அப்படி ஆசைப்படவேண்டுமானால் மறுபடியும் பிறக்காமல் இருக்க ஆசைப்படல் வேண்டும். அந்த நிலை வரவேண்டுமானால் எதிலும் ஆசைப்படக்கூடாது. ஆசையால் தான் மனிதன் மிருகங்களை விடக்கேவலமாகிறான். மதுவில் ஆசைப்பட்டால் அது எல்லா ஈஸ்வரத்துரோகங்களையும் செய்யத்தூண்டும். பெண்ணில் ஆசைப்பட்டால் காமுகனாக்கும். புகழில் ஆசைப்பட்டால் எதையும் செய்ய நினைக்கும் இங்கு பலர் தமது பணத்தைக் கொடுத்து விழாக்களைக் கொண்டாடிப் பேச்சாளரைக் கொண்டு தம்மைப் புகழ்விக்கிறார்கள். தமக்குத் தாமே பட்டம் சூட்டிக் கொள்கிறார்கள். தர்மவானான ஒருவர் புகழில் ஆசைப்பட்டால் அவன் தர்மம் செய்வது புகழுக்காக என்ற நிலை தான் உருவாகும். அதனால் என்னை விட்டு விடுங்கள். நான் நிம்மதியாகவும் மகிழ்வுடனும் வாழவேண்டும்'' என்று கதிரேசன் கூறினார்'' என்றது குமரன் எலி.

''சிலர் புகழுக்காகக் காசு கொடுத்து விழாக்களைக் கொண்டாடுவார்கள். ஆனால் தர்மம் செய்யமாட்டார்கள்'' என்றது லட்சுமி எலி.

**363. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை**
**ஆண்டும் அஃதொப்பது இல்.**

''செல்வத்துள் சிறந்த செல்வம் ஆசை இல்லாதிருத்தல். அது தான் மிகமிக உயர்ந்த செல்வம். ஆசை வசப்பட்டவர்கள் பஞ்சமா பாதங்கள் அனைத்தையும் தயங்காது செய்வார்கள். நேற்றிரவு கந்தவனத்தின் கர்ப்பமான பசுவொன்றைத் திருடிய கொலைகாரப்பாதகர்கள் அதை வெட்டி இறைச்சியை விற்றார்கள். அதை வாங்கிய பலர் உயர்ந்த கல்விமான்கள். பசு தாயின் மறு அவதாரம். அதன் மாமிசத்தை ஐம்பது வருடங்களுக்கு முன் யாரும் உண்டதில்லை. இப்போ சந்திக்குச் சந்தி மாட்டிறைச்சிக் கடை உள்ளது. பெண்கள் கூட சற்றும் நாணமில்லாமல் சென்று இறைச்சியை வாங்குகின்றனர். இதெல்லாம் ஆசைகளின் வெளிப்பாட்டால் தான் நடைபெறுகிறது. இவற்றைக்கட்டுப்படுத்த வேண்டும். இந்து மன்றங்களும் சனசமூக நிலையங்களும் இதில் முக்கிய கவனஞ் செலுத்த வேண்டும். இந்து மன்றங்கள் பல பிழைப்பு நடத்துகின்றன. அந்த நிலைமாற வேண்டும். இளைஞர்கள் முன்நின்று அதைச் செய்யுங்கள்'' என்று கதிரேசன் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''ஓம். உந்த மன்றங்கள் சேர்க்கும் பணத்தை நல்ல வழியில் செலவு செய்கிறார்களா என்ன? ஊர் முழுக்கத் தண்டி தமது பெயரில் அறக்கொடை கொடுப்பவர்களும் உள்'' என்றது லட்சுமி எலி.

**364. தூஉய்மை என்பது அவாஇன்மை மற்றது**
**வாஅய்மை வேண்ட வரும்.**

''ஆசை இல்லாத நிலை ஏற்படவேண்டுமானால் பொய்பேசக் கூடாது. அது தான் தூய்மையான நிலை. இப்போ யார் உண்மையைப் பேசுகிறார்கள். நான் உண்மையைப் பேசுவதால் என்னைக் குறை கூறுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை விழாவை ஏற்பாடு செய்பவர்கள் உள்நோக்கத்துடனேயே

விழாக்களை ஏற்பாடு செய்கின்றனர். பாடசாலையில் பாரிய நிதி மோசடி நடைபெறுவதாக மக்கள் பேசிக்கொள்கின்றனர். கணனியைக் காணவில்லை என்கிறார்கள். கட்டடம் உரிய முறையில் கட்டப்படவில்லை என்கிறார்கள். இப்படியிருக்க நான் விழாவுக்கு வந்தால் அக்குற்றங்களுக்கு நானும் உடந்தை என்பார்கள். நீதியும் நியாயமும் தர்மமும் நிலைக்க வேண்டுமானால் தூய்மையாக வாழவேண்டும்'' என்று கதிரேசன் கூறினார்'' என்றது குமரன் எலி.

''ஊழல் செய்பவர்கள் அதை மறைக்க அதிகாரிகளை அழைத்து விழாக்கொண்டாடுவது வழக்கமாகி விட்டது'' என்றது லட்சுமி எலி.

**365. அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்**
**அற்றாக அற்றது இலர்.**

''உருத்திரகுமாரனின் பணத்திற்கு ஆசைப்பட்டு அதிபரான நீங்கள் முறையற்ற வகையில் நடந்து கொள்வதாக மக்கள் கதைக்கின்றனர். நெருப்பில்லாமல் புகைவராது ஏதோ ஒரு குறை உங்களிடம் இருப்பதால் தான் மக்கள் அதைப் பேசுகிறார்கள். ஆசையை முற்றாக நீக்கியவர் தான் அதிகாரி என்ற பதவியை வகிக்க வேண்டும். ஒருவருக்குச் சார்பாகவும் இன்னொருவருக்கு எதிராகவும் நடப்பவர் அதிகாரி அல்ல. உங்களில் பிழைகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் பெரும்பான்மையான மக்களால் பேசப்படுவதை நாம் அலட்சியம் செய்ய முடியாது. அதிகாரிகளால் இப்போ எதுவும் செய்யமுடிவதில்லை என்கின்றனர். நேர்மையான அதிகாரி எதையும் துணிவுடன் செய்வான். பட்டணத்தில் மூவாயிரம் பிள்ளைகள் கற்கும் பாடசாலை ஒன்றிற்கு அதிகாரிகளால் கடந்த ஆறு மாதங்களாக ஓர் அதிபரை நியமிக்க முடியவில்லை. இந்த நிலை ஏன் வந்தது. ஆசை, அவா. அதனால் ஊழல். அதனால் விழாக்கள் கொண்டாடாது நேர்மையாக நடவுங்கள்'' என்று சொன்னார் கதிரேசன்'' என்றது குமரன் எலி.

''அறிவுள்ள கற்ற மனிதர்கள் நடந்து கொள்ளும் முறை கேலிக்குரியதாக இருக்கிறது. ஆறு மாதகாலமாக இவர்கள் என்ன செய்கிறார்கள்'' என்று கேட்டது லட்சுமி எலி.

**366. அஞ்சுவது ஓரும் அறனே ஒருவனை**
**வஞ்சிப்பது ஓரும் அவா**

''ஒருவனை வஞ்சித்து அவன் வீடுபேறு அடைவதிலிருந்து கெடுப்பது ஆசை. ஆசையில்லாமல் வாழ்பவன் என்றும் இன்பமாக வாழ்வான். தனக்கு வேண்டியவர்கள், செல்வாக்குள்ளவர்கள், பணக்காரர்கள், அதிகாரிகளின் உறவினர்கள் எனப் பலரையும் ஆராய்ந்து பதவியைக் கொடுக்காது கல்வியறிவு, திறமை, நேர்மை இவற்றைக் கவனத்திற் கொண்டு செயலாற்றினால் எந்த முடிவையும் உடனே எடுக்கலாம். அப்படித் தான் பல காலம் நடைபெற்றது. போரைச் சாட்டாக வைத்து எல்லாவற்றையும் அதிகாரிகள் கெடுத்துவிட்டனர். இனித்திருந்துவது மிகவும் சிரமமானது'' என்று கதிரேசன் கூறினார்.

''போர்க்காலத்திலை பிரபலபாடசாலைகளுக்குத் தரமில்லாத தமது உறவினர்கள், நண்பர்களை நியமித்துப் பழகிவர்களுக்கு இப்போ கடமையாற்றுவது மிகவும் கடினம் தான். என்று கதிரேசன் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''எல்லா வகையாலும் ஏமாற்றிப் பிழைத்த பலர் இப்போ சிரமப்படுகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**367. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை**
**தான்வேண்டும் ஆற்றான் வரும்.**

“ஆசையின் உச்சக்கட்டம் அவா. அதை நீக்கி விட்டால் வாழ்க்கையில் முன்னேற வேண்டிய அனைத்து வழிகளும் அவனைத்தேடி வரும். நான் வாழ்நாளில் எதற்கும் ஆசைப்பட்டது கிடையாது. வாழ்க்கையில் எல்லோரும் ஆசைப்படுவது உணவை. நான் அதற்கும் ஆசைப்படுவதில்லை. அது எனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் பெருங்குறை. நான் ஆசைப்படுபவற்றைச் சமைத்துக் கொடுக்க முடியவில்லையே என்று துக்கப்படுவர். அதனால் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சொல்வேன். உங்கள் கையால் சமைப்பதெல்லாம் எனக்கு அமிர்தமாகவே இருக்கிறது. அதைவிடத் தினமும் ஒவ்வொரு உணவைத் தருகிறீர்கள். அதனால் நான் விரும்பும் உணவுகள் யாவும் தருகிறீர்கள். பிறகு நான் எதைக் கேட்பது என்று சொல்வேன். அது அவர்களுக்குத் திருப்தியைத் தராது. இருந்த போதும் நான் வருந்தக் கூடாதென்பதற்காக அவர்கள் மகிழ்வுடன் இருப்பதாகக் காட்டிக் கொள்வார்கள். அதனால் தான் என்னவோ நான் நினைக்காதவையெல்லாம் வந்து சேர்கின்றன” என்று கதிரேசன் கூறினர்” என்றது குமரன் எலி.

“சேருபவனுக்கு அவை அழைக்காமலே வந்து சேரும். அவன் தர்மவானாக இருந்தால் பெருமளவு வந்து சேரும்” என்று நீதி நூல்கள் கூறுவதைப் பெரும்பான்மையான மனிதர்கள் நம்புவதில்லை” என்றது லட்சுமி எலி.

**368. அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்அ∴து உண்டேல்**
**தவாஅது மேன்மேல் வரும்.**

“உண்மை தான் கதிரேசண்ணை, எனது தம்பி ஆசை மிகுந்தவன். வெளிநாட்டில் நான் ஒரு வர்த்தக நிலையத்தில் வேலை செய்தேன். அதன் உரிமையாளர் நோய் காரணமாக அதை விற்க முடிவு செய்தார். அதை என்னிடம் கூறி, “நீ வாங்குவதனால் மலிவாகத் தருகிறேன்” என்றார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. அதனால் வேண்டாம் என்றேன். அவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை, “உன்னிடம் பணமில்லா விட்டால் மாதா மாதம் எனக்கு வாடகை தா” என்றார். நான் சம்மதித்தேன். இரண்டு வருடங்களில் நான் நல்ல இலாபத்தைப் பெற்றதால் கடையை வாங்கி விட்டேன். இது எனது தம்பிக்கும் மனைவிக்கும் தாமும் இப்படி ஒரு வர்த்தக நிலையத்தை நடத்தினால் என்ன என்ற ஆசை மிகுந்தது. கடன்பட்டு ஒரு வர்த்தக நிலையத்தைத் திறந்தனர். ஒரு வருடத்தில் அவர்களுக்குப் பெரும் நட்டமேற்பட்டது. ஆசையால் விலை கூட்டியும், தரமற்ற பொருட்களை விற்றதாலும் அந்நாட்டரசு கடையை முடிவிட்டது. ஆசை இல்லாதவர்களுக்குத் துன்பங்கள் இல்லை. ஆசைப்படுபவர்களுக்குப் பல்வேறு விதமான துன்பங்கள் தொடர்ந்து வரும் என்பதை நான் புரிந்து கொண்டேன்” என்று கதிரேசனுக்குத் திருநாவுக்கரசு கூறினார்” என்றது குமரன் எலி.

“பெண்களுக்கு ஆசை வந்தால் அதை நிறைவேற்றத்துடிப்பார்கள். அதுவும் உறவுகளுக்கிடையே போட்டி பொறாமை அதிகம். அதனால் துன்பங்களும் அதிகம்” என்றது லட்சுமி எலி.

**369. இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்.**

“பின் எனது தம்பிக்கு நான் தான் உதவி செய்து அவனது வாழ்வை வளம்பெறச் செய்தேன், “அண்ணா துன்பங்களில் எல்லாம் கொடிய துன்பம் ஆசையால் வருகின்ற துன்பம். நீங்கள் கடையில் நல்ல இலாபம் பெறுவதால் அவள் என்னை ஓயாது நச்சரித்ததால் தான் நான் கடையை வாங்கினேன். நீங்கள் ஏற்கனவே கடை வேலை செய்து அனுபவப்பட்டவர். எனக்கு அனுபவமில்லை. அதனால் கடை ஆசையை விடு என்று சொல்லியும் அவள் கேட்கவில்லை. அந்த ஆசையால் பல இலட்ச ரூபா நட்டமேற்பட்டு விட்டது” என்று அழுதான்” என்று திருநாவுக்கரசு கதிரேசனுக்குக் கூறினார்” என்றது குமரன் எலி.

“எதுவும் பட்டால் தான் தெரியும். சொல்லி விளங்கப்படுத்த முடியாது” என்றது லட்சுமி எலி.

**370. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்**

“ஆசை அடங்காதது. அதை அடக்காவிட்டால் ஒன்றன் பின் ஒன்றாகப் பல துன்பங்கள் வந்து சேரும். தம்பியின் மனைவி தான் வாழும் நாட்டில் அயலில் உள்ளவர்களைச் சேர்த்துச் சீட்டுக் கட்டினாள். எல்லோரும் சில மாதங்கள் ஒழுங்காகப் பணத்தைக் கட்டியதால் அவள் இன்னொரு சீட்டையும் தொடங்கினாள். ஒவ்வொரு வரும் மாதாந்தம் ஆயிரம் டொலர் கட்ட வேண்டும். இருபது மாதம் கட்ட வேண்டும். முன்பு அதிக கழிவுடன் சீட்டை எடுத்த மூவர் திடீரென்று தலைமறைவாகி விட்டனர். அதனால் பல்வேறு வகையான துன்பங்கள் தொடர்ந்து வந்தமையால் இருவரும் தலைமறைவாகி விட்டனர். இப்போ அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது” என்று திருநாவுக்கரசு மிகுந்த கவலையோடு கதிரேசனுக்குக் கூறினார்” என்றது குமரன் எலி.

“சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வாழ்வதில் மனிதன் வலுகெட்டிக்காரன்” என்றது லட்சுமி எலி.

## <u>ஊழ் - 38</u>

**371. ஆகூழால் தோன்றும் அசைவுஇன்மை கைப்பொருள்**
**போகூழால் தோன்றும் மடி**

“பரஞ்சோதி மிகுந்த கவலையோடு வந்து கோவிலடியில் இருந்தார். பாடசாலைக்குப் பல இலட்ச ரூபா செலவில் மண்டபம் ஒன்றைக் கட்டிக் கொடுத்தவர். தானதர்மம் செய்பவர். அப்போது அங்கு வந்த கதிரேசன் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்தார். வெகுநேரம் இருவரும் பேசவில்லை. பின் கதிரேசன் சொன்னார், “சரக்குகளை ஏற்றிச் சென்ற கப்பல் புயற்காற்றால் கவிழ்ந்து நீரில் மூழ்கி விட்டதாகக் கேள்விப்பட்டேன். உண்மையா..?”,“ஆம் ஐயா, பல கோடி ரூபா நட்டம். எல்லாம் விதி. சாப்பிட வழியில்லாமல் இருந்த நான் செட்டியாரின் கடையில் சிப்பந்தியாக ஐம்பது வருடங்களுக்கு முன்சேர்ந்தேன். எனது முயற்சியும் திறமையும் என்னை உயர்த்தின. இப்போ வயது சென்று விட்டதால் வியாபாரத்தைக் கவனிக் முடியவில்லை. உடல் சோர்வடைகிறது. மனம் அடிக்கடி குழம்புகிறது. வேலை செய்ய வெறுப்பாக இருக்கிறது” என்று பரஞ்சோதி கவலைப்பட்ட போது கதிரேசன் சொன்னார், “உங்களுக்கு இப்போ அறுபது வயது தானே. இது பெரிய வயதல்ல. உடற்கட்டுள்ளவர் எழுபது எண்பது வயது வரை சுறுசுறுப்பாக வேலை செய்யலாம். விதி என்ற ஒன்று தான் மனித வாழ்வை நிர்ணயிக்கிறது. ஒருவனுக்குச் செல்வம் வளர விதி முயற்சியை உண்டாக்கும். செல்வம் அழிவதற்கு விதி சோம்பலை உண்டாக்கும். வழக்கமாக காற்று வீசும் நிலையை அறிந்து தான் கப்பலை விடுவீர்கள். இம்முறை சோம்பற்பட்டு காலநிலையை அறியாது கப்பலை விட்டு விட்டீர்கள். அது தான் உண்மை” என்று கதிரேசன் சொல்லப் பரஞ்சோதி கவலையுடன் கேட்டுக்கொண்டிருந்தார்” என்றது குமரன் எலி.

“கெட்டகாலமானால எதைச் செய்தாலும் தோல்வி தான்” என்றது லட்சுமி எலி.

**372. பேதைப் படுக்கும் இழவுஊழ் அறிவுஅகற்றும்**
**ஆகல்ஊழ் உற்றக் கடை**

“விதி ஒருவனைச் சிந்திக்கச் செய்து அறிவுள்ளவனாக்கி பொருளைச் சேர்த்து வைக்கும். அதே விதி அறிவற்றவனாக்கி அவனது பொருளை இழக்கச் செய்யும். நீங்கள் காலநிலையை அறிந்து அறிவிக்கும் அதிகாரியைச் சந்தித்த பின் தான் கப்பல் பயணத்தை முடிவு செய்வீர்கள். வானம் கறுத்து இடிமின்னல்

புயலுடன் மழை பெய்த போது என்றுமில்லாத துணிவுடன் கப்பலை அனுப்பினீர்கள். மாலுமி மறுத்த போதும் கட்டாயப்படுத்தி அனுப்பினீர்கள். இதைத் தான் விதி என்கிறோம்'' என்று கதிரேசன் கூறிய போது பரஞ்சோதி எதுவும் பேசவில்லை'' என்றது குமரன் எலி.

''கெட்ட காலம் வந்தால் எதையும் சிந்திக்க முடியாது'' என்றது லட்சுமி எலி.

**373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்.**

''பல்வேறு விதமான நூல்களைக் கற்றாலென்ன. கடவுளை வணங்கிலாலென்ன, விதியை மாற்ற முடியாது. அன்று கால நிலை மோசமாக இருந்தது. மாலுமி கடலுள்ச் செல்லப் பயப்பட்டான். நான் தான் புயலும் மழையும் குறைந்து வருகிறது. சிறிது நேரத்தில் அமைதியாகி விடும் என்று சொன்னேன். கற்ற கல்வியால் வந்த அறிவு கெட்டகாலம் நடக்கும் போது தவறானதையே செயற்படுத்தும். இதை நான் அனுபவத்தில் கண்டுள்ளேன். முன்பொரு முறையும் இப்படி நடந்தது'' என்று கவலைப்பட்டார் பரஞ:சோதி'' என்றது குமரன் எலி.

''கற்றவரின் அறிவு கூட விதி உதவாவிட்டால் உதவி செய்யாது'' என்றது லட்சுமி எலி.

**274. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு**
**தெள்ளிய ராதலும் வேறு**

''ஊழின் காரணமாக ஒருவன் செல்வந்தனாக இருக்கிறான். ஒருவன் அறிவுள்ளவனாக இருக்கிறான். இந்த இரு நிலைகளும் ஊழின் காரணமாகவே ஏற்படுகின்றன. தில்லையம்பலம் நல்ல அறிவாளி. பல நூல்களைக் கற்றவர். பல மாணவர்களுக்கு இலக்கணம் கற்பிப்பவர். ஆனால் ஏழை. கல்வி கற்றவர்கள் குரு தட்சணை என்று பணத்தைக் கொடுத்தால்,''கல்வி கடவுள் தந்த கொடை. அதை விற்பனை செய்தல் ஆகாது என்பார். அத்தடன் தனது அறிவை மேம்படுத்துவாரே தவிர பரிசுக்காகவே புகழுக்காகவோ அலையமாட்டார். பண்டைக் காலம் தொடக்கம் அரசர்மார் தம் கால்களைப் பணிவோரை அறிவாளிகள் என்று பரிசும் விருதும் கொடுத்தனர். அது இப்பவும் நடைமுறையில் உள்ளது. இவ்வூரில் பெரும் தனவந்தன் தனபாலசிங்கம். அவனுக்குப் பெரிதாக அறிவில்லை. கற்றவர்களைச் சம்பளம் கொடுத்து வேலை செய்விக்கிறான். அறிவுள்ளவர்கள் அவனிடம் கூலி பெறுகின்றனர். இது தான் உலகம். அது தான் விதி'' என்று கதிரேசன் திருநாவுக்கரசுவுக்குக் கூறினார்'' என்றது குமரன் எலி.

''படித்தவர்கள் தமது கல்வியைக் கொண்டு முயற்சி செய்கிறார்கள். கல்லாதவர்கள் தமது பணத்தைக் கொண்டு வேலை செய்விக்கிறார்கள். இது தான் விதி'' என்றத லட்சுமி எலி.

**375. நல்லவை எல்லாம்அம் தீயவாம் தீயவும்**
**நல்லவாம் செல்வம் செயற்கு**

''உண்மை தான் ஐயா, செல்வத்தைத் தேடுகின்ற முயற்சியில் விதிப் பயனால் நல்லவை தீயவை ஆகலாம். அதுபோலத் தீயவை நல்லவையாகலாம். முன்பு ஊரில் மழை குறைந்து பஞ்சமேற்பட்ட போது எனது களஞ்சியசாலையில் இருந்த பழுதான அரிசியை தனபாலசிங்கம் மாட்டுத் தீவனத்திற்குக்கென என்னிடம் மிகக்குறைந்த விலையில் வாங்கிக் கூலியாட்களை அமர்த்திச் சுத்தம் செய்து விட்டு என்னிடம் வாங்கிய விலையிலும் ஐந்து மடங்கு விலைக்கு விற்றுப் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றான். பஞ்சகாலத்தில் விற்கலாமென நான் நல்ல அரிசியைக் கொள்வனவு செய்து வந்தேன். இது விலை கூடிய அரிசி. அப்போது அரசாங்கம் இலவசமாக உணவுப் பொருட்களை வழங்கியது. தொண்டு நிறுவனங்கள் உணவுப் பொருட்களை இலவசமாக வழங்கின. அதனால் எனக்கு அரிசி விற்பனையில் நட்டமேற்பட்டது.

ஊழின் காரணமாக எதுவும் நடக்கலாம். நல்லது கெட்டதாகும். கெட்டது நல்லதாகும்'' என்று பரஞ்சோதி கவலையுடன் கதிரேசனுக்குக் கூறினார்'' என்றது குமரன் எலி.

''அது உண்மை தான் கெட்டவனான உருத்திரகுமாரன் சொல்வதைத் தானே பலர் நம்புகின்றனர். திருநாவுக்கரசு சொல்வதை அருள் உள்ளவர்கள் மட்டும் தான் நம்புகின்றனர்'' என்றது லட்சுமி எலி.

**376. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்**
**சொரியினும் போகா தம**

''புயல் வீசி மாதம் ஒன்று கழிந்து விட்டது. பரஞ்சோதி மிக்க மகிழ்வுடன் வந்து கதிரேசனுக்குச் சொன்னார்,

ஐயா, ஊழின் காரணத்தால் தமக்குரியவை அல்லாத பொருட்களை நாம் கட்டிக் காத்தாலும் அவை சென்று விடும். அது போல தமக்குரிய பொருட்களை கடலில் கொண்டு சென்று கொட்டினாலும் அவை நம்மை விட்டு நீங்காது. எனது கப்பல் உடைந்த நிலையில் தமிழ் நாட்டுக்குக் கடலோரத்தில் கரையொதுங்கியது. நான் சென்று கப்பலில் உள்ள பொருட்களை இன்னொரு கப்பலில் ஏற்றி விட்டேன். கப்பல் திருத்த முடியாதளவிற்குச் சேதமானதால் இரும்பு விலைக்கு விற்று விட்டேன். பல இலட்ச ரூபா நட்டம் தான். இருந்த போதும் பொருட்கள் தப்பியதால் பல இலட்ச ரூபாவை இழக்கவில்லை. விதிப்படி போக வேண்டியது போய் விட்டது. என்னிடம் தங்க வேண்டியது என்னை வந்தடைந்து விட்டது'' என்று மகிழ்வுடன் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் விதி அவர்களையும் தாக்கும்'' என்றது லட்சுமி எலி.

**377. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.**

''கோடி கோடியாகப் பொருட்கள் இருந்தாலும் அதை அனுபவிக்க விதி உதவி செய்தல் வேண்டும் என்பார்கள். அது உண்மை. எனது மனைவியின் சகோதரன் பெருந்தனவந்தன். நூறு பேர் அவனிடம் வேலை செய்கிறார்கள். அவனுக்கு ஐம்பது வயது. முப்பத்தைந்து வயதில் சலரோகம் என்னும் கொடிய நோய் அவனுக்கு வந்து விட்டது. அவனது வீட்டு வேலைகளைச் செய்பவன் வேலாயுதம் ஏழை. ஐந்து பிள்ளைகள். மைத்துனனின் வீட்டில் தான் அவன் உணவு உண்பான். நாம் மூன்று வேளை உண்ணும் உணவை அவன் ஒரு வேளை உண்கிறான். எல்லா உணவுகளையும் உண்கிறான். அறுபது வயதிலும் இளைஞனைப் போல் இருக்கிறான். என்னால் எதையும் உண்ண முடியவில்லை. வைத்தியர் மனைவியிடம் சோறு அதிகம் சாப்பிடக்கூடாது. இனிப்பு வகை சாப்பிடக்கூடாது. எண்ணெயில் பொரித்த, வறுத்த உணவுகள் கொடுக்கக் கூடாது. இப்படிப் பலவும் சொல்லியுள்ளார். அதனால் சாப்பிட முடியாது திண்டாடுகிறேன். என்னிடம் பணம் இருந்து என்ன பயன். அதை அனுபவிக்க முடியவில்லை'' என்று சொல்வான். விதி கொடியது. அதன்படி தான் அனைவரும் வாழவேண்டும்'' என்று பரஞ்சோதி கதிரேசனுக்குக் கூறினார்'' என்றது குமரன் எலி.

பெருமூச்சு விட்டது லட்சுமி எலி. ''தாம் வீரர். தாம் தான் அறிவாளிகள். தாம் தான் என்று கூறுபவர்கள் இதற்கென்ன கூறப்போகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**378. துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால**
**ஊட்ட கழியும் எனின்**

''உண்மை தான். மார்க்கண்டன் என்றொருவன் இவ்வூரில் வாழ்கிறான். அவன் ஏழை. உழைக்கச் சோம்பல். விதியானது ஏராளமான துன்பங்களைக் கொடுத்ததால் அவன் துறவி என்று சொல்லிக் காவி உடை தரித்து ஊரில் பூசைகள் செய்து வாழ்கிறான். துறவிகளான பலர் அனுபவிக்கப் பொருளில்லாமையினால் தான் துறவிகளாகின்றனர்'' என்று கதிரேசன் பரஞ்சோதிக்குச் சொன்னார்.

“அப்ப துறவியாவதும் விதி என்று கதிரேசன் சொல்கிறார். பெரியவர்கள் சொன்னால் ஏற்கத் தானே வேண்டும்” என்றது லட்சுமி எலி.

**379. நன்றுஆங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆங்கால்**
**அல்லற் படுவது எவன்.**

“உலகில் நல்வினையும் தீவினையும் மாறி மாறி இரவும் பகலும், இருட்டும் நிலவு போலவும் வரும் என்பதை அறிவுள்ள மனிதர்கள் உணர்வதில்லை. நல்வினை வரும் போது அளவுக்கதிகமாக மகிழ்வார்கள். தீவினை வரும் போது விழுந்து விழுந்து அழுகிறார்கள். இது மனித இயல்பு. இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் என்று மெய்யுணர்வு உள்ளவர்களுக்குத் தெரியும். என் இளமைக்காலத்தில் நான் பெரும் துன்பப்பட்டேன். பின் விதியின் கிருபையால் பெரும் பணம் வந்தது. மகிழ்ந்தேன். சில வருடங்களின் பின் இயற்கையைப் பார்த்து மனித வாழ்வின் உண்மையான நிலையை அறிந்து கொண்டேன். வணிகத்திற்கு சுவிப்பில் பத்து இலட்சம் ரூபா கிடைத்ததால் பெரும் மகிழ்வுற்றான். பின் தொழில் செய்வதென்று கூறி தங்க நகைகளுக்குப் பணம் கொடுத்தான். அவனின் நண்பன் ஒருவன் போலி நகையைக் கொடுத்து விட்டு ஐந்து இலட்சம் ரூபா வாங்கினான். அவன் நகையை மீளவில்லை. அவன் அந் நகைகளை எடுத்துப் பார்த்த போது போலி நகையென்று தெரிந்தது. அதனால் துன்பப்பட்டான். நீங்களும் அப்படித் தான். கப்பலைக் காணவில்லையென்று கவலைப்பட்டீர்கள். பின் அது கிடைத்து விட்டதென்று மகிழ்கிறீர்கள். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக மதிப்போர். இன்பம் வந்த காலத்தில் மகிழ்வடையார். அது போலத் துன்பம் வந்த காலத்திலும் கவலைப்படார். அது இயல்பு என்று அவர்களுக்குத் தெரியும்” என்று கதிரேசன் கூற, “உண்மை தான். மகிழ்வதாலும் கவலைப்படுவதாலும் எதுவும் நடக்காது. விதியின் படி தான் யாவும் நடக்குமென்று புரிந்து கொண்டேன்” என்று பரஞ்சோதி கூறினார்” என்றது குமரன் எலி.

“எல்லோரும் சொல்வார்கள். ஒன்று நடந்தால் தான் அவர்களைப் பற்றி அறியலாம்” என்றது லட்சுமி எலி.

**380. ஊழின் பெருவலி யாஉள மற்றுஒன்று**
**சூழினும் தான்முந் துறும்.**

“கதிரேசன் ஐயா என்னை விட மூத்தவர் நீங்கள். அனுபவமும் உள்ளவர். விதியை வெல்ல முடியாதா? என்று பரஞ்சோதி கேட்டதற்குக் கதிரேசன் சொன்னார், “விதியை விட வலிமையானது வேறெதுவுமில்லை. விதியை விலக்க வேறு வழிகளைத் தேடினாலும் விதியே எம்முன் வந்து நிற்கும். கடன் பெற்ற ஒருவர் கோவிலுக்குச் சென்று இறைவனை வேண்டலாமென்று சென்றால் அங்கே கடன் கொடுத்தவன் நிற்பான். உங்களை எடுத்துப்பாருங்கள் கப்பலைக் கடலில் கொண்டு செல்லக் கூடாதென்று மாலுமி சொன்னதைக் கேட்டீர்களா? இல்லையே. பாடசாலைக்குக் கட்டிடம் கட்டித் தருவதாகக் கூறிய சிவசிதம்பரத்தை அதிபரும், ஆசிரியர்களும் சந்திக்கச் சென்ற போது அவர் திடீரென்று மாரடைப்பால் இறந்துபோனார். இப்படி இவ்வூரில் நடந்த பல சம்பவங்களைக் கூறலாம். எமது கரும பயனுக்கேற்பவே எமக்குப் பிறப்பு அமைகிறது. கரும பயன்படி இறைவன் கர்ப்பப்பைகளை தேர்ந்தெடுப்பதே எமது விதி. இறைவனால் அமைக்கப்பட்ட விதியை வெல்ல யாராலும் முடியாது. அதை அனுசரித்துத் தான் வாழ வேண்டும் என்று கதிரேசன் கூறினார்” என்றது குமரன் எலி.

“இறைவனுக்கே சவால்விடும் மனிதர்கள் அவற்றை உணராமைக்கும் விதி தான் காரணம்” என்றது லட்சுமி எலி.